# நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு

# முன்னேற்ற அறிக்கை 2024

12 ஆம் மாடி, செத்சிறிபாய, கட்டம் II, பத்தரமுல்லை.

# நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு கௌரவ அமைச்சர் அவர்களின் செய்தி



ஒவ்வொரு பிரசையும் முறையான மற்றும் திட்டமிடப்பட்ட கிராமிய மற்றும் நகர்ப்பு சூழலில் தரமாக பூர்த்தி செய்யப்பட்ட சுகாதார ரீதியில் பாதுகாப்பான மற்றும் வசதியான வீடொன்றில் திருப்திகரமாக வாழ்வது நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் நோக்கமாகும். மேற்படி நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக பல்வேறு வகையிலான 19 நிறுவனங்கள் எமது அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றன.

பல்வேறு நிதிசார் மற்றும் ஏனைய அசௌகரியங்களுக்கு மத்தியிலாயினும் 2024 ஆம் ஆண்டில் எமது அமைச்சு வினைத்திறனும், தரமானதுமான சேவையை நிறைவேற்றுவதற்காக திறைசேரியின் ஏற்பாடுகள், வெளிநாட்டு உதவி, கடன் மற்றும் அவ்வவ் நிறுவனங்களின் சுய உருவாக்க ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு வந்தது.

நாட்டின் இன்றைய பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்குரிய அரசின் கொள்கையான ‘‘வளமான நாடு அழகான வாழ்க்கை’’இனை பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு என்ற வகையில் சாட்டுதல் செய்யப்பட்டுள்ள செயற்பணி இலகுவானதல்ல. அரச நிதிசார் தடைகளுக்கு மத்தியிலாயினும், நிலைபேறான நகர அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு தற்போதைய அரசு எதிர்பார்த்துள்ளதுடன், இதன் போது எமது பிரசைகளின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ‘‘வசதியான வீடு துப்பரவேட்பாடுமிக்க வாழ்க்கை’’ஐ ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் கூடுதல் பெறுமதியைப் பெற்றுக் கொடுப்பதும், மக்களின் குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், நிர்மாணத்துறையின் செயற்பணியை ஒழுங்குறுத்தல், செலவினத்தைக் குறைத்தல், நுட்ப முறைகளை பயன்படுத்துவதன் மூலம் இந்த அமைச்சின் எதிர்கால திட்டங்களை வடிவமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னுரிமை செயற்பணியான நகரத் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தலின் கீழ் அபிவிருத்தித் திட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், 2024 ஆண்டு நூறு நகரங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக நகர அபிவிருத்திக் கருத்திட்டங்களை திட்டமிடுவதற்கு மற்றும் அவற்றை அமுல்படுத்த திட்டமிடப்பட்டது.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுகின்ற நகர மற்றும் கிராமிய மக்களுக்கு இலவசமாக அல்லது நியாயமான விலையில் ஒரு வீட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன அமுல்படுத்திய கருத்திட்டங்களின் கீழ் 5258 வீடுகளை பூர்த்தி செய்ய இயலுமாயிற்று.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களின் மூலம் குறைந்த வருமானம் பெறுகின்ற நகர்ப்புற மக்களுக்கு வீடமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் நகர புத்தெழுச்சிக் கருத்திட்டமும் நகரக் குடிசைகள் மற்றும் சேறிகளில் வாழும் மக்களின் வீடமைப்புச் சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்காக சீனாவின் உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள பேலியகொட, தெமடகொட, மஹரகம, மொரட்டுவை மற்றும் கொட்டாவ ஆகிய பிரதேசங்களில் வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணிக்கும் பணிகளை எமக்கு ஆரம்பிக்க முடிந்தது. கிராமிய மக்களை இலக்காகக் கொண்டு அமுல்படுத்தப்பட்டுள்ள இந்திய மற்றும் இலங்கை வீடமைப்புக் கருத்திட்டங்களின் கீழ் ஒரு சில மாதிரிக் கிராமங்களை பொது மக்களிடம் கையளிக்க முடிந்தமை எமது அமைச்சு பெற்றுக் கொண்ட வெற்றியாகும்.

சகல மக்களினதும் சுத்தமான குடிநீர்த் தேவையை உறுதி செய்து நிலைபேறான நீர் மற்றும் துப்பரவேட்பாட்டுத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை, சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்ற சேவையானது நகர மற்றும் கிராமிய மக்கள் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் கொழும்பு மற்றும் அண்மித்த நகர்ப்புறங்களில் சதுப்புநிலம் முகாமைத்தவம், நகர வெள்ள முகாமைத்துவம் மற்றும் மழை நீர் அகற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் நிர்மாணத் துறையின் கொள்ளளவு அபிவிருத்தி, ஒப்பந்ததாரர்களை ஒழுங்குறுத்தி தரமான சேவையை நாட்டுப் பிரசைகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையும், கட்டிடக் கலைசார் மற்றும் பொறியியல்சார் ஆக்கங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கட்டிடங்கள் திணைக்களமும், இயந்திரப் பொறியியல் உற்பத்திகள் மற்றும் சேவை நடவடிக்கைகளுக்கு அரச தொழில்சாலைகள் திணைக்களமும் நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்காக விசேட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

வளமான நாடு அழகான வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகின்ற வசதியான மற்றும் துப்பரவேட்பாடுமிக்க ஒரு வீட்டை ஒவ்வொரு பிரசைக்கும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக அடுத்துவரும் ஆண்டில் எமது அமைச்சின் சகலரும் கூட்டாகவும், பொறுப்புடனும், வகைப்பொறுப்புக்கூறலுடனும் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். மேலும், விஞ்ஞான ரீதியான நிர்மாணத்துறையின் தரமான மற்றும் தொழில்சார் சேவைகளில் ஈடுபடுவதை ஏற்படுத்துவதற்குத் தேவையான தரநியமங்களை அறிமுகம் செய்வதற்கும் அவற்றை ஒழுங்குறுத்துவதற்கும், அத்துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை அடுத்த ஆண்டில் முன்னெடுக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். அவ்வாறே, எதிர்காலத்தில் நிர்மாணத்துறையின் செலவினங்களைக் குறைத்தல், சுற்றாடல்சார் தாக்கங்களை குறைத்தல், வினைத்திறன்மிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு கூடுதல் கவனம் செலுத்தி, நகர அபிவிருத்தித் தேவைகளை சரியாக இனங்கண்டு சமுதாயத்தினரின் பங்கேட்புடன் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சவால்களை வெற்றிகொள்வதற்காக கூட்டாக முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும் என்பதுடன் இந்த அமைச்சின் அபிவிருத்தி மற்றும் சமூக சேவைகளை வழங்குவதற்கு பங்காளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் ஒத்துழைப்பு மற்றும் ஆப்பணிப்பு மற்றும் நீண்டகால எதிர்கால நோக்கு எதிர்காலத்தில் மென்மேலும் அத்தியாவசியமாக அமையும்.

அமைச்சின் அடிப்படை நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக ஒத்துழைப்பு வழங்கியமைக்காக கௌரவ சனாதிபதி, பிரதம அமைச்சர், பிரதி அமைச்சர்கள், செயலாளர் உள்ளிட்ட சகல பதவியணியினர் மற்றும் சகல பங்காளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இதுவரை வழங்கிய ஒத்துழைப்பை எதிர்காலத்திலும் எதிர்பார்க்கின்றேன்.

அநுர கருணாதிலக்க (பா.உ.)
அமைச்சர்
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு

# கௌரவ வீடமைப்பு பிரதி அமைச்சரின் செய்தி



இலங்கையில் நீண்ட காலமாகக் காணப்பட்டு வந்த கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளை மாற்றியமைத்து புதிய திசையை நோக்கி தாய் நாட்டை வழிப்படுத்தும் பணியை ஆரம்பித்து 2025 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டக் குழு நிலைக்கு எமது அமைச்சினூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற வெளியீட்டுக்கு செய்தியொன்றை வெளியிடக் கிடைத்ததை பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

பல்வேறு முகாமைத்துவப் பலவீனங்களின் காரணமாக நாடு கடும் பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் சரியான பாதையில் பயணிக்கச் செய்வதற்காக ஒட்டுமொத்த நாட்டு மக்களும் மேற்கொண்ட அச்சமற்ற உறுதியான நடவடிக்கை தொடர்பில் எனது கௌரவத்தையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது புதிய அரசாங்கத்தின் கொள்கையான "வளமான நாடு, அழகான வாழ்க்கை" மக்களினால் அடையப்பெறுவதற்கான குறிக்கோளுடன் "வசதியான வீடு, ஆரோக்கியமான வாழ்க்கை" இனை உருவாக்கிக் கொடுக்கும் உறுதிப்பாட்டுடன் சரியான பாதையில் வழிப்படுத்தும் பணியின் போது, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் வீடமைப்பு விடயம் சம்பந்தமான செயற்பணி என்னிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசின் கொள்கைகளை வழிப்படுத்துவதற்கான வசதிகளை செய்துகொடுப்பதற்காக தற்பால நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்தல் மற்றும் நிதியைப் பெற்றுக் கொடுப்பதை நியாயமானதாக்கிக் கொள்ளும் முறையான, புதிய வேலைத்திட்டத்திற்கு இணங்க சகல அரச நிறுவனங்களிலும் அடுத்த ஆண்டுக்கு செயற்படும் போது அரச ஊழியர்கள் சரியான பாதையில் நின்றவாறு மென்மேலும் வினைத்திறனும், விளைதிறனும்மிக்க முறையியலை பின்பற்றுவது உகந்தது என்பது எமது நம்பிக்கையாகும்.

நகரமயப்படுத்தலை அடுத்து இலங்கையின் ஒவ்வொரு நகரிலும் குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் வீடமைப்புச் சிக்கல் மிக உக்கிரமடைந்துள்ளது. கொழும்பு நகரத்தில் மாத்திரம் சுமார் 65000 குடிசைகள் மற்றும் தோட்ட வீடுகள் சுமார் 1000 ஏக்கர் நிலப் பிரதேசத்தில் பரந்து காணப்படுகின்றன.

இங்கு வசிக்கின்ற மக்கள் ஆட்சியிலிருந்த முன்னைய அரசுகளினால் புறக்கணிப்புச் செய்யப்பட்டார்கள் என்பதுடன், குறைந்த வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கு நீர், மின்சாரம், துப்பரவேட்பாட்டு வசதிகள் மற்றும் சுத்தமான வளி இல்லாமை காரணமாக அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. மேலும், தாமே நிர்மாணித்த

வீட்டைக் கொள்வனவு செய்தல், வாடகை வீடுகளில் வாழ்தல் போன்ற பல்வேறு விதமாக வாழும் மக்களை நகரத்தில் அவதானிக்க முடியும். எனினும் மக்களின் வருமான நிலைமைக்கு அமைய ஒரு வீட்டை நிர்மாணித்தல், கொள்வனவு செய்தல் அல்லது வாடகைக்கு குடியிருப்பது சிக்கலானதாகும். குறிப்பாக ஒரு சில அரச அலுவலர்கள் வடிடகை அடிப்படையில் வசித்துவருகின்ற போதிலும் மேற்படி வாடகையை செலுத்துமளவுக்கு வருமானம் இல்லாமை பாரிய சிக்கலொன்றாகும். கிராமிய வீடுகள் தொடர்பில் கூடுதல் கவனத்தை அரசாங்கம் செலுத்தாத போதிலும், கிராமிய பிரதேசங்களிலும் வீடமைப்புச் சிக்கல் காணப்படுகின்றது. ஒரு சில குடும்பங்களுக்கு காணிகள் உள்ள போதிலும் அக்காணிகளின் உரித்து பற்றிய சிக்கல், இடம்சார் அமைவிடம், வீதி வசதிகள் இல்லாமை, கட்டிடப் பொருட்களின் அதிக விலை, நிரந்தர வருமானம் இல்லாமை மற்றும் வருமானம் போதியதாக இல்லாமை ஒரு வீட்டை நிர்மாணிக்கும் போது கிராமப்புற மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்களாகும்.

இலங்கையில் கிராமிய சனத்தொகையில் சுமார் 2% ஆனோர் தோட்டத்துறை வீடுகளில் வசிக்கின்றார்கள் என்பதுடன், மத்திய, ஊவா, சபறகமுவா மற்றும் தென் மாகாணங்களில் பரவலாக இதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவர்களில் பெரும்பாலான தோட்டத்துறையை சார்ந்ததாக வாழும் மக்கள் மிகச் சிறியளவிலான குறைந்த வசதிகளைச் கொண்ட லயம் அறைகளில் வாழ்ந்துவருவதை அவதானிப்புச் செய்ய முடியும். இக்குடும்பங்களில் உப குடும்பங்களும் இணைந்ததை அடுத்து பாரிய சமூக சிக்கல்கள் எழுந்துள்ளன. மேலும் காணி வழங்கப்படுகின்ற போதிலும் ஒரு வீட்டை நிர்மாணித்துக் கொள்ளுமளவுக்கு வருமான மட்டம் அவர்களுக்கு இல்லாமை காரணமாக மிகக் குறைந்த வசதிகளின் கீழ் வாழ்க்கையைப் பேணிவருவதன் காரணமாக காணப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட இடவசதிகளை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்து மற்றும் மக்களின் தேவைகளைக் கவனத்தில் கொண்டு முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தொடர்மாடி வீடுகளை நிர்மாணிப்பது எமது அரசின் நோக்கமாகும்.

புதிய திசையை நோக்கிய பாதையில் அரசின் கொள்கைகளை அவ்வாறே அமுல்படுத்தி மக்களுக்கு ''வசதியான வீடு, ஆரோக்கியமான வாழ்க்கையை'' அடைந்திடச் செய்யும் நோக்கத்தை அடைந்துகொள்ளும் பாரிய பணிக்கு என்னுடன் இணைந்து செயற்படுகின்ற அமைச்சர், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

ரீ.பீ. சரத் (பா.உ.)
வீடமைப்பு பிரதி அமைச்சர்
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு

# நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் செய்தி



2025 வரவு செலவுத்திட்ட குழு நிலையின் போது சமர்ப்பிப்பதற்காக தயார் செய்யப்படுகின்ற ‘‘2024 இன் முன்னேற்ற அறிக்கைக்கு’’ வாழ்த்துக்களை வெளியிட வாய்ப்புக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் அன்றாட சேவைகளை ஆற்றுகின்ற மற்றும் பிரதான பொறுப்புக்களைக் கொண்டுள்ள பல நிறுவனங்கள் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. தற்போது காணப்படுகின்ற நகரமயமாக்கலின் சிக்கலான நிலைமைக்கு மத்தியில் நகரக் குடியிருப்புமயமாக்கலுடன் எழுந்துள்ள சிக்கல்களுக்கு சர்வதேச தரநியமங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பத்துக்கு அமைய புதிய நகரத் திட்டங்களை தயார் செய்வது முக்கிய பணியொன்றாக மாறியுள்ளது.

‘‘நல்லமுறையில் திட்டமிடப்பட்டு பாதுகாக்கப்பட்ட மனங்கவர் நகரமயமாக்கல்’’ இற்கு நகர்ப்புற அதிகாரப் பிரதேசத்துக்குள் பொருளாதார, சமூக, கலாசார, சுற்றாடல்சார் மற்றும் பௌதீக ரீதியான கூட்டு அபிவிருத்தி திட்டத்தை தயார் செய்து மற்றும் மேற்படி திட்டத்ஜ அமுல்படுத்தி விசேடமான பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த ஆண்டினுள் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் நூறு நகரங்கள் அபிவிருந்ததி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உயர் மட்டத்திலான நிதிசார் முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளதை பாராட்டுகின்றேன். மேலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் மக்களுக்கு சேவையாற்றுகின்ற பொது நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் பாரியளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோரின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வீடமைப்புக் கடன் மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், வீடமைப்பு அபிவிருத்திக்குத் தேவையான காணிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் மக்களுக்கு நிரந்தரமான, சுகாதார ரீதியில் பாதுகாப்பான வீடொன்றைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற பாரியதொரு செயற்பணி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட திறைசேரியின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக சுயஉருவாக்க மற்றும் செவண உதவித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு வீடமைப்புக் கடன் மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் பயனாளிக் குடும்பங்கள் 3000 இற்கும் மேற்பட்டவர்களுக்கு வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் ஆகியன இணைந்து நகர மற்றும் பகுதியளவிலான நகர்ப்புறப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு, துப்பரவேட்பாட்டு நடவடிக்கைகளைப் பெற்றுக் கொடுத்து அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்களாகும்.

நிர்மாணத் தொழில்துறைக்குத் தேவையான ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகள் மற்றும் புதிய கலைஞர்களை பயிற்றுவிப்பதற்கான பாடநெறிகளை அமுல்படுத்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியத் தேவைகளை பூர்த்தி செய்தல் போன்ற பாரியளவிலான செயற்பணி நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கட்டிடங்களை திட்டமிடல், நிர்மாணிப்புக்களை மேம்படுத்தல் மற்றும் பராமரிப்புச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள கட்டிடங்கள் திணைக்களமானது நிர்மாணத்துறையில் ஆற்றிவருகின்ற சேவையை நான் உயர்வாக மதிக்கின்றேன். அரச தொழில்சாலைகள் திணைக்களம் ஊடாக காய்ச்சி ஒட்டுதல் மற்றும் வார்ப்புச் சேவைகள் வழங்கப்பட்டு வருவதுடன், இயந்திரப் பொறியியல்சார் புதிய உற்பத்திகள் அறிமுகம் செய்யப்பட்டு பெற்றுக் கொடுக்கும் பங்களிப்பும் பாராட்டப்படல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ அதிகாரசபை, ஓசன் வீவ் டிவலபர்ஸ் பிரைவட் கம்பனி ஆகிய நிறுவனங்கள்இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய செயற்பணியை நிறைவேற்றி வழங்கிவரும் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும்.

கொழும்பு மற்றும் நகர்ப்புற பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக மழைநீர் வடிகாலமைப்பு, சதுப்புநில முகாமைத்துவம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பற்றிய நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 2024 ஆம் ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட திறைசேரியின் ஏற்பாடுகளினூடாக உச்சளவான பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தை அடைந்துகொண்டுள்ளதுடன், உள்ளக ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு மேற்கொண்டுள்ள கரைகடந்த மணல் கருத்திட்டம் மற்றும் கெரவலபிட்டி கழிவுப்பொருட்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் தொடர்பிலும் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அமைச்சுக்கு வழிகாட்டுவதுடன், தலைமை தாங்குகின்ற நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு கௌரவ அமைச்சருக்கும், கௌரவ வீடமைப்பு பிரதி அமைச்சருக்கும் மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளினூடாக வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைந்துகொண்டுள்ளமை தொடர்பில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களின் பதவியணியினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரஞ்ஜித் ஆரியரத்ன
செயலாளர்
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| 01 | நிறுவனத் தோற்றப்பாடு | 1-3 |
| 02 | நகர அபிவிருத்தி அதிகாரசபை | 4-12 |
| 03 | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 13-20 |
| 04 | இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | 21-25 |
| 05 | கட்டிடங்கள் திணைக்களம் | 26-28 |
| 06 | அரச தொழில்சாலைகள் திணைக்களம் | 29-33 |
| 07 | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | 34-36 |
| 08 | நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 37-40 |
| 09 | நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 41-43 |
| 10 | கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ அதிகாரசபை | 44-45 |
| 11 | ஓசன் வீவ் அபிவிருத்தித் தனியார் கம்பனி | 46-47 |
| 12 | ஹொடெல் டிவலபர்ஸ் (லங்கா) லிமிட்டட் | 48-49 |
| 13 | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 50-53 |
| 14 | இலங்கை பொறியியலாளர்களின் பேரவை | 54-55 |
| 15 | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை | 56-60 |
| 16 | தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் | 61-64 |
| 17 | கலம்பு லோட்டஸ் ரவர் மெனேஜ்மன்ட் கம்பனி தனியார் கம்பனி | 65-69 |

18 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியின் பேரில் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள்

18.1 அநுராதபுரம் இணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம் **70-72**

18.2 மேற்குப் பிராந்திய மாநகர பிரதான திட ்டம், கிழக்கு மாகாண உபாயமுறையிலான சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி வதற்கான பிரதான திட்டம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டக்கிற்கான பிரகான கிட்டக்கை கயார் செய்யும் கருக்கிட்டம **73-74**

18.3 கொழும்பு நகர புத்தெழுச்சிக் கருத்திட்டத்திற்கு உதவும் ருத்திட்டம் **75-81**

18.4 நகரக் கருத்திட்டங்களை தயார் செய்வதற்கு வசதிகளை செய்வதற்கான நிலைபேறான சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டம் **82-83**

18.5 நகரப் புத்தெழுச்சிக் கருத்திட்டம் **84-85**

18.6 கொழும்பு நகரத்தை மையமாகக் கொண்ட திண்மக் கழிவுப் பொருள் **86-87**

18.7 சீன அரசின் உதவியின் பேரில் குறைந்த வருமானம் ஆட்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் கருத்திட்டம் **88-89**

19 அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்

19.1 நீர் வழங்கல் பிரிவு மற்றும் அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் **90-90**

19.1.1 நீர் வழங்கல் மற்றும் துப்பரவேட்பாட்டு மேம்படுத்தல் கருத்திட்டம் **(WaSSIP)** **91-92**

19.1.2 நீர் தொழில்நுட்பத்துக்கான இணைந்த ஆராய்ச்சி மற்றும் மாதிரி நிலையம் **(JRDC)** **93-94**

19.1.3 அபிவிருத்தி பிரிவினால் (நீர் வழங்கல்) அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் **94-95**

19.2 இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் பிரிவு **96-96**

19.2.1 நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் கருத்திட்டம் **97-98**

19.3 மலையக தசாப்தம் - பதின்ம பல்வகை அபிவிருத்தி நிகம்ச்சிக்கிட்டம் **99-100**

19.4 இந்திய உதவித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள **101-101**

19.4.1 "மன்னார் மடுமாதா தேவாலய வளவில் தங்குமிட இல்லங்களை" நிர்மாணிக்கும் கருத்திட்டம்

19.4.2 சங்கைக்குரிய சோபித்த மகாநாஹிமி மாதிரிக் கிராமம்

# 01 நிறுவனம்சார் தோற்றப்பாடு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023 சனவரி 19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 2315/34 மற்றும் 2023 மே 30 ஆம் திகதிய 2334/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, 2023 யூன் 07 ஆம் திகதிய 23/1097/604/110 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் 04 திணைக்களங்கள் மற்றும் 10 நியாயாதிக்க நிறுவனங்களை உள்ளடக்கியதாக 14 நிறுவனங்களைக் கொண்டுள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தாபிக்கப்பட்டது.

இதனை அடுத்து 2024.11.18 ஆம் திகதி வெளியிடப்பட்ட 999/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கு அமைய இந்த அமைச்சு நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு எனத் தாபிக்கப்பட்டதுடன், தற்போது அமைச்சின் கீழ் 04 திணைக்களங்கள் மற்றும் 13 நியாயாதிக்க நிறுவனங்கள் உள்ளடங்களாக காணப்படுகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 17 ஆகும்.

2024.11.28 ஆம் திகதி வெளியிடப்பட்ட 999/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கு அமைய வீடமைப்பு விடயத்துக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு தாபிக்கப்பட்டிருப்பது மேற்படி விடயத்துறை தொடர்பிலான கொள்கைகள், உபாயமுறையிலான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் பின்னாய்வு செய்வதற்காகவாகும்.

அரசினால் அமுல்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கைகளின் அடிப்படையில் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு ஆகிய விடயப்பரப்புக்கள் தொடர்பில் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயத்துறை தொடர்பான கொள்கைகள், உபாயமுறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வது இந்த அமைச்சின் செயற்பணியாகும்.

## நோக்கு

"அழகிய நகரம் மற்றும் சொகுசான வாழ்க்கை"

## செயற்பணி

நகர அபிவிருத்தியை முறைப்படுத்தல், வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், பௌதீக திட்டமிடல், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி, நீர் மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகளுக்கான பிரவேசத்தை உறுதி செய்தல், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் சதுப்புநில முகாமைத்துவம், காணி அபிவிருத்தி மற்றும் கூட்டாட்சி ஆதன முகாமைத்துவதற்கான கொள்கைகளை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதன் ஊடாக மக்களுக்கு அழகான நகரம் மற்றும் சொகுசான வாழ்க்கைக்கான பிரவேசத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

## பணிகள்

1. அரசினால் அமுல்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கைகளின் அடிப்படையில் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு ஆகிய விடயங்கள் தொடர்பில் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் அரசக் கூட்டுத்தாபனங்களின் விடயப்பரப்புக்கள் சம்பந்தமான கொள்கைகள், உபாயமுறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல், பின்னாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. அமைச்சின் விடயப்பரப்புக்கு உரித்தான மக்கள் சேவைகளை வினைத்திறனுடனும், மக்களுக்கு சாதகமானவாறும் நிறைவேற்றுதல்.
3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்து அமைச்சின் செயற்பணியை நிறைவேற்றுவதை உறுதி செய்யக் காரணமாக அமைகின்றவாறு நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சகல முறைகள் மற்றும் வழிமுறைகளையும் மறுசீரமைத்தல்.
4. மாநகரங்கள், உப நகரங்கள் மற்றும் அண்மித்த நகரங்களை திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
5. நகர்ப்புறப் பிரேசங்களில் தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் வீடமைப்புக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவித்தல் மற்றும் இந்த முயற்சிக்கு உகந்த காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
6. நகர்ப்புற திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் பொறுப்பற்ற முறையில் கழிவுகளை அகற்றுவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
7. தேசிய பௌதீக திட்டங்கள் மற்றும் பிராந்திய பௌதீக திட்டங்களை தயார் செய்தல்.
8. கூட்டாட்சி ஆதன முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகள்.
9. நகர்ப்புறப் பிரதேசங்களில் அமைந்துள்ள சேவைகள் மற்றும் வசதிகள் குறைவான பிரதேசங்கள் மற்றும் சதுப்பு நிலங்களை பொதுவான திட்டமொன்றின் கீழ் அபிவிருத்தி செய்தற்குத் தேவையான வழிகாட்டல்கள்.
10. அரச உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான தரநியமங்கள் மற்றும் அளவைகளை நிர்ணயித்தல்.
11. குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் உள்ளடங்களாக மக்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் வீடமைப்பு நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
12. அரச நிறுவனங்களுக்கு இயந்திரப் பொறியியல் சேவைகளை வழங்குதல்.
13. குறித்த சட்டங்கள், விதிகள் மற்றும் தரநியமங்களுக்கு அமைய நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல், பதிவு செய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்தல்.
14. கட்டிடப் பொருட்களின் கைத்தொழிலை மேம்படுத்தல்.
15. ஒவ்வொரு பிரசைக்கும் சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிகைகைகளை மேற்கொள்ளல்.
16. நீர் வழங்கல் சேவைகள், வடிகாலமைப்பு மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகள் பற்றி ஆராய்ந்துபார்த்து அது பற்றிய புதிய திட்டங்களை தயார் செய்து அமுல்படுத்தல் மற்றும் பராமரிப்பு.

## அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நியாயாதிக்க நிறுவனங்கள், கருத்திட்டங்க்ள மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

### திணைக்களங்கள்

1. தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்
2. கட்டிடங்கள் திணைக்களம்
3. அரச தொழில்சாலைகள் திணைக்களம்
4. தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்

### நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்

1. நகர அபிவிருத்தி அதிகாரசபை
2. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
3. ஹோட்டல் டிவலப்பர்ஸ் (லங்கா)தனியார் கம்பனி (PQ 143)
4. கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ அதிகாரசபை (பொது வசதிகள் சபை)
5. இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் கீழ் நிறுவகிக்கப்படுகின்ற கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள்
6. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

7. வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்
8. நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
9. ஓசன் வீவ் அபிவிருத்தித் தனியார் கம்பனி
10. அரச பொறியியல் கூட்டுத்தாபனம்
11. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
12. இலங்கை பொறியியலாளர்களின் பேரவை
13. கலம்பு லோட்டஸ் ரவர் மெனேஜ்மன்ட் கம்பனி தனியார் கம்பனி

## கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

1. அநுராதபுரம் இணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
2. மேற்குப் பிராந்திய மாநகர பிரதான திட்டம், கிழக்கு மாகாண உபாயமுறையிலான சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கான பிரதான திட்டம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான பிரதான திட்டத்தை தயார் செய்யும் கருத்திட்டம்
3. கொழும்பு நகர புத்தெழுச்சிக் கருத்திட்டத்திற்கு உதவும் கருத்திட்டம்
4. சீன அரசின் உதவியின் பேரில் குறைந்த வருமானம் பெறும் ஆட்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் கருத்திட்டம்
5. கொழும்பு நகரத்தை மையமாகக் கொண்ட திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம்
6. நகரக் கருத்திட்டங்களை தயார் செய்வதற்கு வசதிகளை செய்வதற்கான நிலைபேறான சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டம்
7. நகரப் புத்தெழுச்சிக் கருத்திட்டம்
8. நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் அலகு

# 02 நகர அபிவிருத்தி அதிகாரசபை

## 2.1 அறிமுகம்

இலங்கையின் நகர்ப்புற திட்டமிடலையும் அத்தகைய திட்டங்களையும் அமுல்படுத்தும் உச்சமட்ட நிறுவனமான நகர அபிவிருத்தி அதிகாரசபை, நாட்டின் நகர்ப்புறச் சூழல்களின் நிலைமையை முகாமை செய்யும் பொறுப்பையும் வகிக்கின்றது.

நகர அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பிரகடனம் செய்யப்படும் பகுதிகளில் பொருளாதார, சமூக, பௌதிக அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த திட்டங்களை வகுத்தமைப்பதுடன் அமுல்படுத்தும் நோக்கில் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்த்தினால் நகர அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது. நிதி ரீதியில் சுயாதீனமான, உலகளாவிய அளவில் உயர் அங்கீகாரம்ட பெற்றுள்ள உருவாக்குநரொருவர் என்ற வகையில் முழுமையடைந்த, பேண்தகு நகர்ப்புற நிலையங்களைக் கட்டியெழுப்பும் பொருட்டு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தமைத்தல், ஊக்குவித்தல், அமுல்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முக்கிய நோக்கங்களாகும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் மூன்று இணைக் கம்பனிகளும் இரண்டு துணைக் கம்பனிகளும் உள்ளன.

**நகர அபிவிருத்தி அதிகாரசபையின் இணைக் கம்பனிகள்**

- **நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி தனியார் கம்பனி (UNIDEP)**

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பூரண உரித்துடைய இணை நிறுவனமொன்றாக 2006 ஆகஸ்ட் மாதத்தில் இக்கம்பனி நிறுவப்பட்டது. அதிகாரசபையினால் நேரடியாகவே மேற்கொள்ளப்படும் நகர்ப்புறங்களில் எந்தவொரு விதமான அபிவிருத்திக் கருத்திட்டத்தையும் அபிவிருத்திசெய்தல், கட்டியெழுப்புதல், செயற்படுத்துதல் ஆகியன இக்கம்பனி நிறுவப்பட்டதன் நோக்கமாகும். இன்று அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், சில அமைப்புக்களுக்கு வசதியளிக்கும் செத்சிறிபாய கட்டம் II கட்டிடத்தையும் அதன் சுற்றயல் பகுதியையும் வழிப்படுத்தி முகாமை செய்யும் பொறுப்பை இந்நிறுவனம் வகிக்கிறது. வினைத்திறனான விதத்திலும் பயன்கூர் விதத்திலும் ஆதனங்களை முகாமைசெய்வதற்கு சுயாதீன பணிப்பாளர் சபையொன்றினால் நிர்வகிக்கப்படும் தனியான ஒரு சுயாதீன நிறுவனமாக இக்கம்பனி இயங்குகிறது.

- **வோட்டர்ஸ் எட்ஜ் தனியார் கம்பனி**

உயர்நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிமைமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆதனங்களை முகாமை செய்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அதிகார சபையின் பூரண உரித்துள்ள இணை நிறுவனமொன்றாக வோட்டர்ஸ் எட்ஜ் தனியார் கம்பனி 2009 பெப்ரவரி மாதத்தில் கூட்டிணைக்கப்பட்டது. இன்று இக்கம்பனி ஒரு ஹோட்டலையும் உணவுச்சாலையொன்றையும், ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளையும் கொண்டதாக உள்ளது. அது, தனித்து தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் செயன்முறையொன்றில் ஈடுபடுவதில்லை. மாறாக, அரச மற்றும் தனியார் தொழில்முயற்சிகளுடன் ஒத்துழைத்து தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தும் செயன்முறையொன்றில் அது ஈடுபட்டு வருகிறது.

- **லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிட்டட்**

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ரெஸ்ட் ஹவுஸ் லிமிட்டட் 2006 யூன் மாதத்தில் நிறுவப்பட்டது. 2010 நவம்பர் மாதத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைச் சபைத் தீர்மானமொன்றின் மூலம் அதன் பெயர் ‘லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிட்டட்’ என்று திருத்தப்பட்டது. குறிப்பாக அரச ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் பாதுகாப்பானதும்

சௌகரியமானதுமான இருப்பிடங்களை மலிவு விலைக்கு வழங்குவது இக்கம்பனியின் முக்கிய நோக்கமாகும். லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிட்டட் நாடுபூராவும் மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் 31 ஓய்வு விடுதிகளை நிறுவி நிர்வகித்து வருகிறது. அவற்றில் 29 ஓய்வு விடுதிகள், கேள்வி விலைகோரல் மூலம் தெரிவுசெய்த மூன்றாம் தரப்புகளினால் நிர்வகிக்கப்படுகின்றன. மஹியங்கனை, பதுளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள எஞ்சிய 02 ஓய்வு விடுதிகளும் லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிட்டட் நிறுவனத்தினால் நேரடியாக நிர்வகிக்கப்படுகின்றன.

### நகர அபிவிருத்தி அதிகாரசபையின் துணைக் கம்பனிகள்

- **ஓஷன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி** (Ocean View Development Company Pvt Ltd)

ஓஷன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி 80களில் நிறுவப்பட்டது. இக்கட்டிடத்தில் 44 வீட்டு அலகுகளும் மேல் மாடியில் 15 ஒலிபரப்புக் கோபுரங்களும் அமையப்பெற்றுள்ளன. இது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு தனியார் கம்பனியாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. பின்பு அக்கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இக்கம்பனியின் பங்குகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கூட்டாக உரித்தாகின்றன. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பங்குகளின் அமைப்பு, இக்கம்பனியில் 43.39% ஆகும்.

- **ஒனலி ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி**

இது, இலங்கையைத் தளமாகக்கொண்ட அசையா ஆதன முதலீட்டிலும் ஆதன அபிவிருத்தியிலும் ஈடுபட்டு வரும் ஒரு கம்பனியாகும். முதலீட்டு ஆதனங்களை வாடகைக்கு விடுவதன்மூலம் இக்கம்பனி இயங்குகிறது. கொழும்பில் அமைந்துள்ள யுனிடி பிளாஸா கட்டிடம் இக்கம்பனியின் ஒரு முதலீட்டு ஆதனமாகும். யுனிடி பிளாஸா கட்டிடத்தின் வாடகைக்கு விடக்கூடிய இடப்பரப்பின் அளவு (இலங்கை வங்கி வளவு நீங்கலாக) சுமார் 76,955 சதுர அடியாகும். அது, 1982 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைமையகம் கொழும்பில் உள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபை வகிக்கும் பங்குகளின் அமைப்பு, இக்கம்பனியில் 44.801% ஆகும்.

## தொலைநோக்கு

திட்டமிட்ட, பேண்தகு, நலம் பாராட்டத்தக்க நகரமயமாக்கலை நோக்கி….

### பணிக்கூற்று

நகர அபிவிருத்தி அதிகார இடப்பரப்புகளுக்கான பொருளாதார, சமூக, சுற்றாடல், பௌதிக ரீதியாக ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடுதலும், அமுல்படுத்தலும், ஊக்குவித்தலும்.

## 2.2 தத்துவங்களும் பணிகளும் கடமைப்பொறுப்புகளும்

- பிரகடனப்படுத்திய அபிவிருத்திப் பகுதிகளில் ஒருங்கிணைந்த திட்டமிடலையும் பௌதிக அபிவிருத்தியையும் மேற்கொள்ளல், அபிவிருத்திச் செயற்பாடுகளும் சேவைகளும் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தலும் அமுல்படுத்தலும்.
- கைவிடப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் பூர்த்திசெய்தல்
- மூலதன முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்
- நகர்ப்புற காணிக் கையாளல் கொள்கையொன்றை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்
- சுற்றாடல்சார் நியமனங்களை அபிவிருத்திசெய்வதற்கும் சுற்றாடல்சார் முன்னேற்றல்களுக்கான திட்டங்களைத் தயாரித்தலும்.

- நகர்ப்புறங்களின் அபிவிருத்திக்கு ஏற்புடைய கட்டிடங்கள், பொறியியல் மற்றும் மதியுரை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அபிவிருத்தத் திட்டங்களுக்கு இசைவான கருத்திட்டங்களைத் திட்டமிடுதலும் அமுல்படுத்தலும்.
- பூர்த்திசெய்யப்படாத அனுமதிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் பூர்த்திசெய்தல்.
- நாட்டின் நகர அபிவிருத்திக்கு அசையும், அசையா ஆதனங்களை கையகப்படுத்திக்கொள்ளலும் கையுதிர்ப்புச் செய்தலும்.
- வீடமைப்பு முன்னேற்றக் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், அமுல்படுத்தலும் பிரகடனம்செய்த நகர்ப்புறங்களில் குறைந்த வருமானம் பெறுவோரின் குடியிருப்புகளை அகற்றுதலும் குறித்த விடுவிக்கப்பட்ட காணிகளை அபிவிருத்தி செய்தலும்.
- அரச நிறுவனங்களுக்கும் அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களுக்கும் அபிவிருத்தித் திட்டப் பிரேரணைகளையும் கருத்திட்டங்களையும் தயாரித்தலும் ஒருங்கிணைப்புச் செய்தலும் அமுல்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்.
- ஏனைய அரச நிறுவனங்களின் தேவைகளுக்காக தொழில்நுட்பத் திட்ட சேவையை வழங்குதல்.
- அதிகாரசபையினால் வழங்கப்படும் கட்டிடமொன்றுக்கான அல்லது சேவையொன்றுக்கான வாடகையொன்றை அல்லது கட்டணமொன்றை அறவிடல்.

## 2.3 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

➢ **“நூறு நகரங்கள்” நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நகராக்கல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

| # | கருத்திட்டப் பெயர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (மி.ரூ.) | நிதிஒதுக் கீடு – 2024 (மி.ரூ.) | 2024.12.31 வரையான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதிசார் முன்னே ற்றம் (மி.ரூ.) | திரண்ட பௌதிக முன்னேற்ற ம் (%) |
| 1 | நுவரெலியா நானுஓயாவை அண்டிய சூழல் இடைவழியை (corridor) அபிவிருத்தி செய்தல் | 127.70 | 5.00 | 776.68 | 100 |
| 2 | நிந்தவூர் கடலோரப் பூங்காவை நிர்மாணித்தல் (கட்டம் I) | 26.60 | 26.60 | | 100 |
| 3 | முல்லைத்தீவு பேருந்து நிலையத்தை நிர்மாணித்தல் (கட்டம் II) | 128.30 | 60.00 | | 100 |
| 4 | விசுவமடு பாரதீ மகா வித்தியாலயத்தின் உத்தேச வகுப்பறைக் கட்டிடம் | 21.28 | 2.00 | | 100 |
| 5 | கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலயத்தின் உத்தேச வகுப்பறைகளும் நூலகக் கட்டிடமும் | 20.89 | 1.00 | | 100 |
| 6 | அளவ்வ பொதுச் சந்தையின் அபிவிருத்தி (கட்டம் II) | 53.60 | 50.00 | | 100 |
| 7 | குருணாகல் ரஜபிஹில்ல நகரப் பூங்கா மீள் அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் II) | 204.21 | 10.00 | | 100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | வரக்காபொல பேருந்து நிலையம் (கட்டம் II) | 50.00 | 40.00 | | 100 |
| 9 | ஹோலுவாகொட சுற்றாடல் விவசாயப் பூங்கா (கட்டம் I, கட்டம் II) | 450.56 | 22.00 | | 100 |
| 10 | அவிசாவளை பொதுச் சந்தையின் அபிவிருத்தி | 167.60 | 30.00 | | 100 |
| 11 | கம்பஹா பொதுச் சந்தையின் அபிவிருத்தி (கட்டம் II) | 598.50 | 141.40 | | 68 |
| 12 | மினுவான்கொட பொதுச் சந்தை (கட்டம் III) | 50.00 | 30.00 | | 100 |
| 13 | பாணந்துறை சந்தை மற்றும் பல்நோக்குக் கட்டிடத்தின் அபிவிருத்தி | 539.20 | 140.00 | | 78 |
| 14 | உத்தேச ஹொரணை சந்தையைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் (கட்டம் IV) | 20.00 | 12.00 | | 100 |
| 15 | மதியுரைச் சேவைகளுக்காக | - | 30.00 | | - |
| **மொத்தம்** | | **2,458.44** | **600.00** | **776.68** | |

➢ **அரசு நிதி பயன்படுத்தப்பட்டு அரசு நிறுவனங்கள் ஊடக மேட்கொள்ளப்படும் திட்டங்கள்**

| # | கருத்திட்டப் பெயர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (மி.ரூ.) | நிதிஒதுக் கீடு – 2024 (மி.ரூ.) | 2024.12.31 வரையான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதிசார் முன்னே ற்றம் (மி.ரூ.) | திரண்ட பௌதிக முன்னேற்ற ம் (%) |
| 1 | அம்பாறை வார சந்தை அபிவிருத்தி | 294.33 | 55.50 | 512.00 | 52 |
| 2 | கேகாலை பேருந்து நிலையத்தை மீட்டளித்தல் | 444.00 | 222.90 | | 97 |
| 3 | மாலிபொட தோட்ட வீடமைப்புக் கருத்திட்டம் | 83.60 | 15.50 | | 35 |
| 4 | பத்தேகம உத்தேச பாதசாரிகள் நடைபாதை அபிவிருத்தி | 10.00 | 10.00 | | - |
| 5 | காலி-கராபிட்டிய கடைகள் நிர்மாணம் | 29.73 | 2.10 | | 100 |
| 6 | அளவ்வ உத்தேச வாகனங்கள் நிறுத்துமிடங்களையும் பாதசாரிகள் வசதிகளையும் அபிவிருத்திசெய்தல் (கட்டம் II) | 78.00 | 74.00 | | 95 |
| 7 | மதியுரைச் சேவைகளுக்காக | - | 20.00 | | - |
| **மொத்தம்** | | **939.66** | **400.00** | **512.00** | |

- **யாழ்ப்பாணம் நகர மண்டபத்தை மீட்டளித்தல**

| # | கருத்திட்டப் பெயர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (மி.ரூ.) | நிதிஒதுக் கீடு – 2024 (மி.ரூ.) | 2024.12.31 வரையான ம்னனேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதிசார் முன்னே ற்றம் (மி.ரூ.) | திரண்ட பௌதிக முன்னேற்ற ம் (மூ) |
| 1 | யாழ்ப்பாணம் நகர மண்டபத்தை மீட்டளித்தல் | 2,568.47 | 380.00 | 183.49 | 85 |
| 2 | மதியுரைச் சேவைகளுக்காக | - | 20.00 | - | - |
| **மொத்தம்** | | **2,568.47** | **400.00** | **183.49** | |

- **ஹோமாகம வலயத்தில் வீதி உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல் (தொழில்நுட்ப நகரம்)**

| # | கருத்திட்டப் பெயர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (மி.ரூ.) | நிதிஒதுக்கீ டு – 2024 (மி.ரூ.) | 2024.12.31 வரையான ம்னனேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதிசார் முன்னேற் றம் (மி.ரூ.) | திரண்ட பௌதிக முன்னேற்றம் (மூ) |
| 1 | ஹோமாகம வலயத்தில் வீதி உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல் (தொழில்நுட்ப நகரம்) | 942.00 | 480.00 | 349.52 | 98 |
| 2 | மதியுரைச் சேவைகளுக்காக | - | 20.00 | | |
| மொத்தம் | | **942.00** | **500.00** | **349.52** | |

- **நடுத்தர வருமானம்பெறுவோருக்கான வீடமைப்புக் கருத்திட்டம**

நடுத்தர வருமானம்பெறுவோருக்கு உகந்த வீடமைப்புக் கருத்திட்டங்களைத் தயாரித்தல், அமுல்படுத்தல், அத்தகைய கருத்திட்டங்களை முகாமைசெய்தல் போன்ற பணிகள் இப்பிரிவினால் ஆற்றப்படுகின்றன. இந்த திட்டங்கள் வணிக நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

| # | கருத்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் (மி.ரூ.) | பயனாளிகள் | நிதி ஒதுக்கீடு - 2024 | 2024.12.31 வரையான திரண்ட நிதிசார் முன்னேற்றம் (மி.ரூ.) | 2024.12.31 வரையான திரண்ட பௌதிக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| 1 | வியத்புர வீடமைப்புக் கருத்திட்டம் | 6,444.50 | 500 | 413.36 | 6,072.81 | 98 |
| 2 | கிறீன் ஆர்கேட் வீடமைப்புக் கருத்திட்டம் | 4,858.69 | 300 | 791.79 | 1,575.30 | 80 |
| 3 | எலியற் ரெசிடன்சீஸ் | 17,655.00 | 400 | 1,842.44 | 1,668.67 | 33 |
| 4 | மாலபே | 4,809.48 | 256 | 1,170.00 | 1,795.99 | 55 |
| 5 | மாகும்புற | 6,728.00 | 314 | 1,494.03 | 1,970.40 | 49 |
| 6 | பொரலெஸ்கமுவ | 3,225.22 | 120 | 835.72 | 405.99 | 18 |
| 7 | ஒருகொடவத்த 1 | 9,428.84 | 440 | - | 1,887.70 | 22 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | ஒருகொடவத்த 2 | 9,213.01 | 432 | - | 1,603.20 | 20 |
| 9 | ஸ்ரேடியம்கம | 4,920.49 | 210 | - | 825.00 | 23 |
| 10 | பேலியகொட 01 | 3,889.25 | 168 | - | 932.00 | 21 |
| 11 | பேலியகொட 02 | 8,957.06 | 384 | - | 1,628.00 | 18 |
| 12 | அநுராதபுரம் | 2,648.36 | 135 | - | 825.00 | 38 |

## 2.4 அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதன் முன்னேற்றம் - 2024

| # | அபிவிருத்தித் திட்டம் | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | மொணராகலை நகர அபிவிருத்தித் திட்டம் | 100% |
| 2 | ஹற்றன் நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 3 | கடுவலை நகர அபிவிருத்தித் திட்டம் | வர்த்தமானியின் மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதோடு, அச்சீட்டுப் பணிக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (96%) |
| 4 | பொல்கஹவெல நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 5 | கம்பஹா நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 6 | அம்பாறை நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 7 | குண்டசாலை நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 8 | நாவலபிட்டிய நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 9 | பத்தேகம நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 10 | ஹொரணை நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 11 | பாரிய மாத்தறை நகர அபிவிருத்தித் திட்டம் | கௌரவ அமைச்சரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வர்த்தமானியின் மூலம் பிரகடனம் செய்வதற்கு அவசிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (92%) |
| 12 | பாணந்துறை நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 13 | கட்டானை நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 14 | ஏறாவூர் நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 15 | கம்பளை நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 16 | சீத்தாவக்க நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 17 | மட்டக்களப்பு நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 18 | ஹிக்கடுவை நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 19 | புத்தளம் நகர அபிவிருத்தித் திட்டம் | இந்த அதிகாரசபையின் முகாமைச் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு அவசிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 20 | கேகாலை நகர அபிவிருத்தித் திட்டம் | |
| 21 | கொட்டிகாவத்த – முல்லேரியா நகர அபிவிருத்தித் திட்டம் | பிரதான திட்டக் குழுவுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 22 | பாரிய யாழ்ப்பாணம் நகர அபிவிருத்தித் திட்டம் | |

- 2024 ஆம் ஆண்டில் 22 அபிவிருத்தித் திட்டங்களை பிரகடனப்படுத்த இலக்கிடப்பட்டுள்ளது.
- மூன்றாம் காலாண்டாகும் போது 10 அபிவிருத்தித் திட்டங்கள் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

## 2.5 2024 ஆம் ஆண்டின் கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது அடைந்த வெற்றிகளும் எதிர்நோக்கிய சவால்களும்

### 2.5.1 2024 ஆம் கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது எதிர்நோக்கிய சவால்கள

- **அபிவிருத்திக் கருத்திட்டங்கள்**

பொதுத் திறைசேரியிலிருந்து இலக்கிடப்பட்டவாறு நிதி கிடைக்காமை காரணமாக எதிர்பார்த்தவாறு பௌதிக முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

- **யாழ்ப்பாணம் நகர மண்டபத்தைப் புனரமைக்கும் கருத்திட்டம்**

2019.10.10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் நகர மண்டபத்தைப் புனரமைக்கும் கருத்திட்டத்திற்கு அந்தந்த ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதிஒதுக்கீட்டு அளவுகள் கிடைக்கப்பெறாமையும், நிதிஒதுக்கீடுகள் 04 ஆண்டுகளினுள் பகிர்ந்து செல்கின்றவாறு அனுமதிக்கப்பட்டிருந்தபோதும், 02 ஆண்டுகளினுள் நிர்மாண ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்யுமாறு ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக ஒப்பந்த காலத்தை பல தடவைகள் நீடிக்க நேரிட்டமையும்.

- **நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டம்**

மேற்குறித்த பல கருத்திட்டங்கள் அரச வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை அனுசரித்து சுமக்கக்கூடிய விலைக்கு வீடமைப்புக் கருத்திட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டபோதும் (2,483 வீட்டு அலகுகள்) கடந்த காலத்தில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கட்டிடப் பொருள்களின் விலைகள் அதிகரித்ததன் காரணமாகவும், சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் காரணமாகவும், குறைந்த வட்டியில் வங்கிக் கடன் சலுகைத் திட்டம் அரச வங்கிகளில் நிறுத்தப்பட்டதன் காரணமாகவும் கருத்திட்டங்களை தற்காலிகமாக நிறுத்திவிட நேரிட்டது. தற்போது அக்கருத்திட்டங்களை மீண்டும் நடுத்தர வருமானக் கருத்திட்டங்களாக மாற்றி வீடுகளின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானங்களின் மூலம் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அரச மற்றும் தனியார் தலையீட்டுடனான முறைகளின் கீழ் கருத்திட்டங்கள் சிலவற்றை ஆரம்பிப்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

- **அபிவிருத்தித் திட்டங்களை பிரகடனம் செய்தல்**

ஹிங்குரக்கொட, சீத்தாவக்க, மாவனல்லை, கொட்டிகாவத்தை ஆகிய பிரதேச அதிகார இடப்பரப்புகளின் அபிவிருத்தித் திட்டங்களைப் பிரகடனப்படுத்துவதற்காக உரிய உள்ளூர் அதிகார சபைகளிடமிருந்து ஒருப்பாடு கிடைக்காமை காரணமாக எதிர்பார்த்த திகதியில் பிரகடனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.




முல்லைத்தீவு பேருந்து நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் II)




**அளவ்வ உத்தேச வாகனத் தரிப்பிடத்தையும் நடைபாதை வசதிகளையும் முன்னேற்றும் கருத்திட்டம் (கட்டம் II)**

## 2.6 2025 ஆம் ஆண்டின் செயல் திட்டம

| # | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | நிதி இலக்கு (ரூ.மி.) | நிதி மூலம் | பௌதிக இலக்கு (%) |
|---|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் நகர மண்டப நிர்மாணம் (கட்டம் II) | 400.00 | | 100 |
| 2 | முல்லைத்தீவு பேருந்து நிலைய அபிவிருத்தி (கட்டம் III) | 70.00 | | 100 |
| 3 | வலப்பனை உத்தேச வார சந்தையும் பல்நோக்குக் கட்டிடமும் (கட்டம் III) | 145.00 | | 100 |
| 4 | மலவ வெவ, கெக்கிறாவ நிலக் காட்சியமைப்புக் கருத்திட்டம் (கட்டம் II) | 26.00 | | 100 |
| 5 | ஹபறன, அநுராதபுரத்தில் துப்புரவேற்பாட்டு வசதிகளையும் நிலக் காட்சியமைப்புகளையும் முன்னேற்றுதல் (கட்டம் II) | 27.00 | | 100 |
| 6 | பொலன்னறுவை புதிய நிர்வாகக் கட்டிடத்தொகுதியின் நிர்மாணிப்பு (கட்டம் II) | 788.50 | | 100 |
| 7 | கிறகரி வாவி, நுவரெலியா உத்தேச வாகனங்கள் நிறுத்துமிடங்கள் | 70.00 | | 100 |
| 8 | அளவ்வ நடைபாதை பகுதி (கட்டம் III) | 50.00 | பொதுத் திறைசேரி நிதி | 100 |
| 9 | தலாத்துஓயா வாகனங்கள் நிறுத்திமிடங்கள் அபிவிருத்தி (கட்டம் II) | 27.00 | | 100 |
| 10 | தவுலகல வார சந்தை மற்றும் வாகனங்கள் நிறுத்திமிடங்கள் அபிவிருத்தி (கட்டம் II) | 32.00 | | 100 |
| 11 | குருணாகல் உத்தேச அலுவலகக் கட்டிடம் | 150.00 | | 70 |
| 12 | கும்பிச்சான்குளம் பாதுகாப்பு வேலி மற்றும் கூரையமைப்பு முன்னேற்றக் கருத்திட்டம் | 10.00 | | 100 |
| 13 | நுவரெலியா நானுஓயா உத்தேச உலா வரும் நடைபாதை | 3.20 | | 100 |
| 14 | முல்லைத்தீவு பேருந்து நிலைய அபிவிருத்தி (கட்டம் II) - இறுதி விலைப்பட்டிகளை செலுத்தித் தீர்த்தல் | 25.00 | | 100 |
| 15 | கம்பஹா பொதுச் சந்தை அபிவிருத்தி (கட்டம் II) | 355.35 | | 100 |
| 16 | பாணந்துறை சந்தை மற்றும் பல்நோக்குக் கட்டிட அபிவிருத்தி | 150.00 | | 100 |
| 17 | தெய்யந்தர பேருந்து நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் I) | 11.00 | பொதுத் திறைசேரி நிதி | 100 |
| 18 | பத்தேகம பேருந்து நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் I) | 0.35 | | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | குருணாகல் ரஜபிஹில்ல நகரப் பூங்கா உத்தேச அபிவிருத்தி - இறுதி விலைப்பட்டிகளை செலுத்தித் தீர்த்தல் | 6.80 | | 100 |
| 20 | கேகாலை பேருந்து டிப்போ மீள்நிறுவல் (பேருந்து டிப்போ நிர்வாகக் கட்டிடத்தின் நிர்மாணமும் ஏனைய எஞ்சிய பணிகளும் (கட்டம் III) | 5.00 | | 100 |
| 21 | அளவ்வ உத்தேச வாகனங்கள் நிறுத்திவைத்தல் மற்றும் பாதசாரிகள் வசதிகளை முன்னேற்றும் கருத்திட்டம் (கட்டம் II) - இறுதி விலைப்பட்டிகளை செலுத்தித் தீர்த்தல் | 5.00 | | 100 |
| 22 | அம்பாறை சந்தை நிர்மாணம் (கட்டம் II) | 5.00 | | 100 |
| 23 | தொழில்நுட்ப நகர அபிவிருத்திக் கருத்திட்டம் - விலைப்பட்டிகளை செலுத்தித் தீர்த்தலும் இழப்பீடுகளும் | 500.00 | | 98 |
| **மொத்தம்** | | **2,862.20** | | |

## நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டம்

| முக்கிய விடயத்துறை | கருத்திட்டம் | நிதி இலக்கு (ரூ.மி.) | மூலம் | பௌதிக இலக்கு (%) |
|---|---|---|---|---|
| நடுத்தர வருமான வீடுகள் | வியத்புர வீடமைப்புக் கருத்திட்டம் | 405.40 | முந்திய விற்பனை/ ந.அ.அ.ச. | 100 |
| நடுத்தர வருமான வீடுகள் | கிறீன் ஆர்கேட் வீடமைப்புக் கருத்திட்டம் | 1177.16 | | 100 |
| நடுத்தர வருமான வீடுகள் | எலியற் ரெசிடன்சீஸ் | 6552.80 | | 58 |
| நடுத்தர வருமான வீடுகள் | மாலபே | 2113.77 | | 62 |
| நடுத்தர வருமான வீடுகள் | மாகும்புற | 1742.96 | | 52 |
| நடுத்தர வருமான வீடுகள் | பொரலெஸ்கமுவ | 1711.46 | | 30 |
| நடுத்தர வருமான வீடுகள் | ஒருகொடவத்த 1 | 13.91 | ந.அ.அ.ச. | 30 |
| நடுத்தர வருமான வீடுகள் | ஒருகொடவத்த 2 | 67.00 | | 30 |
| நடுத்தர வருமான வீடுகள் | ஸ்ரேடியம்கம | 67.00 | | 30 |
| நடுத்தர வருமான வீடுகள் | பேலியகொடை 01 | 18.70 | | 30 |
| நடுத்தர வருமான வீடுகள் | பேலியகொடை 02 | 35.00 | | 30 |
| நடுத்தர வருமான வீடுகள் | அநுராதபுரம் | 32.00 | | 50 |

## நகர அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தமைத்தல்

- 2025 ஆம் ஆண்டுக்காக 28 நகர அபிவிருத்தித் திட்டங்களைப் பிரகடனப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டுள்ளது.

# 03 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

## 3.1 அறிமுகம்

“1979 ஆண்டின் 17ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 1979.04.01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் பின்வரும் திருத்தச் சட்டங்களின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 1982 ஆம் ஆண்டின 05 ஆம் இலக்கம
- 1988 ஆம் ஆண்டின 20 ஆம் இலக்கம
- 1999 ஆம் ஆண்டின 30 ஆம் இலக்கம
- 2002 අංක 23 ஆம் இலக்கம
- 2003 ஆம் ஆண்டின 32 ஆம் இலக்கம
- 2008 ஆம் ஆண்டின 37 விஷேட ஏற்பாடுகள் சட்டம்

### பணிப்பாளர் சபை

- விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்பட்ட தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை 06 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளதுடன் நிதி அமைச்சுக்குப் பொறுப்பான ஒரு (01) அங்கத்தவர் அமைச்சரினால் நியமிக்கப்படுவதுடன் மொத்தம் 07 பேர்களை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

### நிறுவன கட்டமைப்பு

பொதுமுகாமையாளர் பிரதான நிறைவேற்று அதிகாரியாவார். கொழும்பில் அமைந்துள்ள பிரதான காரியாலயத்தில் பிரதிப் பொதுமுகாமையாளர் பிரிவு 07 காணப்படுவதுடன், உதவிப் பொதுமுகாமையாளர் பிரிவு 01ம் காணப்படுகிறது. அத்துடன் உள்ளக கணக்காய்வுப்பிரிவு ஒன்றுடன் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டக் காரியாலயங்கள் 25 காணப்படுவதுடன் நகரக் காரியாலயங்கள் 03 மற்றும் வலய / உப காரியாலங்கள் 08 ம் கொண்டு அமைந்து காணப்படுகிறது.

### நோக்கு

“இலங்கையில் அனைத்து குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய சௌகரியமான, சுகாதாரமான ஒரு வீடு”

### பணி

காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களை பயன்தரவல்ல முகாமையின் ஊடாக, வீடு ஒன்று காணப்படாத அனைத்து குடும்பங்களுக்கும் சுகாதாரமான, நிலையான ஒரு வீட்டில் வாழ்வதனை உறுதி செய்வதற்கான உதவிகளை வழங்கல்

## 3.2 பிரதான நடவடிக்கைகள்

- மாடி வீடுகள், வீடுகள் அல்லது வேறு வதிவிடங்கள் கட்டிடங்களை நிர்மாணித்தல்.
- வீட்டுத்தட்டுப்பாட்டினை குறைப்பதற்காக வீடமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் தயாரித்தல்
- சேரிகள் மற்றும் குடிசைகள் கொண்ட பிரதேசங்களை மீள் அபிவிருத்தி செய்தல்.
- வீடமைப்பு அபிவிருத்திக்கு ஆர்வமூட்டல்.
- காணிகளை அபிவிருத்தி செய்தல் அல்லது மீள் அபிவிருத்தி செய்தல்.
- வீடமைப்பு அபிவிருத்திக்காக காணிகளை வழங்கல்.
- நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பணம் அல்லது வேறு வசதிகளை வழங்குதல்.
- வீடமைப்பு அபிவிருத்திக்காக சம்பந்தப்படும் நடவடிக்கைகளில் ஈடுபடல் அவற்றுக்க ஆர்வமூட்டல் மற்றும் அவற்றை இணைப்புச் செய்தல்
- மேற்கூறப்பட்ட நோக்கங்களை அனைத்தினையும் அல்லது அவற்றில் எவற்றையேனும் நிறைவேற்றிக் கொள்ள தேவைப்படும் அல்லது ஈடுபடக்கூடிய வேறு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்

## 3.3 2024 வேலைத்திட்டம்

''அனைவருக்கும் வதிவிடம்'' என்ற தொனிப்பொருளின் கீழ் வீடமைப்பு கடன் வேலைத்திட்டம், உதவி வேலைத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதற்காக திறைசேரி, உள்ளக அறவீடு மற்றும் செவண நிதியினால நிதி திரட்டப்படுகிறது.

அதே போல் மத்திய வருமானம் பெருபவர்களின் வீடமைப்புத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வீடமைப்புத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வீடமைப்புகளுக்கு அண்மையில் உதவி சேவைகளை வழங்குவதன் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்பத்திட்டங்களில் வாழும் மக்களின் பாதுகாப்புக்காக அதுவரையில் எடுக்கப்பட வேண்டிய அத்தியவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக ''பழைய வீடமைப்புத்திட்டங்களை நவீனப்படுத்தல்''

காணித்துண்டுகளை வழங்கல் வீட்டின் உரிமையை பெற்றுக்கொடுப்பதற்காக உரிமைப்பத்திரங்கள் வழங்கப்படும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன இதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெற்றுக்கொடுப்பதற்காக அறவீட்டு வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அறவீட்டின் மூலம் திரட்டப்படும் நிதி மீளெழும் செலவுகளை மேற்கொள்வதற்காகவும் புதிய கடன்களை வழங்கவும் முதலீடு செய்யப்படும்.

## 3.4 வேலைத்திட்ட வளர்ச்சி

| தொடர் இல. | திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட முழு செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | மானியம் 2024 (மி. ரூ.) | நிதி வளர்ச்சி | | பௌதீக வளர்ச்சி(%) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மி. ரூ. | % | |
| | **<u>வீடமைப்பு வேலைத்திட்டம்</u>** | | | | | | |
| | **<u>திறைசேரி நிதி</u>** | | | | | | |
| 01 | **செமட்ட நிவகன் - கடன்** | 2000.0 | 2000 | 2000.0 | 2041.1 | 102% | 140% |
| | **<u>செவண நிதி</u>** | | | | | | |
| 02 | **செவண உதவி** | | | | | | |
| | புதிய வேலைத்திட்டம் | 213.5 | 350 | 213.5 | 24.95 | 11% | 12% |
| | தொடர் (வரையறுத்தல் 14) | 12.4 | 90 | 12.4 | 12.40 | 100% | 100% |
| | **<u>உள்ளக உருவாக்க நிதி</u>** | | | | | | |
| 03 | **குறைந்த மற்றும் கீழ் மட்ட வருமான வீடுகள** | | | | | | |
| | செமட்ட நிவகன் - கடன் | 1000.0 | 1500 | 1000.0 | 1066.300 | 106% | 100% |
| | சேவாபிமானி – கடன் | 500.0 | 500 | 500.0 | 350.270 | 71% | 92% |
| | **<u>இந்திய நிதி</u>** | | | | | | |
| 04 | **1. கிராம சக்தி உதவி** | | | | | | |
| | நாடு முழுவதும் 2017 | 4.40 | 114 | 4.40 | 1.355 | 30% | 89% |
| | தென் மாகாணம் 2017 | 90.2 | 482 | 90.2 | 3.835 | 04% | 75% |
| | வட மாகாணம் 2019 | 124.8 | 475 | 124.8 | 7.40 | 06% | 45% |
| | தென் மாகாணம் 2019 | 174.3 | 100 | 174.3 | 9.95 | 06% | 48% |

| தொடர் இல. | திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட முழு செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | மானியம் 2024 (மி. ரூ.) | நிதி வளர்ச்சி | | பௌதீக வளர்ச்சி(%) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மி. ரூ | % | |
| | **இந்திய கிராம சக்தி உதவி** (தொடர் வேலைத்திட்டம்) திறைசேரி) | 1200.0 | - | 41.1 | - | - | - |
| | **2. கிராமிய மற்றும் பெருந்தோட்ட** | 2926.0 | 1045 | - | - | - | - |
| | **<u>வீடுகளுக்கு அண்மித்த உதவிச் சேவை</u>** | | | | | | |
| 06 | புழைய வீட்டுத்திட்டம் புதுப்பித்தல் (நீர்ப்பாசன நிலைய திருத்தல் வேலை) | 20.0 | - | 20.0 | 20.000 | 100% | - |
| 07 | நஷ்டஈடு காணி (காணி 07) | 10.0 | - | 10.0 | 10.000 | 100% | - |
| 08 | நடுத்தர வர்க்க வீடமைப்புத் திட்டங்களில் உட்கட்டமைப்பு வசதி | 10.0 | - | - | - | - | - |
| 09 | உரிமைப் பத்திரம் வழங்கல் | -- | 2000 | -- | -- | -- | 70% |
| 10 | **நடுத்தர வர்க்க வீடமைப்பு (முன்னைய விற்பனை** | | | | | | |
| | சொய்சாபுர | 201.0 | 30 | | 169.525 | 84% | 100% |
| | ததுங்கல்ல | 103.0 | 30 | | 100.413 | 97% | 100% |
| | ரன்பொக்குனுகம (A&B கட்டிடம் மாத்திரம்) | 259.0 | 72 | | 96.735 | 37% | 20% |
| 11 | **நடுத்தர வகுப்பு வீடமைப்பு (அரச / தனியார் பங்களிப்பு)** | | | | | | |
| | மிஹிந்துபுர வீடமைப்பு திட்டம் | USD 56,143,400 | 560 | | | | |
| | சியனே நேச்சர் பாக் | 230.0 | 43 | | | | 100% |
| | ரீஜன்சி பார்க் | 240.0 | 21 | | | | 96% |
| | வாத்துவ, சீ. பிரீஸ் | | 196 | | | | 66% |
| | லாவன்யா ஹய்ட் - ராகம | | 124 | | | | 55% |

## 3.5 நிதி வளர்ச்சி மற்றும் அறவீடு







**கடன் / வாடகை அறவிடல் மற்றும் ஆதன வருமானம்**

- **வருடாந்த இலக்கு - மி. ரூ. 4,801.996**
- **வளர்ச்சி 2024.12.31 திகதியில் - மி. ரூ. 3,717.459 (77%)**




**ஆதனங்களை அகற்றுதல், சொத்துக்களை குத்தகைக்கு வழங்கல் மற்றும் காணிகளை சுவீகரித்தல் (2024.12.31)**

| சொத்துக்களை அகற்றுதல் | | | சொத்துக்களை குத்தகைக்கு வழங்கல் | |
|---|---|---|---|---|
| வெற்று காணித்துண்டு | 93 | | கடை | 6 |
| அண்மித்த காணித்துண்டு | 7 | | கட்டிடம் | 7 |
| அனுமதிக்காத காணித்துண்டு | 11 | | காணி | 19 |
| வீடமைப்பு விற்பனை (பழைய திட்டம்) | 3 | | **காணி சுவீகரித்தல்** | |
| புதிய வீடுகள் விற்பனை (சொய்சாப்புர) | 18 | | 2024 வருடத்தில் அதிகாரசபையினால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் | 4 |

## 3.6 2024 வருடத்தில் அடைந்த வெற்றிகள்

- 2023.10.17 திகதியில் நடைபெற்ற பொதுமுயற்சிகள் சம்பந்தமான குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளை அனைத்துக்கு தேவையான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 2015 – 2019 “செமட்ட செவண” தொடர் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக தேவையான நிதியினை எதிர்வரும் 03 வருடங்களில் ஒதுக்குவதற்கு அமைச்சரவை தீர்மானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

- 2024 ஆம் ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்ட அரச திறைசேரி நிதி மற்றும் உள்ளக நிதி முழுமையாக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது.
- உள்ளக நிதி மூலம் அனைத்து மீளெழும் செலவுகளும் செய்யப்பட்டதன் பின்னர் அபிவிருத்தி வேலைகளுக்காக ரூபா 1528 மில்லியன் முதலீடு செய்ய முடிந்துள்ளது.
- ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் வீட்டு அலகுகள் திட்டமிடப்பட்ட விதத்தில் பூர்த்தி செய்ய முடிந்துள்ளத.

## 3.7 2024 ஆம் ஆண்டில் முகம் கொடுத்த சவால்கள்

- காணி விலை மதிப்பீடு செய்தல், சுவீகரிப்பு நடவடிக்கைகள் மற்றம் சம்பந்தப்பட்ட அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்காக எடுக்கும் காலம் அதிகரித்துச் சென்றமை மற்றும் அனுமதி பெறும் நடவடிக்கைகளில் கடினமான சிக்கல்கள் காணப்பட்டமை.
- வெகு காலமாக தீர்க்கப்படாமலிருந்த சம்பள முரண்பாடுகள் மற்றும் பதவி உயர்வு பிரச்சினைகள்
- தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபம் 02/2022 ஏற்ப நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை தற்காலிகமாக நிறுத்துதல்.
- சட்டரீதியற்றவைகளை ஒழுங்கமைத்தல், 2014 அமைச்சரவை முடீவுகளின்படி தீர்மானங்கள் (Provision) கிடைக்கப் பெறாமை
- பெறுமதி சேர் வரி காரணமாக விலை அதிகரித்தல்
- நிர்மாண செலவு அதிகரிப்பு காரணமாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்கப்படும் பணம் போதுமானதாக காணப்படாமை.
- மாடி வீட்டு நிர்மாண செலவுகள் மிக அதிகமாக அதிகரித்து சென்றமை காரணமாக மத்திய வருமான பிரிவினரின் வீட்டுத்தேவையை பூர்த்தி செய்வதில் பிரச்சினை
- சட்டரீதியற்ற விதத்தில் குடியேறிவர்களை ஒழுங்கமைத்தல்
- இணைந்த வீட்டுச் சட்டத்தினை திருத்தியமைத்தல்.

## 3.8 2025 உத்தேச திட்டம்

| பிரதான விடய துறை | திட்டம் / நிகழ்ச்சி | நிதி இலக்கு (மி. ரூ.) | நிதி மூலம் | பௌதீக இலக்கு |
|---|---|---|---|---|
| **வீடமைப்பு வசதி** | இந்திய உதவி வேலைத்திட்டம் (குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக) – தொடர்) | 70.0<br>380.8 | திறைசேரி நிதி<br>இந்திய நிதி | 1320 |
| | செமட்ட செவண (2015-2019 தொ.)<br>- கடன் | 2150.0<br>300.0 | திறைசேரி நிதி<br>உள்ளக உருவாக்கம் | 8500 |
| | - உதவி | 2208.0 | திறைசேரி நிதி | 5500 |
| | "செமட்ட நிவகன" குறைந்த வருமானம் பெறுவோருக்கான புதிய வீடமைப்பு - உதவி | 5000.0<br>500.0 | திறைசேரி நிதி<br>செவண நிதி | 5000<br>500 |

| பிரதான விடய துறை | திட்டம் / நிகழ்ச்சி | நிதி இலக்கு (மி. ரூ.) | நிதி மூலம் | பௌதீக இலக்கு |
|---|---|---|---|---|
| | "செமட்ட நிவகன"குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோருக்கான புதிய வீடுகள் | 3750.0<br>750.0 | திறைசேரி நிதி<br>உள்ளக உருாக்கம் | 2500<br>500 |
| | வீட்டினை மீள சீரமைத்தல் - கடன் | 5000.0<br>800.0 | திறைசேரி நிதி<br>உள்ளக உருவாக்கம் | 5000<br>800 |
| | சேவாபிமானி வீடமைப்புக்கடன் | 500.0 | உள்ளக உருவாக்கம் | 500 |
| | இளைய திருமணமானவர்களுக்காக புதிய வீடமைப்புக் -கடன் | 1250.0 | திறைசேரி நிதி | 500 |
| | வாடகை வீடு - அரச ஊழியர் (மாளிகாவத்தை – வீடமைப்புத்திட்டம்) | 375.0 | திறைசேரி நிதி | 30 |
| | குறைந்த வருமானமுடையவர் களுக்கான வாடகை அறுதி வீடு | 1440.0 | திறைசேரி நிதி | 144<br>(திட்டம் 03) |
| | நடுத்தரவர்க்க வீடமைப்புத் திட்டத்திற்காக மின்சாரம் மற்றும் நீர் (லாவண்யா ஹய்ட்ஸ், சீ. பிரீஸ் திட்டம்) | 32.0 | திறைசேரி நிதி<br>அபிவிருத்தி நிதி | -<br>320 |
| | **<u>முன்னைய விற்பனை வீடுகள்</u>** | | | |
| | (i)ரன்பொக்குன - TEC - மி. ரூ .86.0 | | பயனாளிகள் நிதி / உள்ளக நிதி | 24 |
| | (ii) வெவேகொடெல்ல, கம்பஹா<br>TEC – (மி. ரூ.) .86.0 | | பயனாளிகள் நிதி / உள்ளக நிதி | 40 |
| | (iii) கெக்கிரி பொக்க கலவன் அபிவிருத்தி, காலி (மாடி 11) | | பயனாளிகள் நிதி / உள்ளக நிதி | வணிக கட்டிடம் 18, ரெஸ்டூரன்ட் 01, வாக தரிப்பிடம், மற்றும் தே.வீ.அ.அ. மாவட்ட அலுவலகம் |
| | **<u>அரச தனியார் பங்களிப்பு வீடுகள்</u>** | | | |
| | (iv) குருநாகலை, டெனோவர் வத்த பலவித அபிவிருத்தி திட்டம் | | அபிவிருத்தி நிதி | 600 |
| | (v) என்டசன் | | அபிவிருத்தி நிதி | 90 |
| | (vi) யக்கல, வெரெல்லவத்த - | | பயனாளிகள் | 924 |

| பிரதான விடய துறை | திட்டம் / நிகழ்ச்சி | நிதி இலக்கு (மி. ரூ.) | நிதி மூலம் | பௌதீக இலக்கு |
|---|---|---|---|---|
| | | | நிதி / அபிவிருத்தி நிதி | |
| | (vii) மிஹிந்துபுர - TEC - USD. 56,143,399.9 | | அபிவிருத்தி நிதி | 560 |
| **பங்களிப்பு உதவி** | காணி தண்டப்பணம் செலுத்தல் | 167.79 | திறைசேரி நிதி | காணி 13 |
| | பழைய வீடமைப்புத் திட்டம் புதுப்பித்தல் (நகமு புரவர) | 454.25 | திறைசேரி நிதி | 1169 திட்டம் 26 |
| | சுகாதார வசதிகள் வழங்கல் (மலசலகூடம்) | 2175.0 | திறைசேரி நிதி | 29000 |
| | உரிமைப் பத்திரம் வழங்கல் | -- | | 2000 |

## 3.9 2025 உத்தேச திட்டங்கள

- **இளைய வயது திருமண குடும்பஸ்தர்களுக்காக வீடு**

  இளைய வயது திருமண குடும்பஸ்தர்களுக்காக புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு அல்லது வீடொன்றினை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதி உதவியாக நீண்ட காலத்தில் செலுத்துவதற்காக நிபந்தனைகள் கீழ் சலுகை அடிப்படையிலான வட்டியின் கீழ் கடன் ஒன்றினைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உதவி புரிதல் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். அனைத்து மாவட்டங்களில் இருந்தும் இளவயது திருமண குடும்பங்கள் 50 னை தெரிவு செய்து அதிகூடியது ரூபா 2.5 மில்லியன் கடன் வழங்குவதன் மூலம் எதிர்வரும் 03 வருடங்களினுள் 1250 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு 2025 வருடத்தினுள் 500 குடும்பங்களுக்காக உதவி வழங்குவதற்காக ரூபா 1250 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- **மத்திய வகுப்பினருக்கான முன் விற்பனை வீடமைப்புத்திட்டம்**
  - காலி கெக்கிரிபொக்க பலவித அபிவிருத்தித் திட்டம்
  - கம்பஹ ரன்பொக்குனுகம
  - கம்பஹா, வெவேகொடல்ல

- **அரச தனியார் பங்களிப்பு வீடமைப்பு திட்டம்**
  - கொழும்பு - 05 – என்டசன்வீதி
  - மாவத்தகம, டெனோவர்வத்த
  - யக்கல, வெரெல்லவத்த
  - கிருலப்பனமிஹிந்தபுர

- **அரச ஊழியர்களுக்கான வாடகை வீட்டுத்திட்டம்**

  நிலையான ஒரு வீடு காணப்படும் ஆனால் அன்றாடம் கடமை நிமித்தம் தமது வேலைத்தளத்திற்கு அருகாமையில் தங்குமிட வசதி காணப்படாத அரச ஊழியர்களுக்காக வாடகை வீடு ஒன்றினை வழங்குவதன் மூலம் தொழிலின் வினைத் திறன் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாவது 2025 ஆம் வருடத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான மாளிகாவத்த பேஷகர்ம காணியை 30 வீடுகள் கொண்ட மாடி வீட்டுத்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபாய் 375.00 மில்லியன் தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தினை 02 வருடங்களுக்குள் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதுடன் போட்டித்தன்மை வாய்ந்த விலை கோரல் மூலம் ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்து திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு

எதிர்பார்க்கப்படுகிறது. 2025 வருடத்திற்காக திறைசேரி நிதி மூலம் ரூபா 250.00 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளது.

- **வாடகை அடிப்படையில் உரிமை பெரும் வீட்டுத்திட்டம்**

வீடு ஒன்றோ அல்லது காணி ஒன்றோ காணப்படாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக நீண்ட கால வாடகை அடிப்படையில் நிலையான வீடொன்றின் உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த வேதைத்திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை பிரதேச செயலாளர்களுடன் இணைந்து வீடமைப்புக்காக ஏற்கனவே காலி, குருநாகல் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள பொருத்தமான காணித்துண்டு 03இல் 144 வீடுகள் கொண்ட மாடி வீட்டுத்திட்டங்கள் 03னை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு ஒரு வீட்டுக்காக கிரயமாக ரூபா 10 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி 2026 ஆம் வருடத்தில் ரூபா 1440.00 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| தொ. இல. | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | வீட்டு அலகுகள் | மதிப்பீடு (மி. ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | காலி | வராகஸ்விலவத்த-கொனாபீனுவல | 48 | 480.00 |
| 2 | குருநாகலை | கனதுல்ல -குளியாப்பிட்டி | 48 | 480.00 |
| 3 | பொலொன்னறுவை | ஹிங்கரன்கொட | 48 | 480.00 |
| **மொத்தம்** | | | **144** | **1440.00** |



கொழும்பு – 05 என்டசன் வீதி



காலி – கெக்கிரி பொக்க இடம்



மாளிகாவத்தை – பெகெக்மகல இடம்



குருநாகல், மாவத்தகம – டெனோவர் தோட்டம்

# 04 இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

## 4.1 அறிமுகம்

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் முதலில் 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொழும்பு மாவட்ட (தாழ்நில) நிலமீட்டல் மற்றும் அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் சட்டரீதியான ஒரு நிறுவனமாக நிறுவப்பட்டது. பின்பு 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, 2019 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 2021 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டது. ஆரம்பம் முதல் இக்கூட்டுத்தாபனம் நாட்டின் அபிவிருத்தியில் குறிப்பாக நகர்ப்புற மழை நீர் முகாமைத்துவத்தில் முக்கிய வகிபாகமொன்றை ஆற்றியது. காலவோட்டத்தில் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் தனது செயற்பாடுகளை புதிய தொழில்முயற்சிகளுக்கு பல்வகைமைப்படுத்தியுள்ளது.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் தாழ் நிலங்களின் அபிவிருத்தியின் மீது கவனம் செலுத்துவதற்கு முதலில் நிறுவப்பட்டது. இருப்பினும், காலம் செல்லும்போது நவீனமயமாகும் வாய்ப்புகளுக்கும் சேவை வழங்கல்களுக்கும் இயைபாக்கமடைவதற்கு திருத்தங்களுக்கு உள்ளானது.

கூட்டுத்தாபனத்தில் 1400க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தற்போது பணியாற்றிவருவதுடன், கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அவசியமான இயந்திர உபகரணங்கள் உள்ளடங்களாக மொத்தமாக ரூ. 18 பில்லியன் அளவான சொத்துக்கள் காணப்படுகின்றது.

மேலும், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், எட்டு(8) நடவடிக்கைப் பிரவுகளையும் ஆறு(6) சேவைப் பிரிவுகளையும் கொண்டதாகும். பல்வேறு கருத்திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் அது செயலாற்றும்.

இலங்கை தேசிய நிர்மாண சங்கத்திலும் இலங்கை பசுமைக் கட்டிடங்கள் கவுன்சிலிலும் அங்கத்துவம் பெற்றுள்ள இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், ISO 9001: 2015, ISO 14001: 2015, ISO 45001: 2018 ஆகிய தரச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளது.

### தொலைநோக்கு

தேசிய அபிவிருத்திக் கொள்கைகளுக்கு இணையாக சுற்றாடல் நட்புறவான பேண்தகு சூழலொன்றை உருவாக்குதலும் முகாமை செய்தலும்.

### பணிக்கூற்று

உயர் திறனும் உந்தப்பெற்ற உழைப்பாளர் சேனையொன்றும் ஊடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு மழைநீர் வடிமானம், ஈர நில முகாமைத்துவம், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஆகியவற்றுக்கான பொறியியல் சேவைகளை வழங்குதல்.

## 4.2 இணைக்கப்பட்ட நிறுவனங்கள்

காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனியும், LRDC சேவைகள் தனியார் கம்பனியும் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் இணைக்கப்பட்ட நிறுவனங்களாகும்.

### 4.2.1. காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி

2007 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இக்கம்பனியின் முக்கிய நோக்கம், உயர் தரம் வாய்ந்த சீமெந்துக் கற்களை உற்பத்தி

செய்வதும், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு நிர்மாணம், காணி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், பொதுச் சேவைகள் மற்றும் ஏனைய சேவைகளில் உதவுவதும் ஆகும்.

தொலைநோக்கு

முழுதுமளாவிய வாடிக்கையாளர் திருப்திக்காக உயர் தரம் வாய்ந்த உற்பத்திகளையும் சேவைகளையும் வழங்குவதன் மூலம் இலங்கையில் நிர்மாணக் கைத்தொழிலுக்கு மிகச் சிறந்த அரச சீமெந்து உற்பத்திகளின் உற்பத்தியாளராக/வழங்குநராக விளங்குதல்.

பணிக்கூற்று

எமது உயர் தரம்வாய்ந்த உற்பத்திகளும் சேவைகளும் ஊடாக எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நிர்மாணக் கைத்தொழிலின் உயர் தரநியமங்களை அடைந்துகொள்வதற்கு நாம் உதவுவோம்.

### 4.2.2 LRDC சேவைகள் தனியார் கம்பனி

இந்த நிறுவனம் இலங்கையின் அபிவிருத்திக்கான செயற்பாடுகளை வழங்கி கடந்த 20 வருட காலமாக இயங்கி வருகிறது. தற்போது அது அரச, தனியார் மற்றும் வீட்டுத்துறை நிறுவனங்கள் மற்றம் தனிமனிதர்களுக்காக நாடுபூராவும் பாதுகாப்பையும் அவதானிப்புத் தீர்வுகளையும் வழங்கும் மிக முக்கிய ஓர் அரச அமைப்பாகும்.

தொலைநோக்கு

இலங்கையிலும் அதனைத் தாண்டியும் அரசுக்கும் மக்களுக்கும் முன்னணி சமூகப் பாதுகாவலனாக விளங்குதல்.

பணிக்கூற்று

பேண்தகு அரச தொழில்முயற்சியொன்றாக தமது வரத்தை அமுல்படுத்துவதற்கு அர்ப்பணித்துள்ள திருப்திகரமான, பயன்களைப் பெறும் உழைப்பாளர் சேவையொன்றினால் வழங்கப்படும் நம்பகத்தகுந்த, தொழில்சார் சேவையொன்றின் ஊடாக எமது தொழில்தருநரின் குறித்துரைக்கப்பட்டதும் தனிப் பயனாக்கியதுமான பாதுகாப்பு, கண்காணிப்பு, மதிநுட்பம் மற்றும் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தொலைநோக்கின்படி ‘‘தேசிய அபிவிருத்திக் கொள்கைகளுக்கு இணையாக சுற்றாடல் நட்புறவான பேண்தகு சூழலொன்றை உருவாக்குவதற்கும் முகாமைசெய்வதற்கும்’’ அமுல்படுத்தப்பட்ட மழைநீரைக் குறைக்கும் கருத்திட்டங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

- கால்வாய்களையும் குளங்களையும் நடைப்பயிற்சிப் பாதைகளையும் பராமரித்தலும் புனரமைத்தலும்.
- நீண்டகால பேண்தகு நிலை கருதி மழை நீரைக் குறைக்கும் கருத்திட்டங்களைத் திட்டமிடுதலும் அமுல்படுத்தலும்.

### 4.3 முக்கிய விடயத்துறைகள்

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் முக்கிய 4 விடயத்துறைகளின் கீழ் 32 வருடாந்த கருத்திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது.

- கால்வாய்கள், குளங்கள், நடைப்பயிற்சிப் பாதைகளை (walking paths) பராமரித்தலும் மறுசீரமைத்தலும்.
- மழை நீர்க் கட்டுப்பாடு.
- ஈர நிலங்களதும் தாழ்நிலங்களதும் அபிவிருத்தி.
- நிர்மாண நடவடிக்கைகள், வரைபடமாக்கல், சாத்தியவள ஆய்வு.

## 4.4 முன்னேற்றம் - 2024

➢ **திறைசேரி நிதியின் மூலம் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் முன்னேற்றம் - 2024**

| # | கருத்திட்டப் பெயர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.) | நிதி ஒதுக்கீடுகள் 2024 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 | | பௌதிக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | | | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | (%) | |
| 1 | அரச நிறுவனங்கள் (ஆண்டுக்குரிய பராமரிப்புகள்) | ஆண்டுக்குரிய | 600.00 | 306.36 | 51 | 100 |
| 2 | வேரஸ் கங்கை மழைநீர் வடிமானம் மற்றும் சூழல் மேம்பாட்டுக் கருத்திட்டம் | 11,050.00 | 800.00 | 488.95 | 61 | 100 |
| 3 | கொலன்னாவை மழைநீர் வடிமானம் மற்றும் சூழல் மேம்பாட்டுக் கருத்திட்டம் | 8,300.00 | 300.00 | 201.43 | 67 | 14.17 |
| 4 | ஒலியமுல்ல மழைநீர் வடிமானம் மற்றும் சூழல் மேம்பாட்டுக் கருத்திட்டம் | 3,000.00 | 450.00 | 293.49 | 65 | 90 |
| 5 | பெய்ரா வாவி நீரின் தரத்தை மீட்டளித்தல் | ஆண்டுக்குரிய | 40.00 | 22.95 | 57 | 99.07 |
| **மொத்தம்** | | | 2,190.00 | 1,313.13 | | |

➢ **தொழில்தருநர் நிதிகளுடன்கூடிய கருத்திட்டங்கள் - 2024**

| # | கருத்திட்டப் பெயர் | தொழில்-தருநர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.) | 2024.12.31 அன்று உள்ளவாறான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூ.மி.) | (%) |
| 1 | பபாவா வாவி புனரமைப்பு – திஸ்ஸமஹாராமய | விவசாய அமைச்சு | 78.89 | 73.55 | 93 |
| 2 | தபறவ வாவி புனரமைப்பு – திஸ்ஸமஹாராமய | | 87.18 | 83.81 | 96 |
| 3 | மொறட்டுவை பெட்டரிவத்த மழைநீர் வடிமான முகாமைத்துவப் பிரேரணையும் காணி மீட்டல்களைத் திட்டமிடுதலும் நிர்மாணமும் | நகர அபிவிருத்தி அதிகார சபை | 227.00 | 183.81 | 81 |
| 4 | இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்தில் சதுப்புநிலப் பகுதியில் நடைப்பயிற்சிப் பாதைகளை நிர்மாணித்தல் (SLIIT) | இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப நிறுவகம் | 33.56 | 22.38 | 67 |

➢ **இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் நிதிகளுடன்கூடிய கருத்திட்டங்கள் - 2024**

1. உள்ளூர் நிர்மாணக் கைத்தொழிலுக்கு கடல்கடந்த மணல் விற்பனை வருமானம் (31.12.2024) – 798.26 மி.ரூ.
2. கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம் - கெரவலபிட்டிய
   - வாய்ப்பான காலநிலை நிலைமைகளின் கீழ் நாளாந்த கூட்டெரு உற்பத்தி இயலளவு 30 மெட்ரிக் தொன்னாகும்.



**ஒலியமுல்ல மழைநீர் வடிமானம் மற்றும் மேம்பாட்டுக் கருத்திட்டம் பேலியகொட**



**வேரஸ் கங்கை மழைநீர் வடிமானம் மற்றும் சூழல் மேம்பாட்டுக் கருத்திட்டம்**

➢ **கொலன்னாவை மழைநீர் வடிமானம் மற்றும் சூழல்**

**பராமரிப்புக்கு முன்பு**



**தற்போதைய நிலைமை**



**தாஹும்வெல கால்வாய் - துப்பவெல ஏரி நிர்மாணிப்பு**



**சௌலிஹினி மாவத்தை கால்வாய் கட்டுமாணம**



**தாஹும்வெல கால்வாய் - வென்னவத்த பாதை பாலக் கட்டுமாணம**

## 4.5 ஆண்டுக்குரிய திட்டம் 2025

| முக்கிய விடயத் துறைகள் | கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் | நிதி இலக்கு (ரூ.மி.) | நிதிமூலம் | பௌதிக இலக்கு (%) |
|---|---|---|---|---|
| மழை நீர் காரணமாக ஏற்படக் கூடிய வெள்ளப் பெருக்கை குறைக்கும் செயற்பாடுகளைத் திட்டமிடுதலும் அமுல்படுத்தலும் பராமரித்தலும் | 1.1 தற்போதுள்ள கால்வாய்கள், குளங்கள், ஈர நிலங்கள், நடைப்பயிற்சிப் பாதைகளின் பராமரிப்பும் புனரமைப்பும் | 1,081.50 | திறைசேரி நிதிகள் | 100 |
| | 1.2 வடிகாலமைப்புகளைத் திட்டமிடுதலும் அமுல்படுத்தலும் சூழல் பாதுகாப்பும் | 215.00 | | 100 |
| | 1.3 மழை நீர் அனர்த்தங்களுக்காக கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மழைநீர் பம்பு நிலையங்களை அமுல்படுத்தலும் பராமரித்தலும் | 198.50 | | 100 |
| | 1.4 மழைநீர் அனர்த்தங்களுக்கான தயார்நிலையும் அவசர பதில்குறிப்புகளும் | 482.10 | | 100 |
| | 2.வேரஸ் கங்கை மழை நீர் வெளியேற்றல் மற்றும் சூழல் மேம்பாட்டுக் கருத்திட்டம் | 440.00 | | 100 |
| | 3. ஒலியமுல்ல மழைநீர் வடிமானம் மற்றும் சூழல் மேம்பாட்டுக் கருத்திட்டம் | 800.00 | | 100 |
| மழைநீர் காரணமாக ஏற்படக் கூடிய வெள்ளப் பெருக்கை குறைக்கும் செயற்பாடுகளைத் திட்டமிடுதல், அமுல்படுத்தல், முன்னெடுத்தல், பராமரித்தல் | 4. கொலன்னாவை மழைநீர் வடிமானம் மற்றும் சூழல் | 1,498.00 | திறைசேரி நிதிகள் | 100 |
| | 5. நீர்ப்பெருக்குகளைக் குறைப்பதற்காக கருப்புப் பாலம் Gate Mounted Pumps நிறுவுதல் | 600.00 | | 100 |

## 4.6 சவால்கள்

- உத்தேச திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் தற்போதுள்ள கால்வாய்த் தொகுதிகளைப் பராமரிப்பதற்கும் மழைநீர் பம்பு நிலையங்களை அமுல்படுத்துவதற்கு திறைசேரி நிதி ஒதுக்கீடுகள் போதாமை.
- மிகச் சிறந்த சிறப்புரிமைகளுக்கான தகுதிபெற்ற மற்றும் அனுபவமுள்ள தொழில்சார் பணியாட்குழு கூட்டுத்தாபனத்தை விட்டுச் செல்லல்.
- மழைநீர் பம்பு நிலையங்கள் போன்ற மழைநீரைக் குறைக்கும் வசதிகளை அமுல்படுத்துவதற்கு அவசியமான தொழில்நுட்ப பணியாட்குழு இல்லாமை மற்றும் காணி கையகப்படுத்தும் பிரச்சினைகள்.

# 05 கட்டிடங்கள் துறை

## 5.1 அறிமுகம்

பொதுப்பணித் துறையின் (***PWD)*** கீழ் செயல்படும் கட்டிடத் துறை (கட்டிடத் தரையானது***) 1969*** இல் நிறுவப்பட்டது மற்றும் கட்டிடம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு பொறுப்பான ஒரு சுயாதீன அமைப்பாக ***5*** தசாப்தங்களுக்கும் மேலாக இருந்தது. இத்துறையானது கட்டிடம் மற்றும் அது தொடர்பான உள்கட்டமைப்புப் பணிகளில் ஒரே அதிகாரம் மற்றும் ஆலோசனை அமைப்பாக இருந்தது. கட்டிடத் துறையானது கட்டுமானத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும்***,*** அந்தத் திட்டங்கள் தொடர்பான சட்ட நடைமுறைகளைக் கையாள்வதிலும் நிபுணர் ஆலோசனைகளை வழங்குகிறது. தேசிய வளர்ச்சியிலும்***,*** பொதுக் கட்டிடச் சொத்துக்களைப் பாதுகாப்பதிலும் திணைக்களம் பாராட்டத்தக்க பங்கு வகிக்கிறது.

*கட்டிடத் தரையானது அரசியலமைப்பின்* **13** *வது திருத்தத்துடன் மறுசீரமைக்கப்பட்டது. இலங்கையில் பொது கட்டிடங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான அதிகாரமும் பொறுப்பும் திணைக்களத்திற்கு உள்ளது. திணைக்களம் அதன் பங்கை மறுவரையறை செய்கிறது மற்றும் திட்ட மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப பொறுப்புக்கு ஒரு குறிப்பிட்ட குறிப்பைக் கொண்டுள்ளது.*

### தூர நோக்கு

பொதுத்துறை நிறுவனங்கள் பாதுகாப்பான, சிக்கனமான, நிலையான, நேர்த்தியான, கட்டமைக்கப்பட்ட சூழல்களை நாட்டுக்கு உயர் தரமான சேவைகளை வழங்குவதை உறுதி செய்யும் கட்டுமானப் பணிகளில் தொழில்நுட்ப அதிகாரியாக இருத்தல்.

### குறிக்கோள்

கட்டிடக்கலை வடிவமைப்பு, பொறியியல் வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்பு, திட்ட முகாமை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் பொதுத்துறை கட்டிட வேலைகளை மேம்படுத்துவதற்கு சிறந்த சேவைகளை வழங்குதல் அர்ப்பணிப்புள்ள பல்துறை நிபுணர்களின் குழு.

### 5.2. அதிகாரம் மற்றும் பொறுப்பு

கட்டிடத் தரையானது ஆனது நிதி ஒழுங்குமுறை எண்கள் FR 787, FR 788, FR 789 மற்றும் FR 790 ஆகியவற்றின் கீழ் அதிகாரம் பெற்றுள்ளது. அதன்படி, துறையானது தொழில்நுட்பம் அல்லாத துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்குகிறது.

- கட்டிடங்களின் கட்டுமானம், புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான ஆலோசனை சேவைகள்.
- திட்ட முகாமை சேவைகள்.
- நிபந்தனை அறிக்கைகளை வழங்குதல்.
- கட்டணங்களின் கட்டிட அட்டவணையை வெளியிடுதல்.
- பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப சேவை மாணவர்களின் பயிற்சி.
- கொள்முதல் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் பங்கேற்பதன் மூலம் பிற நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குதல்.
- நீதிமன்ற உத்தரவுகளின்படி கட்டிட நிலை அறிக்கைகளை வழங்குதல் மற்றும் நீதிமன்றத்தில் முன்னலை ஆகுதல்.
- காண்டோமினியம் சொத்துகளுக்கான நிபந்தனை அறிக்கைகளை வழங்குதல்.
- ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பங்கேற்கும் கூட்டங்களுக்கு கட்டமைக்கப்படும் நிலை நிலைத்தன்மை அறிக்கைகளை வழங்குதல்.

திணைக்களமானது எமது அர்ப்பணிப்பிற்கு மிகவும் கட்டுப்படும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் வடிவில் உடன்படிக்கையுடன் சேவைகளை வழங்குகிறது.

## 5.3 2024 இன் திட்டங்களின் சுருக்கம் (டிசம்பர் 31 வரை)

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பிடப்பட்ட தொகை | பயனாளிகளின் எண்ணிக்கை | திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு | 2024 ஆம் ஆண்டிற்கான மொத்த இலக்கு | நிதி முன்னேற்றம் (31/12/2024) | | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | (ரூபா. மில்லியன்.) | | (ரூபா. மில்லியன் | (ரூபா. மில்லியன் | (ரூபா. மில்லியன் | (%) | (%) |
| 1 | வலயம் - 01 மேற்கு தெற்கு | 2,907.16 | வரம்பற்ற | 1,131.89 | 821.38 | 648.53 | 79 | 40 - 100 |
| 2 | வலயம் - 01 மேற்கு வடக்கு | 978.46 | | 447.03 | 269.70 | 132.92 | 49 | 90 - 100 |
| 3 | மண்டலம் - 02 | 839.21 | | 451.72 | 313.50 | 117.64 | 38 | 30 - 100 |
| 4 | மண்டலம் - 03 | 686.27 | | 669.69 | 283.72 | 207.76 | 73 | 35 - 100 |
| 5 | மண்டலம் - 04 | 1,083.42 | | 863.90 | 716.91 | 608.85 | 85 | 53 - 100 |
| 6 | மண்டலம் - 05 | 1,038.95 | | 396.56 | 369.65 | 369.65 | 100 | 100 |
| 7 | மண்டலம் - 06 | 6,052.66 | | 1,846.58 | 604.23 | 607.59 | 101 | 60 - 100 |
| | **மொத்தம்** | **13, 586.13** | | **5,807.35** | **3,379.09** | **2,692.94** | **80** | |

## 5.4 2024 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட பல திட்டங்கள்



ஹோமாகம பிரதேச செயலகத்திற்காக நான்கு மாடிகளைக் கொண்ட கட்டிடத்தை நிர்மாணித்தல்
(TEC - 360 Mn.)



தல்தெனிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல்
(TEC - 599 Mn.)



கண்டி "வரலாற்று இராஜவாசல நூதனசாலை" வளாகத்தை புனரமைத்தல் (TEC - 84.5 Mn.)

## 5.5 2024 ஆம் ஆண்டில் கட்டிடத் திணைக்களத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

| திட்டப்பணி | மதிப்பிடப்பட்ட தொகை(Rs. Mn.) | 31.12.2024 வரை முன்னேற்றம் (Rs. Mn.) |
|---|---|---|
| CE (Z6) அலுவலகத்தில் ஓட்டுநர் தங்குமிடத்தின் இருப்பு வேலை | 0.10 | 0.09 |
| மினி மாநாட்டு அறை, CE (Z4) அலுவலகத்திற்கான அலுமினிய பகிர்வை வழங்குதல் மற்றும் சரிசெய்தல் | 0.45 | 0.40 |

## 5.6. சிக்கல்கள் மற்றும் தடைகள்

- அரசாங்கத்தின் புதிய நிதிக் கொள்கைகள் காரணமாக, கட்டுமானப் பணிகளுக்கு நிதி கட்டுப்பாடுகள் இருந்தன. பெரும் நிதி நெருக்கடிக்குப் பிறகு தற்போதுள்ள கட்டிடங்களைச் சீரமைக்கவும் பழுது பார்க்கவும் பெரும்பாலான ஒதுக்கீடுகள் பெறப்பட்டன.
- பணியாளர்கள் பற்றாக்குறை (பொறியாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் வரைவோலை நபர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், ஓட்டுநர்கள்)
- தளத்தைப் பார்வையிடுவதற்கு வாகனங்களின் பற்றாக்குறை.
- சர்க்யூட் பங்களாக்களின் பராமரிப்பு / மேம்பாட்டிற்கு போதுமான ஒதுக்கீடுகள் இல்லை.
- கட்டுமான கட்டத்தில் வாடிக்கையாளர்களால் கோரப்பட்ட மாற்றங்கள் காரணமாக திட்டங்களில் தாமதம்.
- சட்ட அதிகாரி இல்லை

## 5.7 கடக்க வேண்டிய உத்திகள் தடைகள்

- சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஸ்டாப் போர் வசன்சிகளை மீட்டெடுத்தல்.
- கடமை கவரேஜ் மற்றும் செயல்படும் அடிப்படையில் இருக்கும் ஊழியர்களிடமிருந்து கடமைகளை நிறைவேற்றுதல்.

## 5.8 2025 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

| முக்கிய பொருள் பகுதி | திட்டம் | நிதி இலக்கு (ரூ. மில்லியன்) | நிதி ஆதாரம் | உடல் இலக்கு % |
|---|---|---|---|---|
| **மறுவாழ்வு & மூலதனச் சொத்துகளை மேம்படுத்துதல்** | | | | |
| 309-2001 | கட்டிடம் & கட்டமைப்புகள் | 195.31 | GOSL | 100 |
| 309-2002 | ஆலை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 2.38 | GOSL | 100 |
| 309-2003 | வாகனங்கள் | 4.40 | GOSL | 100 |
| **நிலையான சொத்துக்களை கையகப்படுத்துதல்** | | | | |
| 309-2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 3.13 | GOSL | 100 |
| 309-2103 | ஆலை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 13.47 | GOSL | 100 |
| 309-2105 | நிலம் மற்றும் நில மேம்பாடு | 9.85 | GOSL | 100 |
| **மொத்தம்** | | 228.54 | | |

# 06 அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்

## 6.1 அறிமுகம்

அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் உப திணைக்களமொன்றாக 1849 ஆம் ஆண்டு கொழும்பு ஐந்து லாம்புச் சந்தியதில் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் பிற்காலத்தில் அதாவது 1928 ஆம் ஆண்டு முதல் கொலன்னாவை தெமட்டகொட வீதியில் பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகத்திற்கு அருகே தாபிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் பெருந்தெருக்கள், பாலம், நீர்ப்பாசனம், கட்டிடம் நிர்மாணித்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கியுள்ளதுடன், வெளிநாட்டுப் பொறியியலாளர்களினால் இந்த நிறுவனம் வழிநடாத்தப்பட்டுள்ளது.

1969 வரை இவ்வாறு இயங்கி வந்த அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் அதன் மூலம் நிறைவேற்றியுள்ள பெருந்தெருக்களை நிர்மாணித்தல், பராமரிப்பு, கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு போன்ற சிவில் பொறியியல்சார் பணிகளுக்கு பெருந்தெருக்கள் திணைக்களம் மற்றும் கட்டிடங்கள் திணைக்களமும் இயந்திரப் பொறியியல்சார் பணிகளை நிறைவேற்றுவதற்காக “ஏ” தரத்தைச் சேர்ந்த திணைக்களமாக அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களமும் 1971.01.10 ஆம் திகதி தாபிக்கப்பட்டன.

### நோக்கு

நிலைபேறான அபிவிருத்தி ஊடாக, இலங்கை இயந்திரப் பொறியியல் துறையில் உற்பத்தி, சேவைகள் மற்றும் பயிற்சியளிக்கின்ற மிகச் சிறந்த அரச நிறுவனமாதல்.

### செயற்பணி

“அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களுக்கு, இயந்திரப் பொறியியல் துறையின் வேலைகள், உற்பத்தி, சேவைகள் மற்றும் மதியுரைச் சேவைகளை வழங்குதல். தொழில்நுட்ப பொறியியல்துறை பயிலுனர்கள், தொழில்சார் பொறியியலாளர்களுக்கு வேலைகள் மற்றும் சேவைகள் தொடர்பான செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்.”

## 6.2 திணைக்களத்தின் பிரதான பணிகள.

### (அ) உற்பத்தித் துறை

**அரச மற்றும் தனியார் துறைக்கு உலோக மற்றும் பலகை மூலமான தளபாட உற்பத்திகள்**

- நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ உபகரணங்கள், வைத்தியசாலை உபகரணம் உற்பத்தி
- தளபாட உற்பத்திகள்
- சீனச்சட்டி மற்றும் நிபெரஸ் வார்ப்பு உற்பத்திகள்
- பொலிஸ் திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வ பட்டி, நட்சத்திரம், இலக்கத் தகடுகளை உற்பத்தி செய்தல்.
- தபால் திணைக்களம் மற்றும் வேறு திணைக்களங்களுக்குத் தேவையான தினக் குற்றிகள், ஆண்டுக் குற்றிகளை உற்பத்தி செய்தல்.
- பெயர்ப் பலகைகள்

### (ஆ) நிர்மாணத் துறை (கனரக காய்ச்சி ஒட்டுதல்)

- நீர்ப்பாசன கதவுகள் மற்றும் நீர்த்தேக்கங்களுக்கு பல்வேறு வகையிலான கதவுகள் மற்றும் அம்சங்களை வடிவமைத்தல், உற்பத்தி மற்றும் பொருத்தல்.
- தொல்பொருள் ரீதியில் முக்கியமான விஹாரைகள் மற்றும் மற்றும் புத்தர் சிலைகளுக்கான பாதுகாப்பு வேலி மற்றும் பாதுகாப்புக்கான கூரைகளை நிர்மாணித்தல்

- உலோக சட்டகங்களக் கொண்ட கட்டிடங்களை நிர்மாணித்தல்.
- கட்டிடங்களில் பலகை மற்றும் உலோக கூரைகளை நிர்மாணித்தல்
- வைபவங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளின் தலைவர்கள், விசேட அதிதிகளுக்கான விசேட மேற்புற கூரைகள், மேடைகள், கூடங்களை ஏற்பாடு செய்தல்.
- இரும்புப் பாலம்
- நீர்ச் சுத்திகரிப்பு தாங்கிகள்

### (இ) புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புத் துறை

- வைத்தியசாலைகள் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள், இலகு கைத்தொழில் நிறுவனங்களின்இயந்திரங்கள், உபகரணங்களை புதுப்பித்தல்
- நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் நீர் முகாமைத்துவ அணைக்கட்டுக்களினதும், நீர்த்தேக்கங்களின் கதவுகள் மற்றும் அம்சங்களை புதுப்பித்தல்
- அலுவலகங்களின் தளபாடங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்.
- தட்டச்சு இயந்திரம் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரம் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல்
- அரச நிறுவனங்களின் வாகனங்களை சேர்விஸ் செய்தல்.

### (ஈ) இயந்திரப் பொறியியல் மதியுரைச் சேவைகள்

- பொறியியல் பட்டப் பின் படிப்பு, பொறியியல் பட்டப் படிப்பை மேற்கொள்வோர், பல்வேறு பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களுக்கு பயிற்சிளித்தல்.
- அரச நிறுவனங்களின் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான அறிக்கைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- அரச நிறுவனங்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் தொழில்நுட்ப துறைசார் உறுப்பினர்களாக பங்கேற்றல்.
- இயந்திரப் பொறியியல் உற்பத்திகள் மற்றும் சேவைகள் மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்



தொண்டமானாறு அணை நீர் கட்டுப்பாட்டு கதவுகள்



டெதுரு ஓயா திட்டத்தின் வாயில் தூக்கும் முறை



மாலிகாவில கூரை



ஹபுகல நீர் சுத்திகரிப்பு பிரிவு

## 6.3 ஆண்டில் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் .

### ( 2024.12.31 ) - செய்யப்பட்ட வேலை முற்பணம்

| | திட்ட விவரங்கள் | இலக்கு 20 2 4 | | முன்னேற்றம் 2024 .12.31 வரை | |
|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு ( ரூ.எம்) | பௌதிக (%) | செலவு ( ரூ.எம்) | பௌதிக % |
| 1 | ஊவா குடாஓயா நீர்த்தேக்கத்தில் 01 நீர் கட்டுப்பாட்டு கதவுகள் மற்றும் நிலையான சக்கர கதவுகளை தயாரித்தல் மற்றும் நிறுவுதல் மற்றும் 02 வான் கதவுகளுக்கு ஹைட்ராலிக் தூக்கும் அமைப்பை நிறுவுதல் | 145 | 100 | 4.29 | 3 |
| 2 | 2024 தேசிய சுதந்திர தினத்திற்கான VVIP, VIP மேடை அமைப்பு , நிறுவல் செய்கிதல் மற்றும் போக்குவரத்து செய்தல் வசதிகள் | 48 | 100 | 39.42 | 100 |
| 3 | அல்லேவவ வார்ப்பிரும்பு ஸ்லூஸ் கேட்களை, அவசரவாயில்களை உருவாக்குதல் , வழங்குதல் மற்றும் நிறுவுதல் | 30 | 100 | 3.56 | 12 |
| 4 | மின்சாரம் , இயந்திரம் , இயந்திரம் பழுது மற்றும் பராமரிப்பு அலகு மூலம் செய்யப்படுகிற பணிகள் | 10 | 100 | 4.45 | 45 |
| 5 | கனரக செயலாக்க அலகு மூலம் நிகழ்த்தப்படுகின்ற பணிகள் | 20 | 100 | 68.31 | 100 |
| 6 | இயந்திர மரம் மற்றும் மரத்தளபாட பொருட்கள் உற்பத்தி அலகு மூலம் செய்யப்படும் செயல்பாடுகள். | 20 | 100 | 18.09 | 100 |
| 7 | ஒளி செயலாக்க அலகு மூலம் செய்யப்படும் பணிகள் | 20 | 100 | 28.20 | 100 |
| 8 | வார்ப்பு அலகு மூலம் செய்யப்படும் செயல்பாடுகள் | 30 | 100 | 41.68 | 100 |
| 9 | ஒளி பொறியியல் வேலை அலகு மூலம் நிகழ்த்தப்பட்ட பணிகள் | 18 | 100 | 26.50 | 100 |
| 10 | வாகன பழுதுபார்க்கும் அலகு மூலம் செய்யப்படும் செயல்பாடுகள் | 02 | 100 | 2.64 | 100 |
| 11 | பராமரிப்பு பிரிவு | 03 | 100 | 9.14 | 100 |
| | **மொத்த தொகை** | **346** | | **246.28** | |

## 6.4 ஆம் ஆண்டில் திட்ட செயல்படுத்தலில் எதிர்கொள்ளும் சாதனைகள் மற்றும் சவால்கள்

### சிறப்பு சாதனைகள்

- 2024 ஆண்டில் ISO 9001:2015 சர்வதேச தர அமைப்பு சான்றிதழ் புதுப்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, CIDA நிறுவனத்தின் கட்டுமானத்திற்காக EMI (ஹெவி ஸ்டீல் ஃபேப்ரிகேஷன்) 2024 இல் புதுப்பிக்கப்பட்டது. EMF (எலிவேட்டர்கள், எஸ்கலேட்டர்கள் & வெளிப்படுத்துபவர்கள்) 2024 இல் புதுப்பிக்கப்பட்டது . SP2 கார்பென்ட்ரி & ஜாய்னரி) 2024 இல் புதுப்பிக்கப்பட்டது.
- தனியார் நிறுவனங்களுக்கு போட்டியாக நீர் கட்டுப்பாட்டு வாயில்கள் குறைந்தபட்ச விலை செலவில் செய்து நிறுவ முடிந்தது.

- இறக்குமதி செய்யப்பட்ட நீர் சுத்திகரிப்பு தொட்டி அமைப்புக்கு பதிலாக உள்ளூர் வெள்ளை இரும்பைப் பயன்படுத்தி குறைந்த செலவில் நீர் சுத்திகரிப்பு தொட்டி அமைப்பை வடிவமைத்து உருவாக்கவும் செய்ய முடிந்தது.
- பாரம்பரிய உற்பத்தி இயந்திரங்களுக்குப் பதிலாக நவீன தொழில்நுட்பத்துடன் இயந்திரங்களை வாங்குவதன் மூலம் வினைத்திறனான பொருட்களை தாயாரிக்க முடிந்தது.

### சவால்கள்

- தொழில்நுட்ப மற்றும் அலுவலர்களின் நீண்டகால வெற்றிடங்கள் நிரப்பும் பொறிமுறை இல்லாதது.

  எ.கா., சாரதிகள் பணியிடங்கள் இருப்பதால், லொரிகள், கிரேன்கள் போன்றவற்றை இயக்க ஓட்டுனர்கள் இல்லாததால், அந்த வாகனங்களை வெளித்தரப்பினரிடம் இருந்து வாடகை அடிப்படையில் பெற வேண்டிய நிலை உள்ளது. இதன் காரணமாக, கூடுதல் செலவினங்களைச் சுமக்க வேண்டியுள்ளதுடன், தொடர்புடைய செயற்திட்டகாலம் நீட்டிக்கப்படுவதற்கு ஒரு காரணமாகும்.
- மெக்கானிக்கல் இன்ஜினியரிங் கட்டுமான சேவைகள் மற்றும் தயாரிப்புகளுக்கான சந்தை தரநிலைகள் இல்லாதது மற்றும் இதை கவனிக்க ஒழுங்குமுறை அமைப்புகள் இல்லாதது.
- அரசு நிறுவனங்களிடம் இருந்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு உரிய காலத்தில் பணம் வராதது.
- பொதுக் கொள்கை அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகளுக்கு இணங்க வேண்டியதன் காரணமாக தனியார் நிறுவனங்களுடன் போட்டித்தன்மையுடன் திட்டங்களை செயல்படுத்துவதில் சிரமம்.
- செயல்திறன் பத்திரங்கள், ஏலப் பத்திரங்கள் மற்றும் மற்ற பத்திரங்களை முன்வைக்க இயலாமை.
- 2013ஆம் ஆண்டு முதல் பிஎல் பிரிவில் உள்ள வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு செய்ய வாய்ப்பு இல்லாததால் பிஎல் பிரிவில் உள்ள வெற்றிடங்கள் நிரப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## 6.5 செயல் திட்டம் - 2025

| | துணை திட்டம் / துணை நடவடிக்கைகள் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.எம்) | 2025 ஆம் ஆண்டிற்கு தேவையான ஏற்பாடுகள் (ரூ. மீ) |
|---|---|---|---|
| 1 | ஊவா குடு ஓயா - உமா நதி திட்டம் உள்ளே ரேடியல் வாயில்கள் 02 க்கான ஹைட்ராலிக் தூக்குதல் பொறிமுறை செயலாக்கம் மற்றும் நிறுவல் | 125 | 1 0 5 |
| 2 | 2025 தேசிய சுதந்திர தினத்திற்கான VVIP, VIP தளங்கள் அமைப்பு , நிறுவல் செய்ய , மற்றும் போக்குவரத்து வசதிகள் | 25 | 25 |
| 3 | அல்லேவவ பகுதியில் வார்ப்புகள் இரும்பு மதகுகள் கதவுகள் அவசரம் வாயில் தயாரிப்பு , வழங்கல் மற்றும் நிறுவல் செய்தல் | 21 | 15 |
| 4 | ஹபுகல தண்ணீர் சுத்திகரிப்பு தொகுப்புகள் வகையான தண்ணீர் ஒரு சுத்திகரிப்பு நிலையம் கட்டுமானம் | 143 | 80 |

| | | | |
|---|---|---|---|
| 5 | திஸ்ஸமஹாரத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு சீர்திருத்தம் செய்தல் | 28 | 28 |
| 6 | ஹீன் கால்வாய் , அம்பத்தலே தண்ணீர் முகாமைத்துவ வாயில் கட்டுமானம் | 27 | 27 |
| 7 | அம்பாறை பல்லனஓயா நீர்த்தேக்கம் சீர்திருத்தம் செய்தல் , நீர்பாசனத் திணைக்களம் | 30 | 30 |
| 8 | இயந்திரங்கள் அலகு ( பட்டறை 01) - இயந்திரங்கள் , தனியார் மற்றும் அரச துறை வேலை | 6 | 6 |
| 9 | கனரக செயலாக்க அலகு ( பட்டறைகள் 02) - ஏனைய வேலைகள் | 10 | 10 |
| 10 | தச்சர் தொழில்துறை அலகு ( பட்டறை 03) (அரச மற்றும் தனிப்பட்ட பிரிவு க்கான மரம் வீட்டுப்பாவனைப் பொருட்கள் உற்பத்தி ) | 15 | 15 |
| 11 | இலகுரக தயாரிப்புகள் அலகு - ( பட்டறைகள் 04) மருத்துவமனைகள் மரச்சாமான்கள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு வேலைகள் | 15 | 15 |
| 12 | வார்ப்புகள் அலகு - ( பட்டறைகள் 06) அரச மற்றும் தனிப்பட்ட பிரிவு க்கான இரும்பு மற்றும் இரும்பு அல்லாத பொருட்கள் வார்ப்புகள் வேலைகள் | 25 | 25 |
| 13 | இலகுரக பொறியாளர் அலகு - ( பட்டறைகள் 07) அரச மற்றும் தனிப்பட்ட பிரிவு க்கான இலகுரக பொறியாளர் செயற்பாடுகள் | 15 | 15 |
| 14 | பராமரிப்பு பிரிவு ( பட்டறைகள் 14,16) | 04 | 04 |
| | **மொத்தம்** | **489** | **400** |

# 07 தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம்

## 7.1 அறிமுகம்

1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நகர மற்றும் கிராம கட்டமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1947 ஆம் ஆண்டில் நகர மற்றும் கிராம கட்டமைப்புத் திணைக்களம் உருவாக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து துறைவாரியான அபிவிருத்தியொன்றோடும் பிரதேச அபிவிருத்தியொன்றோடும் கைகோர்த்த பேண்தகு அபிவிருத்திச் செயன்முறையொன்றின் தேவை எழுந்தமையால், அதற்கொரு தீர்வாக தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட தேசிய பௌதிக திட்டமொன்றைத் தயாரிப்பதை நோக்காகக் கொண்டு 2000 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க நகர மற்றும் கிராம கட்டமைப்பு திருத்தச் சட்டத்தினால் 2000 ஆம் ஆண்டில் இத்திணைக்களம் தேசிய பௌதிக திட்ட திணைக்களமாக மீள்கட்டமைக்கப்பட்டது. அதன்படி, தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையொன்றை அடிப்படையாகக் கொண்ட தேசிய பௌதிக திட்டத்தைத் தயாரித்த பின் அதற்கு இயைபானதாக இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கு வெவ்வேறாக அந்தந்த மாகாணங்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டும், தற்போதைய வளங்களை உயர்ந்தபட்சம் பயன்படுத்திக்கொண்டும், பேண்தகு அபிவிருத்திக்கான வழிகாட்டலொன்றை வழங்குவதற்கு வலய பௌதிக திட்டங்களைத் தயாரிப்பதற்கும், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நகர அபிவிருத்திப் பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்படாத பிரதேசங்களின் உள்ளூர் அதிகாரசபைகளின் கோரிக்கையின் பேரில் பிரதேச பௌதிக திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

### நோக்கு

“நேர்த்தியான, பேண்தகு, அழகிய நிலத்தின் முன்னோடி”

### பணி

- தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையொன்றை தயாரித்தல்.
- இலங்கையில் காணிகளின் பொருளாதார, சமூக, பௌதிக மற்றும் சூழல் துறைகளில் ஒருங்கிணைந்த திட்டமிடலை ஊக்குவிப்பதையும் ஒழுங்குபடுத்துவதையும் நோக்காகக்கொண்டு தேசிய பௌதிக திட்டமொன்றைத் தயாரித்தல்.
- வலய, பிரதேச பௌதிக திட்டங்கள் மூலம் அத்தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையையும் தேசிய திட்டத்தையும் அமுல்படுத்துதல்.
- வலய அல்லது பிரதேச பௌதிக திட்ட அலுவலர்களினால் பின்பற்றுவதற்காக பௌதிக திட்ட முன்னோடி அறிவுறுத்தல்களைத் தயாரித்தல்.
- இயற்கை வசதிகளைப் பாதுகாத்தல், இயற்கைச் சூழல், கட்டிடக்கலை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களையும் அழகிய இயற்கைத் தலங்களையும் பேணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வித்தல்.

### முக்கிய பணிகள்

- தேசிய பௌதிக கட்டமைப்புக் கொள்கையொன்றைத் தயாரித்தல்.
- தேசிய பௌதிக திட்டமொன்றைத் தயாரித்தல்.
- வலய அல்லது பிரதேச பௌதிக திட்டமிடல் அதிகாரிகளினால் பின்பற்றுவதற்காக பௌதிக திட்டமிடல் முன்னோடி அறிவுறுத்தல்களைத் தயாரித்தல்.
- வலய அல்லது பிரதேச பௌதிக திட்டமிடல் அதிகாரிக்கு யாதேனுமொரு வலய அல்லது பிரதேச திட்டத்தைத் தயாரிக்க முடியாதிருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறான ஒரு திட்டத்தைத் தயாரிக்குமாறு அந்த அதிகாரி கோருமிடத்து அவ்வாறான யாதேனும் வலய அல்லது பிரதேச திட்டமொன்றைத் தயாரித்தல்.

- வலய பௌதிகத் திட்டங்களைத் தயாரிக்கும்போதும் அபிவிருத்தி செய்யும்போதம் மாகாண சபைகளுக்கு உதவுதல்.
- தேசிய பௌதிக கட்டமைப்புச் சபைக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு தேசிய பௌதிக கட்டமைப்புக் கொள்கைக்கு அமைவாக அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சிபார்சுகளைச் சமர்ப்பித்தல்.
- தேசிய பௌதிக கட்டமைப்புக் கொள்கை, தேசிய பௌதிக திட்டம், அமுல்படுத்தப்பட்டு வரும் தேசிய பௌதிக திட்டங்கள் என்பவற்றை அவ்வப்போது மீளாய்வு செய்தலும் பரிசீலித்தலும் தேவைப்படும் பட்சத்தில் அக்கொள்கை, திட்டத்தின் மூலோபாயங்களில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சிபார்சு செய்தல்.
- தேசிய பௌதிக கட்டமைப்புச் சபையினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள தேசிய பௌதிக திட்டம் அமுல்படுத்தப்படுவதை ஒழுங்குபடுத்துதல்.
- தேசிய பௌதிக கட்டமைப்புச் சபை மற்றும் அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவினால் நிறைவேற்றுமாறு கோரப்படக்கூடிய செயலகமொன்றின் பணிகளை ஆற்றுவதும் உள்ளிட்ட, சபையினதும் ஒருங்கிணைப்புக் குழுவினதும் அனைத்துச் செயற்பாடுகளின்போதும் சபைக்கும் ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் உதவுதல்.

## 7.2 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| தொ. இல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.) | நிதி ஒதுக்கீடு 2024 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 | | பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| | | | | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | % | |
| 1 | தேசிய பௌதிக திட்டக் கொள்கையைத் தயாரித்தலும் தேசிய பௌதிக திட்டத்தைத் தயாரித்தலும் (இலங்கையின் தேசிய பௌதிக திட்டத்தை முன்னேற்றுதல்) | | | | | 98 |
| 2 | பிரதேச அல்லது வலய பௌதிக திட்டமிடல் அதிகாரிகளினால் பின்பற்றுவதற்காக பௌதிக திட்ட வழிகாட்டல்களைத் தயாரித்தல். | | | | | 10 |
| 3 | கிழக்கு மாகாண பிராந்திய பௌதிக திட்டம் - 2035 ஐத் தயாரித்தல் | 10 | 10 | 0.43 | 4.3 | 95 |
| 4 | மத்திய மாகாண பிராந்திய பௌதிக திட்டம் - 2035 ஐத் தயாரித்தல் | | | | | 60 |
| 5 | மத்திய சுற்றாடல்சார் கூருணர்வுமிகு வலயத்தினுள் திட்ட நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல்களைத் தயாரித்தல் | | | | | 15 |
| 6 | பிரதேச சபை எல்லைகளில் அமைந்துள்ள நகரப்புறங்களை அடையாளம் காணலும் வெளியிடுதலும். | | | | | 90 |
| 7 | அநுராதபுரம் லோலுகஸ்வெவ மீள்குடியேற்றக் கருத்திட்டம் - மீள்குடியேற்ற செயல்திட்டத்தைத் தயாரிப்பதற்காக மதியுரை நிறுவனமொன்றை மீண்டும் தெரிவுசெய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் | 1450 | 20 | 0.16 | 0.8 | 5 |
| 8 | 1,043 புனித பூமிகளை வர்த்தமானியின் மூலம் வெளியிடுதல் | | | | | 36.2 |
| 9 | புனிதபூமி திட்டங்களுக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல் | | | | | 100 |
| 10 | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 4.76 | 4.76 | 4.56 | 96 | 100 |

## 7.3 2024 ஆம் ஆண்டில் கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது அடைந்த வெற்றிகளும் எதிர்நோக்கிய சவால்களும்

திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் போது, மனிதவளப் பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிட்டமை முக்கிய ஒரு சவாலாக இருந்தது. அனுமதித்த பணியாட்குழுவில் 65% க்கும் குறைந்த எண்ணிக்கையினரே திணைக்களத்தில் தற்போது பணிபுரிகின்றனர். தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் திட்டமிடல் தொடர்பான இலங்கையின் முக்கிய நிறுவனமாக இருந்தபோதும், இங்கு திட்டமிடல் சம்பந்தமாக 02 மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிகளுக்கும், நிறைவேற்று மட்டத்தில் 04 பணிப்பாளர் பதவிகளுக்கும், 30 பணிப்பாளர் பதவிகளுக்கும் வெற்றிடங்கள் நிலவுகின்றன. இரண்டாம்நிலை மட்ட அனுமதித்த 34 பதவிகளில் 28 பேரைக் கொண்ட தொழில்வாண்மையினர் மாத்திரமே தற்போது திட்டமிடலில் ஈடுபட்டு வருகின்றனர்.

## 7.4 2025 ஆம் ஆண்டில் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் பற்றிய விபரங்கள்

| முக்கிய விடயத் துறை | நிகழ்ச்சித்திட்டம் | நிதி இலக்கு (ரூ.மி.) | நிதி மூலம்) | பௌதிக இலக்கு |
|---|---|---|---|---|
| திட்டமிடல் | தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையைத் தயாரித்தலும் தேசிய பௌதிக திட்டத்தைத் தயாரித்தலும், இலங்கையின் தேசிய பௌதிக திட்டமிடலை முன்னேற்றுதலும். | 10 | வருடாந்த வரவு செலவுத் திட்டம் | தேசிய பௌதிக திட்டத்தைத் தயாரித்தல் |
| | பிரதேச அல்லது வலய பௌதிக திட்டமிடல் அதிகாரிகள் பின்பற்றுவதற்கான பௌதிக திட்டமிடல் வழிகாட்டல்களைத் தயாரித்தல் | | | வழிகாட்டல்களைத் தயாரித்தல் |
| | கிழக்கு மாகாண பிராந்திய பௌதிக திட்டம் 2035 ஐத் தயாரித்தல் | | | திட்டத்தைத் தயாரித்தல |
| | மத்திய மாகாண பிராந்திய பௌதிக திட்டம் 2035 ஐத் தயாரித்தல் | | | திட்டத்தைத் தயாரித்தல |
| | மத்திய சுற்றாடல் அதிககூருணர்வு வலயத்தில் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல்களைத் தயாரித்தல் | | | வழிகாட்டல்களைத் தயாரித்தல் |
| | பட்டிபொல சேவை நிலையத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல் | | | திட்டத்தைத் தயாரித்தல |
| | கட்டுகெலியாவ சேவை நிலையத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல் | | | திட்டத்தைத் தயாரித்தல |
| | அநுராதபுரம் லோலுகஸ்வெவ மீள்குடியேற்றக் கருத்திட்டத்தை அமுல்படுத்தல் | 25 | | வதிபவர்களை மீள்குடியேற்றல் |
| | 83 புனிதபகுதிகளை வர்த்தமானியில் வெளியிடுதலும் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த புனித பகுதிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலும் | | | புனிதபகுதிகளை வர்த்தமானியில் வெளியிடுதலும் திட்டங்களைத் தயாரித்தலும் |
| அபிவிருத்தி | புனித பகுதி திட்ட மாதிரித் திட்டங்களுக்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல் | | | தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல் |
| | உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 7 | | கருத்திட்டத்தை அமுல்படுத்தல் |

# 08 நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

## 8.1 அறிமுகம்

இலங்கையில் நிர்மாணத் தொழிலை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் 1981 ஆம் ஆண்டு உலக வங்கி உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணத் தொழில் பயிற்சிக் கருத்திட்டம் (CITP- Construction Industry Training Project) தாபிக்கப்பட்டதுடன், இது 1986 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டிருப்பது அதன் தலைமை அலுவலகம் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (ICTAD-Institute for Construction Training and Development) என 1957 ஆம் ஆண்டின் அரச கைத்தொழில் மற்றும் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதன் மூலமாகும்.
இதனை அடுத்து நிர்மாணத் தொழிலை ஒழுங்குறுத்தும் நிறுவனம் மற்றும் ICTAD இன் சட்ட ரீதியான நிறுவனமாக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டது.

### நோக்கு

பூகோள தரநியமங்களுக்குச் சமாந்தரமாக செயற்படுகின்ற நம்பிக்கை மற்றும் உகந்த நிர்மாணத் தொழிலை இலங்கையில் உருவாக்குதல்.

### செயற்பணி

தேசிய நிர்மாணக் கைத்தொழில் ஊடாக ஒழுங்குவிதிகளை ஆக்குதல், திறன் விருத்தி மற்றும் மேம்படுத்துவதன் மூலம் நிலைபேறான தேசிய அபிவிருத்திக்கு காரணமாக அமைகின்ற பூகோள மற்றும் உள்நாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய உயர் தரநியமங்களை மேம்படுத்துவதன் மூலம் பலம்வாய்ந்த மற்றும் தொழில்சார் தரத்தைக் கொண்ட கைத்தொழிலை உறுதி செய்வதன் மூலம் இலங்கையில் நிர்மாணத் தொழிலுக்கு உபாயமுறையிலான தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

## 8.2 பிரதான பணிகள்

- நிர்மாணத் தொழிலுக்கான கொள்கைகளை வகுத்தல்.
- ஒப்பந்ததாரர்கள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினர்களை பதிவு செய்தல்.
- நிர்மாணத் தொழிலுக்கான நியம விலைமனு ஆவணங்கள் மற்றும் வகைப்படுத்தல்களை தயார் செய்தல்.
- நிர்மாணத் தொழில் கலைஞர்களை பயிற்றுவித்தல் மற்றும் பதிவு செய்தல்.
- நிர்மாணத் தொழிலின் பிணக்குகள் மற்றும் சிக்கல்களை தீர்த்துவைப்பதற்கு தலையீடு செய்தல் மற்றும் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.

## 8.3 2024 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் | பயனாளிகளின் எண்ணிக்கை | ஏற்பாடு – 2024 ரூ.மி. | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 | | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | (%) | |
| 1 | இனங்காணப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்கு நிர்மாண ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் | 160mn | 2100 | - | 123.19 | 77 | 118 |
| 2 | மென்பொருள் அபிவிருத்திக் கருத்திட்டம் | 10mn | - | 10 (திறைசேரி நிதி) | 6.8 | 68 | 32 |
| 3 | நிர்மாணக் கைத்தொழிலின் பிணக்குகளை தீர்த்து வைக்கும் சேவைகளை ஆற்றல் | 2mn | 22 | - | 2.124 | 106.2 | 140.9 |
| 4 | நிர்மாணக் கைத்தொழிலுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குதல். | - | 800 | - | 0.542 | | 25.8 |
| 5 | நிர்மாணக் கைத்தொழில் கலைஞர்களை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குதல். | 1mn | 500 | - | 1.57 | 157 | 76.2 |
| 6 | சீடு நிகழ்ச்சித்திட்டம் ஊடாக நிர்மாணக் கலைஞர்களுக்கு ஏரூ சான்றிதழ் வழங்குதல் | 10.35mn | 750 | - | 5.687 | 55 | 55.8 |
| 7 | ஊநுவுசுயுஊ – நிர்மாண உபகரணம் இயக்கும் கலைஞர்களுக்கான பாடநெறி ஏரூ 04 – ஊநுஆ (02 வருடம்) | 16mn | | | 16 | 100 | 100 |
| 8 | ஊநுவுசுயுஊ – நிர்மாண உபகரணம் பராமரிப்பு பற்றிய தேசிய டிப்ளோமா ஏரூ 05∴06 (02 ½ வருடம்) | 6mn | | | 1.86 | 31 | 46.6 |
| 9 | முவுஊ – திரட்டிய நிதி மூலம் புனர்வாழ்வளிக்கப்படுவோர் 100 பேரை பெகோ இயந்திர இயக்குனர்களாக பயிற்றுவித்தல் | 3.50mn | 100 | 0.7 (திறைசேரி நிதி) | 0.7 | 20 | 20 |
| 10 | முவுஊ - நிர்மாண உபகரணங்களை இயக்குநர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் (3 மாதம்) | 34.96 | 300 | - | 19.55 | 55.9 | 303.3 |
| 11 | ஊரீடீ - 13 ஆண்டுகால தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 29.975 | 73 | - | 29.975 | 100% | 100% |
| 12 | ஊரீடீ – கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் | 4.8 | 1200 | - | 3.932 | 81.9% | 69.6% |

## 8.4 2024 ஆண்டில் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது பெற்றுக் கொண்ட வெற்றிகள் மற்றும் சவால்கள்

- **தேசிய நிர்மாண ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல், தரப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.**

தற்போது கட்டிடங்கள் மற்றும் சிவில் பிரிவு, மின் மற்றும் இயந்திரப் பிரிவு மற்றும் விசேட பிரிவு ஆகிய பிரதான 03 துறைகளின் கீழ் சிடா நிறுவனத்தின் பதிவைப் பெற்றுக் கொண்ட மொத்த ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை 4000 ஆகும்.

- **நிர்மாணத் தொழிலின் தொழில்வல்லுனர்களுக்கு தேசிய தொழில் தகைமைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.**

மேசன், தச்சர், கம்பி வளைப்பவர், நீர்க் குழாய் தொழில்நுட்பவியலாளர், ரயில் பதிப்பவர் ஆகிய துறைகளின் கீழ் நிர்மாணக் கலைஞர்கள் சுமார் 418 பேருக்கு NVQ தகைமை பெற்றுக் கொடுக்கப்பட்டு தொழில்வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **நிர்மாணக் கலைஞர்களுக்கு அடையாள அட்டை வெளியிடல்**

நிர்மாணத் துறையில் 26 துறைகளின் கீழ் NVQ தகைமைத் தேர்ச்சி பெற்ற கலைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அமுலில் உள்ளது. இதுவரை 278 அடையாள அட்டைகள் வறியோகிக்கப்பட்டள்ளன.

- **13 வருட கால தொடர்ச்சியாக கல்வி நிகழ்ச்சித்திட்டம்**

13 வருட கால தொடர்ச்சியாக கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் துறைகளில் பயிற்சி வழங்கி பயிலுனர்கள் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

நிர்மாண இயந்திர உபகரணம் இயக்கும் கலைஞர்கள் - 87
நிர்மாண இயந்திர உபகரண தொழில்நுட்பக் கலைஞர்கள் - 54
உள்ளக அழங்கார கலைஞர்/ நில வடிவமைப்பு அபிவிருத்தி உதவியாளர்/
நிர்மாண வேலைத்தள மேற்பார்வையாளர் - 73

- **நிர்மாணத் தொழில் இயந்திர உபகரணம் இயக்கும் கலைஞர்கள் / நிர்மாண இயந்திர உபகரண தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தேசிய தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்**

நிர்மாண இயந்திரசாதன இயக்குனர்கள் (இயக்கும் கலைஞர்கள்) 406 பேருக்கும் மேல் இதுவரை பயிற்றப்பட்டுள்ளார்கள். NVQ 4 சட்டகத்தின் கீழ் நிர்மாண இயந்திரசாதன தொழில்நுட்பக் கலைஞர்கள் 120 பேர் இத்துறையில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

## 8.5 2025 ஆண்டின் செயற்றிட்டம்

| பிரதான விடயத்துறை | கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதி மூலம் | பௌதீக இலக்கு |
|---|---|---|---|---|
| ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் | இனங்காணப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்கு நிர்மாண ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் | 210 | | 4000 (ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை) |
| தேசிய நிருமாண விருது (2022/2023) | நிர்மாண ஒப்பந்தாரர்களுக்கான தேசிய நிர்மாண விருதுகளை வழங்குதல் | 2.2 | | 43 (விருதுகளின் எண்ணிக்கை) |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | மென்பொருள் அபிவிருத்திக் கருத்திட்டம் | 20 | திறைசேரி நிதி | 100% |
| பிணக்குகளை தீர்த்து வை சேவை | நிர்மாணக் கைத்தொழிலின் பிணக்குகளை தீர்த்து வைக்கும் சேவைகளை ஆற்றல் | 2 | | 22 (பிணக்குகளின் எண்ணிக்கை) |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆலோசனை சேவை | நிர்மாணக் கைத்தொழிலுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குதல். | 0.5 | - | 300 (ஆலோசனைகளின் எண்ணிக்கை) |
| கலைஞர்களை பதிவு செய மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குதல். | நிர்மாணக் கைத்தொழில் கலைஞர்களை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குதல். | 3 | | 1000 (அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை) |
| நிர்மாணக் கலைஞர் பயிற்சி மற்றும் திறன் சான்றிதழ் வெளியீடு | சீடு நிகழ்ச்சித்திட்டம் ஊடாக நிர்மாணக் கலைஞர்களுக்கு ஏஏ சான்றிதழ் வழங்குதல் | 11.7 | | 850 (சான்றிதழ்களின் எண்ணிக்கை) |
| நிர்மாணக் கலைஞர் பயிற்சி மற்றும் திறன் சான்றிதழ் வெளியீடு | ஊநுவுசுயுஊ – நிர்மாண உபகரணம் இயக்கும் கலைஞர்களுக்கான பாடநெறி ஏஏ 04 – ஊநுஆ (02 வருடம்) | 4.5 | திறைசேரி நிதி | 60 (சான்றிதழ்களின் எண்ணிக்கை) |
| நிர்மாணக் கலைஞர் பயிற்சி மற்றும் திறன் சான்றிதழ் வெளியீடு | ஊநுவுசுயுஊ – நிர்மாண உபகரணம் பராமரிப்பு பற்றிய தேசிய டிப்ளோமா ஏஏ 05.்.06 (02 ½ வருடம்) | 6 | | 30 (சான்றிதழ்களின் எண்ணிக்கை) |
| நிர்மாணக் கலைஞர் பயிற்சி | முவுஊ – திரட்டிய நிதி மூலம் புனர்வாழ்வளிக்கப்படுவோர் 100 பேரை பெகோ இயந்திர இயக்குனர்களாக பயிற்றுவித்தல் | 1 | භාණ්ඩාගාර අරමුදල් | 33 (பயிலுனர்களின் எண்ணிக்கை) |
| நிர்மாணக் கலைஞர் பயிற்சி | முவுஊ - நிர்மாண உபகரணங்களை இயக்குநர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் (3 மாதம்) | 20.96 | | 500 (பயிலுனர்களின் எண்ணிக்கை) |
| கல்வி நிகழ்ச்சித்திட்டம் | ஊரீடீ - 13 ஆண்டுகால தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 4.80 | | 60 (பயிலுனர்களின் எண்ணிக்கை) ) |
| நிர்மாணத் துறை மற்றும் வேறு துறைகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் | ஊரீடீ – கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் | 7 | | 1400 (பயிலுனர்களின் எண்ணிக்கை) |

## 8.6 வேறு விடயங்கள்

- நிர்மாத் தொழில் கலைஞர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்கு அரச அனுசரணை பெற்றுக் கொள்ளல்.
- நிர்மாத் தொழில் அபிவிருத்தி நிதியை தாபித்தல்
- நிர்மாத் தொழில் பற்றிய தேசிய மதியுரைப் பேரவையை தாபித்தல்
- நிர்மாத் தொழில் முகம் கொடுக்கின்ற சிக்கல்கள் தொடர்பில் தயார் செய்யப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள குழுவை நியமனம் செய்தல்.
- நிர்மாத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையை தொடர்ந்தும் சவ்சிறிபாய கட்டிடத்தில் பேணிவருவது தொடர்பிலான தற்போதைய நிலைமை
- பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல்
- நிர்மாத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சட்ட நடவடிக்கைகளுக்கு சட்ட மாஅதிபரின் உதவியைப் பெற்றுக் கொள்ளத் தேவையான அமைச்சின் தலையீடு.

# 09 நகர்ப்புற குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

## 9.1 அறிமுகம்

2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைய நகர்ப்புற குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை தாபிக்கப்பட்டது. "பெருமைக்குரிய ஒரு வாழ்விற்கான பேண்தகு நகர்ப்புற குடியிருப்புகளைக் கட்டியெழுப்புதல்" என்ற தொனிப்பொருளில் திட்டமிடப்பட்ட, ஒருங்கிணைந்த, பேண்தகு நகர்ப்புற குடியிருப்புகளைக் கட்டியெழுப்புதலும் பௌதிக, சமூக, பொருளாதார ரீதியாக சமுதாயங்களை வலுவூட்டுதலும்" என்ற பணிக்கூற்றின்படி இந்த அதிகாரசபையினால் பௌதிக அபிவிருத்தி, சமூக அபிவிருத்திக்கான இரு வகை அணுகுமுறைகளின் ஊடாக வீடமைப்புக் கருத்திட்டங்களும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

### பௌதிக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பௌதிக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர்ப்புற குறைந்த வருமானம்பெறும் சமூகங்களை மீள்குடியேற்றுவதற்கு அவசியமான வீடுகளையும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குதல், தரமற்ற வீட்டு அலகுகளை முன்னேற்றுவதற்காக காணி உரித்துள்ளபோதும் முறையான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு நிதி வசதிகளையும் நிர்மாண ஆலோசனைகளையும் வழங்குவதற்கான கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், மீண்டும் பயனாளிகளை இடவமர்த்தும்போது விடுவிக்கப்பட்ட காணிகளை மீண்டும் முதலீடுசெய்வதற்கு வாய்ப்பளித்து அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் கருத்திட்டங்களில் ஈடுபடுத்திக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல், அரச-தனியார் பங்காண்மை (PPP) அணுகுமுறையின் கீழ் சுமக்கக்கூடிய விலைக்கு வீடுகளை வழங்குவதற்கும் நடுத்தர வருமானம் பெறுவோரின் வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

### சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர்ப்புற வசதியிற் குறைந்த சமூகத்தவரின் சமூக, பொருளாதார, கல்வி, சுகாதார, மத, கலாசார ரீதியாக வாழ்க்கைத் தரத்தை அதிகரித்தலும் அவர்களில் அறிவு, திறன்கள், மனப்பாங்குகளை விருத்திசெய்து அவர்களுக்கு சொந்தக் காலில் எழுந்துநிற்கும் நிலைக்கு எழுப்பிவிடுவதற்கு அவசியமான ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது.

## 9.2. 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| இல. | கருத்திட்டப் பெயர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.) | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு 2024 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 | | பௌதிக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | (%) | |
| **பௌதிக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | | |
| 1 | பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் மேலதிக வேலைகள் | 227.66 | 1,713 | 227.66 | 9.00 | 3.95 | 31 |
| **நடுத்தர வகுப்பு வீடமைப்புக் கருத்திட்டங்கள் (முக்கிய ஒப்புதல்களையும் அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளலும் காணி உரித்தாக்கலும்)** | | | | | | | |
| 2 | வத்தளை, வெலிசர வீடமைப்புக் கருத்திட்டம் | 8,342.00 | 408 வீடமைப்பு அலகுகள் | 54.65 | 2.40 | 4.39 | 2 |
| 3 | நிட்டம்புவ, ஓர்சட்வத்த வீடமைப்புக் கருத்திட்டம் | 2,412.00 | 130 வீடமைப்பு அலகுகள் | 46.45 | 0.421 | 1 | 15 |
| 4 | ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே கலந்து அபிவிருத்தி வீடமைப்புக் கருத்திட்டம் | 8,278.00 | 168 வீடமைப்பு அலகுகள் | 7.10 | 0.12 | 2 | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | ஹிக்கடுவ, துடுவேகொட வீடமைப்புக் கருத்திட்டம் | 5,884.45 | 200 வீடமைப்பு அலகுகள் | 12.90 | - | - | 1 |
| 6 | கடுவல கலப்பு அபிவிருத்தி வீடமைப்புக் கருத்திட்டம் | 4,020.00 | 108 வீடமைப்பு அலகுகள் | 7.71 | - | - | - |
| 7 | அத்துருகிரிய வீடமைப்புக் கருத்திட்டம் | 4,205.00 | 112 வீடமைப்பு அலகுகள் | 62.07 | - | - | 0.01 |
| 8 | புதிய காணிகளை அடையாளம் காணல் | 1.00 | - | 1.00 | - | - | - |
| **சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | | |
| 9 | சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (சமுதாய வலுவூட்டுகை நிகழ்ச்சித்திட்டம், கல்வி நிகழ்ச்சித்திட்டம், முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், சமூக கலாசார நிகழ்ச்சித்திட்டம்) | 20.36 | 11,397 | 20.36 | 6.04 | 30 | 68 |
| **வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | | | | |
| 10 | உலக குடியிருப்பு தினம் | 5.00 | - | 5.00 | 4.07 | 81 | 81 |
| 11 | நகர்ப்புற குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடாத்தப்படும் கருத்திட்டங்களின் எண்ணக்கருவை சமூகமயப்படுத்தல் | 5.00 | - | 5.00 | 0.029 | 1 | 0.1 |

## 9.3. 2024 ஆம் ஆண்டில் கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது அடைந்த வெற்றிகள்

- லுனாவ வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை கூட்டாட்சி ஆதனமொன்றாக வெளிப்படுத்தும் இறுதி சான்றிதழைப் பெற்றுக்கொண்டது.
- இந்த அதிகார சபையினால் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களின் உரிமைப் பத்திரங்கள் இவ்வருடம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.
- சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 17 குடியிருப்புகளின் 1,000 பிள்ளைகளின் பங்கேற்புடன் மரநடுகை மற்றும் சிரமதான நிகழ்ச்சித்திட்டங்கள் குடியிருப்புகள் வாரியாக சமுதாய சங்கங்களையும் சிறுவர் சங்கங்களையும் இணைத்துக்கொண்டு மேற்கொள்ளப்பட்டன.





- அதேபோல், ‘இளைஞர் பலம் நிறை ஒரு நகரம்’’ என்ற தொனிப்பொருளின் கீழ் 38 ஆவது உலக குடியிருப்பு தினம் இம்முறையும் கொண்டாடப்பட்டது.





## 9.4. எதிர்நோக்கிய சவால்கள்

- பௌதிக, சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்துவதற்காக இந்த அதிகாரசபையின் செயற்பாட்டு வலையமைப்பை விஸ்தரிக்க வேண்டியுள்ளமை.
- நகர்ப்புற இலக்கிட்ட பயனாளிகளுக்கு சுமக்கக்கூடிய விலைக்கு வீடுகளை வடங்குவதற்கு தற்போதுள்ள சவால்கள், நகர்ப்புற அதிகாரப்பகுதிகளில் காணப்படும் காணிகள் வரையறுக்கப்பட்டதாக இருத்தலும் அடையாளம் காணப்பட்ட காணிகளை அபிவிருத்திசெய்யும்போது எதிர்நோக்க நேரிடும் பிரச்சினைகளும்.
- அதிகரித்துச் சென்றுள்ள நிதிக் கிரயத்திற்கு (Finance Cost) மத்தியில் அபிவிருத்தியாளர்களின் பங்கேற்பு குறைவாக இருத்தல்.
- பொதுத் திறைசேரிக்கு சுமையாக அமையாதவாறு அரச-தனியார் ஒருங்கிணைந்த அணுகுமுறையொன்றின் கீழ் சுய உருவாக்க முறையொன்றில் ஈடுபடுவதற்குத் தயாரிக்கப்பட்ட ‘‘வியாபாரத் திட்டத்தை’’ அமுல்படுத்தும் போது எதிர்நோக்க நேரிடும் பிரச்சினைகள்.

## 9.5. 2025 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

‘‘வளமான நாடு – அழகான வாழ்க்கை’’ சம்பந்தப்பட்ட கொள்கைக்கு அமைய நகர்ப்புற குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பௌதிக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் 2025 ஆம் ஆண்டில் பின்வருமாறு அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

| முக்கிய விடயத்துறை | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | நிதி இலக்கு (ரூ.மி.) | நிதிமூலம் | பௌதிக இலக்கு |
|---|---|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்ட கருத் திட்டங்கள் | பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டங்களின் மேலதிக வேலைகள் | 74.81 | உள்வாரி வருவாய் ஈட்டல்கள் பயன்படுத்தப் படுகின்றன. | 100 |
| உத்தேச நடுத்தர வருமானக் கருத் திட்டங்கள் *(முக்கிய ஒப்புதல்கள்/ அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலும், காணி உரித்தாக்கிக் கொள்ளலும்)* | வத்தளை, வெலிசர வீடமைப்புக் கருத்திட்டம் | 106.42 | உள்வாரி வருவாய் ஈட்டல்கள் பயன்படுத்தப் படுகின்றன. | 1.28 |
| | நிட்டம்புவ, ஓர்சட்வத்த வீடமைப்புக் கருத்திட்டம் | 120.30 | | 8.13 |
| | ஸ்ரீ ஜயவர்தனபுர – கோட்டே கலந்து அபிவிருத்தி வீடமைப்புக் கருத்திட்டம் | 137.07 | | 1.66 |
| | ஹிக்கடுவ, துடுவேகொட வீடமைப்புக் கருத்திட்டம் | 116.10 | | 1.97 |
| | கடுவெல கலப்பு அபிவிருத்தி வீடமைப்புக் கருத்திட்டம் | 29.13 | | 0.72 |
| | அத்துருகிரிய வீடமைப்புக் கருத்திட்டம் | 55.15 | | 0.25 |
| | புதிய காணிகளை அடையாளம் காணல் | 0.40 | | 100 |
| சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 50.98 | திரட்டு நிதியத்திலிருந்து நிதிஒதுக்கீடு எதிர்பார்க்கப் படுகிறது. | 100 |
| | கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 11.85 | | |
| | சுயதொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 25.90 | | |
| | சமூக கலாசார நிகழ்ச்சித்திட்டம் | 4.50 | | |
| | உலக குடியிருப்பு தின நிகழ்ச்சித்திட்டம் | 15.50 | | |
| வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் | நகர மற்றும் குடியிருப்புக் கொள்கை | 10.00 | உள்வாரி வருவாய் ஈட்டல்கள் பயன்படுத்தப் படுகின்றன. | 100 |
| | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடாத்தப்படும் கருத்திட்டங்களின் எண்ணக்கருவை சமூகமயப்படுத்தல் | 20.00 | | |

# 10 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

## 10.1 அறிமுகம்

கூட்டாட்சி ஆதனங்களின் பொது வசதிகளையும் பொதுவான கூறுகளையும் பங்கீடுபாட்டாளர்கள் போதியளவில் வழங்கியிருப்பதை உறுதிப்படுத்துவதும் பொது வசதிகளையும் பொதுவான கூறுகளையும் பராமரிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நிர்வகிப்பதற்கும் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை நிறுவுதலும், அதிகாரசபையில் பதிவுசெய்தலும், செயலூக்கத்துடன் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதும் இந்த அதிகாரசபையின் செயற்பொறுப்பாகும்.

### தொலைநோக்கு

நாட்டின் வீட்டுத் தேவைக்கொரு தீர்வாக கூட்டாட்சிக் குடியிருப்புகள்

### பணித்திட்டம்

கூட்டாட்சி ஆதனங்களை அங்கு வதிவோரின் நன்மைக்கும் நலன்புரிக்கும் ஏற்ற விதத்தில் நிர்மாணிப்பதற்கும் அத்தகைய ஆதனங்களை முறையாக நிர்வகிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவி ஆதனங்களைப் பராமரிக்கச் செய்வித்தலும் பணிகளை ஒழுங்குபடுத்துதலும்.

## 10.2 முன்னேற்றம் 2024

- 2024.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு 281.55 மி.ரூ. ஆண்டு இலக்கிற்கு ஒப்பீடாக 272.034 மி.ரூ. தொகையொன்றை சேர்த்துக்கொள்வதற்கு கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை துணிந்தது. அது, இலக்கிட்ட முன்னேற்றத்தில் 97% செயலாற்றுகையாகும்.
- 2024 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடையும் காலத்திற்கான தேறிய இலாப எல்லை 41% என்றும் செயற்பாட்டுச் செலவு 68% என்றும் பதிவாகியது.
- கூட்டாட்சி ஆதனங்களின் பொது கூறுகளும் பொதுவான துணையுறுப்புகளும் தொடர்பில் அதிகாரசபைக்கு 2024 ஆம் ஆண்டில் 2,612 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 2024 டிசம்பர் மாதம 31 ஆம் திகதியில் உள்ளவாறு அவற்றில் 2,423 முறைப்பாடுகளுக்கு முழுமையாக தீர்வு காணப்பட்டது.
- மாடி வீட்டு உரிமை பற்றிய சட்டத்திற்கும் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபைச் சட்டத்திற்கும் உரிய உத்தேச திருத்தங்களை அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கும் பொருட்டும் தயாரிக்கும் பொருட்டும் நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| # | செயற்பாடு | மதிப்பிடப்பட்ட | | | 2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | சான்றிதழ்களின் எண்ணிக்கை | வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | வருமானம் (ரூ.மி.) | சான்றிதழ்களின் எண்ணிக்கை | வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | வருமானம் (ரூ.மி.) | வருமானம் (%) |
| 1 | **கூட்டாட்சிச் சான்றிதழ்களை விநியோகித்தல்** | | | | | | | |
| i. | தற்காலிக | 01 | 75 | 4.78 | 04 | 36 | 0.141 | 3 |
| ii. | பகுதியளவான | 02 | 225 | 5.36 | 01 | 96 | - | - |
| iii. | இறுதியான | 50 | 2,000 | 144.72 | 75 | 7,032 | 142.45 | 98 |
| iv. | அடிப்படைத் திட்ட தீர்வைச் (25%) சான்றிதழ்கள் | 52 | 4,000 | 24.36 | 75 | 1,665 | 52.19 | 214 |
| v. | புதிதுபடுத்தல் கட்டணம் | 120 | - | 0.05 | 02 | 32 | 0.15 | 300 |
| | **மொத்தம்** | **225** | **6,300** | **179.27** | **157** | **8,861** | **194.93** | |

| # | செயற்பாடு | மதிப்பிடப்பட்ட | | | 2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | முகாமைக் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கை | வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | வருமானம் (ரூ.மி.) | முகாமைக் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கை | வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | வருமானம் (ரூ.மி.) | வருமானம் (%) |
| 2.1 | முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள்/முகாமைத்துவக் குழுக்களைப் பதிவுசெய்தல் | | | | | | | |
| i | அரசதுறை | 09 | 800 | 0.032 | 04 | 168 | 0.005 | 16 |
| ii | தனியார்துறை | 58 | 1,750 | 0.64 | 39 | 1,805 | 0.468 | 73 |
| 2.2 | முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள்/ முகாமைத்துவக் குழுக்கள் புதுப்பித்தலும் அமுல்படுத்தலும் | | | | | | | |
| iii | அரசதுறை | 200 | 6,000 | 0.744 | 177 | 2,933 | 0.341 | 46 |
| iv | தனியார்துறை | 400 | 12,500 | 4.708 | 439 | 16,998 | 7.659 | 163 |
| மொத்தம் | | **667** | **21,050** | **6.124** | **659** | **21,904** | **8.473** | |

## 10.3 சவால்கள்

- கூட்டாட்சி ஆதனக் கைத்தொழில் நாட்டின் வீட்டுத் தேவை மீது உரிய விதத்தில் இலக்கிடப்படாமை.
- அதிகாரசபையின் நோக்கத்தை அமுல்படுத்துவதற்கான பல்வேறு நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட பெரும் எண்ணிக்கையான நிறுவனங்களுடன் செயலாற்ற நேரிடுதல்.
- தனியார் துறையினால் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களை வாங்குவோரின் கொள்வனவுசெய்யும் போக்கு குறைவடைதல்.
- கூட்டாட்சி ஆதனங்களைப் பராமரிப்பதற்காக சமுதாய உதவி பெரிதும் குறைந்த மட்டத்தில் காணப்படுதல்.
- நிர்மாணக் கிரயம் குறைவடைவதன் காரணமாக மத்திய வகுப்பினருக்கும் குறைந்த வருமானம் பெறுவோர்க்கும் அந்த வீடுகளைக் கொள்வனவு செய்வதிலுள்ள சிரமம்.
- கூட்டாட்சி ஆதனங்களைப் பராமரித்தலும் சேவை வழங்குநர்களின் பண்புத்தரமும் பற்றிய பிரச்சினைகள்.

## 10.4. எதிர்கால இலக்குகள்

- கூட்டாட்சி ஆதனங்களின் பொது வசதிகளுக்கும் பொதுவான கூறுகளுக்கும் உரிய Clean Sri Lanka கருத்திட்டத்தை அமுல்படுத்தல்.
- கூட்டாட்சி ஆதனங்களின் பொது வசதிகள் மற்றும் பொது கூறுகளின் பராமரிப்பு, கட்டுப்பாடு, நிர்வாகம், முகாமைசெய்வதற்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு வழிகாட்டுதலும் ஒழுங்குபடுத்தலும்.
- நிர்மாணிக்கப்பட்டுவரும் கூட்டாட்சி ஆதனங்களின் முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்தல்.
- மீண்டும் அபிவிருத்திசெய்யப்பட வேண்டிய ஆதனங்களை அடையாளம் காணலும் அதற்குரிய மீள் அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தலும்.
- அடையாளம் காணப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களை மீள அபிவிருத்தி செய்வதற்கு அரச மற்றும் தனியார் கூட்டாண்மையைப் பெற்றுக்கொள்ளலும், அந்த ஆதனங்களின் உரிய பணிகளை வரிசைப்படுத்துவதற்கு உரிய குறித்த ஒரு சதவீத தொகையை கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபைக்கு பெற்றுக் கொள்ளலும்.
- கூட்டாட்சிப் பிரச்சினைகளுக்கு காலப்பொருத்தமுள்ள தீர்வுகளை வழங்குதலும் கூட்டாட்சி ஆதனச் சட்டத்தையும் ஒழுங்குவிதிகளையும் இற்றைப்படுத்தலும்.
- கூட்டாட்சி ஆதனங்களும் அதன் சட்டமும் சம்பந்தமாக பங்கீடுபாட்டாளர்களை அறிவுறுத்துதல்.

# 11 ஓசன் வீவ் டிவலப்மன்ட் பிரைவட் லிமிடட்

## 11.1 அறிமுகம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பங்குரிமையின் கீழ் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தனியார் கம்பனியொன்றாக 1994 யூலை மாதம் 13 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு ஓசன் வீவ் டிவலப்மன்ட் (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்டுள்ளதுடன், பிற்காலத்தில் இது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் பதிவுச் சட்டத்திற்கு அமைய 2010 சனவரி மாதம் 25 ஆம் திகதி மீளப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### நோக்கு

ஆதன அபிவிருத்திச் சந்தையில் முன்னோடி ஆதன அபிவிருத்திக் கம்பனியாதல்

### செயற்பணி

வாடிக்கையாளர்களின் தேவைகளின் அடிப்படையில் போட்டித்தன்மை மிக்க விலைகளின் கீழ் சகல வசதிகளையும் கொண்ட தனி வீட்டு அலகுகள் மற்றும் கூட்டாட்சி ஆதன வீடுகளை இலகு விலையில் பெற்றுக் கொடுத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் வசதியான வீடொன்றைப் பெற்றுக் கொடுக்கும் தேசிய செயற்பணிக்கு பங்களிப்பு வழங்குதல்.

## 11.2 பிரதான பணிகள்

- ஆதன அபிவிருத்தி மற்றும் விற்பனை
- ஓசன் ரவர் கட்டிடத்தை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதன் வீட்டு அலகுகளை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொடுத்தல்.
- மூலதன பங்குரிமையாளர்களுக்கு இலாபப் பகிர்வை வழங்குதல்.

## 11.3 2024 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

ஓசன் வீவ் டிவலப்மன்ட் (தனியார்) கம்பனியானது பொதுத் திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதில்லை என்பதுடன் உள்ளக உழைப்பின் மூலம் நிறுவனத்தின் மீண்டெழும் செலவினக் கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிறுவனமாகும்.

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 | | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| | | | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | (%) | |
| 01 | ஓசன் ரவர் கட்டிடத்திற்கு அண்மித்த மூன்று மாடிக் கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளல் | உள்ளக உழைப்பு (ஓ.வி.டி.சி) 20 + முதலீடு 62 } 82 | 6.2 | 31 | 82 |
| 02 | ஓசன் ரவர் கட்டிடத்திலுள்ள வீட்டு அலகுகள், மின் தூக்கி மற்றும் ஏனைய புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ளல் | 24.5 | 21.5 | 87.7 | 95 |
| 03 | ஓசன் ரவர் கட்டிடத்தின் கட்டமைப்புசார் புதுப்பித்தல்களை மேற்கொள்ளல். | 33 | 1.4 | 4.2 | 45 |

## 11.4 2024 ஆண்டில் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது பெற்றுக் கொண்ட வெற்றிகள் மற்றும் சவால்கள்

**பெற்றுக் கொண்ட வெற்றிகள்**

- ஓசன் ரவர் கட்டிடத்திலுள்ள சகல வீட்டு அலகுகளையும் வாடகை வழங்கியமை
- ஓசன் ரவர் கட்டிடத்தின் போடியம் பகுதியில் சகல வணிக வளவுகளையும் வாடகை வழங்கியமை

**சவால்கள்**

- வீட்டு அலகுகள்/ காணிகளை விற்பனை செய்யும் போது தனியார் துறை பின்பற்றுகின்ற முறையியலைப் பின்பற்ற முடியாதுள்ளமை. (கழிவு வழங்குதல்/ தரகர் ஊடாக விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.)
- கட்டிடப் பொருட்களின் விலை மாற்றமடைதல்.

## 11.5 2025 ஆண்டின் செயற்றிட்டம்

| பிரதான விடயத்துறை | கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதி மூலம் | பௌதீக இலக்கு |
|---|---|---|---|---|
| ஓசன் ரவர் கட்டிடத்தை முகாமைத்துவம் செய்தல் | 1. கட்டமைப்புசார் புதுப்பித்தல்கள் (ரவர் மற்றும் போடியம் கட்டிடம்) | 53 | உள்ளக உழைப்பு | 100% |
| | 2. ரவர் கட்டிடத்தின் வீட்டு அலகுகளை மேம்படுத்தல் | 16 | உள்ளக உழைப்பு | 100% |
| | 3. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த மேம்படுத்தல்கள் | 0.6 | உள்ளக உழைப்பு | 100% |
| | 4. வளச்சீராக்கி இயந்திரங்களை பராமரிப்புச் செய்தல் | 0.8 | உள்ளக உழைப்பு | 100% |
| | 5. உத்தியோகபூர்வ இணையத்தளத்தை மேம்படுத்தல் மற்றும் பேணிவருதல் | 0.6 | உள்ளக உழைப்பு | 100% |
| | 6. மின் பிறப்பாக்கி இயந்திரத்தை பராமரிப்புச் செய்தல் மற்றும் பேணிவருதல் | 1.5 | உள்ளக உழைப்பு | 100% |
| | 7. தீ கண்டறிதல் மற்றும் பாதுகாப்புக் கட்டமைப்பை மேம்படுத்தல் | 2 | உள்ளக உழைப்பு | 100% |
| | 8. ரவர் மற்றும் போடியம் கட்டிடங்களின் மழைநீர் மறைப்பு | 2 | உள்ளக உழைப்பு | 100% |
| | | | | |
| கஹதுடுவ வீடமைப்புக் கருத்திட்டம் கட்டம் II | 1. நிர்மாணிப்பு (வீட்டு அலகு) | 176.50 | உள்ளக உழைப்பு | 100% |
| | 2. பொது வசதிகள் மேம்படுத்தல் | 3.94 | உள்ளக உழைப்பு | 100% |

# 12 ஹொடெல் டிவலபர்ஸ் (லங்கா) லிமிட்டட

## 12.1 அறிமுகம்

ஹில்டன் ஹொடெல் கலம்பு ஹோட்டலின் உரித்தை வகிக்கும் ஹொடெல் டிவலபர்ஸ் (லங்கா) லிமிட்டட் (HDL), 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தின் பிரகாரம் திறைசேரிக்கு 100% பங்குரிமையுள்ள அரசு வசமுள்ள ஒரு தொழில்முயற்சியாகும். முகாமைத்துவ ஒப்பந்தமொன்றின் கீழ் ஹில்டன் இன்டர்நெஷனல் கோப்பரேசன் (ஹில்டன் வர்ல்வைட்) மூலம் ஹில்டன் கலம்பு இதனை முகாமை செய்கிறது.

1987 ஆம் ஆண்டில் முகாமைத்துவ ஒப்பந்தத்தை அமுல்படுத்தி சர்வதேச ஹோட்டல் செயற்பாட்டாளர்களான ஹில்டன் மெனேஜ்மன்ட் கோப்பரேசன் (ஹில்டன் வர்ல்ட்வைட்) கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பொறுப்பை வகிக்கிறது. 2012 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் குறித்து மீண்டும் கலந்தாலோசிக்கப்பட்டதுடன், 2012 அக்டோபர் 18 ஆம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு வரை புதிய முகாமைத்துவ ஒப்பந்தமொன்று அமுல்படுத்தப்பட்டது. பின்பு முதலீடுகளை விலக்கிக்கொள்ளும் செயன்முறை காரணமாக குறுகிய காலப்பகுதிகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளதுடன், இன்று இந்த ஒப்பந்தம் 2026 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### நோக்கு

ஓம்பல் தொழில்முயற்சியின் பேண்தகு சிறப்புநிலையுடன் உயர்வாக எழுந்து நிற்றல்

### பணி

உலகின் முன்னணி ஹோட்டல் செயற்பாட்டாளர் என்ற வகையில் கம்பனிக்கு நிலையான பெறுமானமொன்றை உருவாக்கி பங்குரிமையாளர்களின் நலன்களை மேம்படுத்தி இலங்கையை பிராந்தியத்தில் எழுந்துவரும் சுற்றுலா சேரிடமொன்றாக ஊக்குவிப்பதன் மூலம் பங்குரிமையாளர்களின் செல்வத்தை உச்சப்படுத்துதல்.

## 12.2 மூலோபாய ரீதியான நோக்கங்கள்

**குறுகிய கால**

- குறுகிய கால முகாமைத்துவ ஒப்பந்தத்தை மீண்டும் கலந்தாலோசனைக்கு உட்படுத்தலும் புதுதிபடுத்தலும் (2025 திசெம்பர் மாதத்தில் காலம் நிறைவடைதல்)
- நிதிச் செலவுகளைக் குறைத்தலும் காசுப்பாய்ச்சல்களை வளர்ப்பதற்காக கடன் மீள்கட்டமைத்தலும்: வட்டிச் செலவைக் குறைக்குமுகமாக 3 பில்லியன் ரூபா மக்கள் வங்கி கடன் பகுதியொன்றை மீண்டும் நிதியீட்டம் செய்தல்.
- MICE செயற்பாட்டு நடவடிக்கைகளை விருத்திசெய்யுமுகமாக தற்போதுள்ள மா(ர்)கீ (marquee) மறுசீரமைத்தல் (100 மி.ரூ.)
- உணவுக் கிரயம் சம்பந்தமான பெறுமானத்தை முன்னேற்றும் செயன்முறை ஊடாக செயற்பாட்டு வினைத்திறனை விருத்தி செய்தல் (இலக்கு : நூற்றுக்கு 34)

**நடுத்தர கால**

- இலங்கை உணவகங்களை (சநளவரயவெள) நிர்மாணித்தல்.
- எஞ்சிய நிறைவேற்று வகுப்பில் 5 மாடிகளின் புனரமைப்பை நிறைவுசெய்தல்.
- விருந்து மண்டபத்தைப் புனரமைத்தல்.
- புதிய பியுஷன் ஜப்பான் உணவகமொன்றை ஆரம்பித்தல்.

**நீண்ட கால**

- 19 மாடிகளைக் கொண்ட மூன்றாவது கோபுரத்தை நிர்மாணித்தல்.
- ஹில்டன் ஸ்போர்ட்ஸ் சென்டர் காணியில் அமைக்கப்படவுள்ள கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான மூலதனத்தைத் திரட்டுதல்.

## 12.3 நிதிசார் முன்னேற்றம்

| ரூ.மி. | 2024 | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | 5,241 | 4,228 | 2,887 | 1,178 | 1,081 | 2,879 | 2,911 | 3,015 |
| பிற வருமானங்கள் | 55 | 31 | 225 | 42 | 36 | 32 | 70 | 55 |
| மொத்த செயற்பாட்டுச் செலவு | (4,453) | (4,078) | (2,984) | (1,676) | (1,574) | (2,596) | (2,565) | (2,426) |
| செயற்பாட்டு இலாபம்/ (நட்டம்) | 843 | 181 | 128 | (455) | (456) | 314 | 415 | 644 |

## 12.4 2024 ஆம் ஆண்டின் சிறப்பான அடைவுகள்

- 2024 நவம்பர் இறுதிப் பகுதியாகும் போது 264 விருந்தினர் அறைகளை வெற்றிகரமாக புனரமைத்து பூர்த்தி செய்தல்.
- ஸ்போர்ட் சென்டரில் கிரேண்ட் மா(ர்)கீ (Grand Marquee) அறிமுகப்படுத்தல்.
- புதிய திறந்த எண்ணக்கருவொன்றாக ‘‘லோட்டஸ் டவன்’’ (Lotus Lawan) என்ற பெயரில் கூட்டங்களுக்கான வெளியிடமொன்றை அறிமுகப்படுத்தல்.
- உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையை சான்றுறுதிப்படுத்தல்.
    - ISO 22000 : 2018 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள்.
    - HACCP
- பணிசெய்வதற்கு ஏற்றமிகு இடம் விருதுகள் - 2023
- SLIM Kanter விருதுகள் - 2023

## 12.5 2025 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

- கம்பனியின் மீள்கட்டமைப்பாக்கத் திட்டம் - அரசின் புதிய கொள்கைத் தீர்மானம் கிடைக்கும் வரை காத்திருத்தல்.
- மூலதனத்தைக் குறைத்தல் - 2025 ஆம் ஆண்டு முதல் எதிர்காலத்தில் திறைசேரிக்கு பங்கிலாப கொடுப்பனவுக்கான வசதியளிப்பதற்கு ஐந்தொகையை மீள்கட்டமைத்தல் சம்பந்தமாக கம்பனி இயலுமை பெறுவதற்காக.
- முகாமைத்துவ ஒப்பந்தம் - திறைசேரியின் செயலாளரின் அபிலாசையுடன் 2026 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஒப்பந்தம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.
- ஸ்போர்ட் சென்டர் குத்தகை ஒப்பந்தம் - மாவட்ட செயலாளரிடமிருந்து உரித்து பெறப்பட்டிருந்ததுடன், குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படவுள்ளது. முதலீடுகளை அகற்றிக்கொள்ளும் செயன்முறை முடிவடையும் வரை 4.4 பில்லியன் ரூபா தவணைக் கொடுப்பனவு அமைச்சரவை அனுமதியுடன் தள்ளிப்போடப்பட்டுள்ளது.
- வைபவ வேளைகள்/ நிகழ்வுகள் மற்றும் MICE (கூட்டங்கள்/ ஊக்குவிப்புகள்/ கருத்தரங்குகள், நிகழ்வுகள்) என்பவற்றுக்கான வசதிகளை விஸ்தரிப்பதற்கு - வைபவ வேளைகளையும் MICE செயற்பாட்டு நடவடிக்கைகளையும் பூர்த்திசெய்வதற்கும் இலாபத்தன்மை உச்சப்படுத்துவதற்கும் புதிய மறுசீரமைக்கப்பட்ட விருந்தினர் அறைகளை குறுக்கு விற்பனை முறையில் விற்பனை செய்தல்.

# 13 அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

## 13.1 அறிமுகம்

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் அரச கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் 1962 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதுடன், CIDA இன் CS1 வகைப்படுத்தலைக் கொண்ட அரச பொறியியல் நிறுவனமாகும். எமது நிறுவனம் தனியார் துறையின் ஒப்பந்தங்கள் மற்றும் அரசதுறையின் அமைச்சு, திணைக்களம், அதிகாரசபை போன்ற அரச ஒப்பந்தங்களையும் அமுல்படுத்துகின்றது.

எமது நிறுவனம் கட்டிட நிர்மாண சிவில் பொறியியல் மற்றும் கட்டிடக்கலை நடவடிக்கைகள், மதியுரை சேவைகளை வழங்குதல், இயந்திர மற்றும் மின் பொறியியல் சேவைகளை வழங்குதல், வீதி மற்றும் பாலம் நிர்மாணித்தலுக்கான ISO 9001:2008சான்றிதழையும் பெற்றுக் கொண்டுள்ளது.

### நோக்கு

'பொறியியல் துறையில் முன்னோடியாதல்'

### செயற்பணி

சுபிட்சம்மிக்க தொழில்முயற்சியொன்றில் சேவைபெறுனரை திருப்திகரமாக பேணிவருவதுடன் போட்டித்தன்மை மற்றும் உற்சாகம்மிக்க ஊழியப் படையணியின் பங்கேட்புடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினூடாக உதவி வழங்கப்படுகின்ற மிகச் சிறந்த மதியுரைச் சேவைகள், நிர்மாணிப்பு, உற்பத்தி மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளின் மூலம் ஆக்கபூர்வமான மற்றும் இணைந்த பொறியியல்சார் தீர்வுகளை உருவாக்கி தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குதல்'

## 13.2 பிரதான பணிகள்

- இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் யாராயினுமொரு தரப்பினருக்கு உரித்தான கட்டிடம், சிவில் பொறியியல் மற்றும் வேறு பொறியியல் கருத்திட்டங்களை ஆராய்தல், திட்டமிடல் மற்றும் நிர்மாணிப்பதை, சுயாதீனமாக அல்லது எந்தவொரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கம்பனியின் ஒத்துழைப்புடன் மற்றும் யாதாயினுமொரு கம்பனியின் பங்குகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் வைத்திருத்தல்.
- இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் சகல பொறியியல் துறைகளிலும் மதியுரை மற்றும் கருத்திட்ட முகாமைத்துவச் சேவையை சுயாதீனமாக அல்லது எந்தவொரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கம்பனியின் ஒத்துழைப்புடன் மற்றும் யாதாயினுமொரு கம்பனியின் பங்குகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் வைத்திருத்தல்.
- முன்பூர்த்தி செய்யப்பட்ட கொன்க்றீட், வலுவூட்டப்பட்ட கொன்க்றீட் மற்றும் முன் பலப்படுத்திய கொன்க்றீட் உற்பத்திகளை இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உற்பத்தி செய்து விற்பனை செய்தல்.
- பொறியியல் கருத்திட்டங்கள் /கருத்திட்டங்களுக்குத் தேவையான நிர்மாணப் பொருட்கள், இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்தல், விற்பனை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல்.
- மேலே பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்குத் தேவையான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப ஆட்களை பயிற்றுவித்தல்.
- மேலே முதல் 4 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் நிர்மாணப் பொருட்கள், முறைகள் மற்றும் தொழில்நுட்ப முறைகள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

## 13.3 2024 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) | ஏற்பாடு – 2024 ரூ.மி. | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 (விலை வித்தியாசத்துடன்) | | பௌதீக முன் னேற் றம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | % | |
| 1 | வசதிகள் முகாமைத்துவம், இயந்திர மற்றும் மின், விசேட கருத்திட்டங்கள் | 1,700.37 | | 1,011.88 | 59% | |
| 2 | மதியுரை | 244.50 | | 220.00 | 89% | |
| 3 | நிர்மாணிப்பு மற்றும் உதிரி பாகங்கள் | 1,265.70 | | 498.49 | 40% | |
| **முழு மொத்தம்** | | **3,210.57** | | **1,730.37** | **53%** | |

## 13.4 வெற்றிகள் மற்றும் எதிர்கொண்ட சவால்கள்

2024 ஆம் ஆண்டு எமது நிறுவனத்தினால் பயாகல சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டம், தென்தெனிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, நகரப் புத்தெழுச்சிக் கருத்திட்டம், (SCURP) கொழும்பு 15 மற்றும் பர்கியுசன் வீதி வீடமைப்பு அலகுகள் 750 உள்ளடங்களாக முக்கிய பல கருத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.



பயாகல சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டம்,



தென்தெனிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதி

எவ்வாறாயினும் 2024 ஆம் ஆண்டில் எதிர்கொண்ட சவாலாக இருப்பது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டமை, டொலரின் பெறுமதி மாற்றமடைதல் போன்ற நிலைமைகளின் கீழ் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தடைப்பட்டமை அல்லது பல சவால்களுக்கு மத்தியில் கருத்திட்டங்களை பேணிவர வேண்டி ஏற்பட்டமை.

இந்நிலைமையின் கீழ் பல கருத்திட்டங்கள் தற்காலிகமாக மூடப்பட்டமை போன்ற காரணங்களினால் தன்னிறைவான பகுதியளவிலான நிறுவனம் என்ற வகையில் முன்னொரு போதும் இல்லாத நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றமடைவதற்காக எமது வியாபாரத் திட்டத்திற்கும் அப்பால் சென்று வியாபார நடவடிக்கைகளை பன்முகப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டோம்.

தொண்டர் ஓய்வு பெறும் நட்டஈட்டு முறை அமுல்படுத்தப்பட்டதன் மூலும் நிறுவனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை 550 ஆகவும், சம்பளச் செலவினம் ரூ.மி. 59 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளன.

## 13.5 2025 ஆண்டின் செயற்றிட்டம்

| தொடர் இல. | கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | பௌதீக இலக்கு |
|---|---|---|---|
| 1 | வசதிகள் முகாமைத்துவம், இயந்திரம் மற்றும் மின், விசேட கருத்திட்டங்கள் | 792.40 | 100% |
| 2 | மதியுரை | 456.00 | 100% |
| 3 | நிர்மாணிப்பு மற்றும் உதிரி பாகங்கள் | 1309.00 | 100% |
| மொத்தம் | | **2557.40** | |

| தொடர் இல. | கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | பௌதீக இலக்கு |
|---|---|---|---|
| 1 | களுத்துறை தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு கற்கை மற்றும் நிருவாக கட்டிடத்தை நிர்மாணித்தல் | 100.00 | 100% |
| 2 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர தாதியர் பயிற்சிப் பாடசாலையின் உத்தேச பீடக் கட்டிடத்தை நிர்மாணித்தல். | 85.00 | 100% |
| 3 | பூகோட நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் | 230.00 | 100% |
| 4 | காலி நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் | 145.00 | 100% |
| 5 | புத்தளம், நொரச்சோலை, பொறியியலாளர்களின் குடும்ப வீட்டு அலகுகள் 10 மற்றும் நான்கு அலகுகளை கொண்ட வீடமைப்பு திட்ட இலக்கம் 02 ஐ நிர்மாணித்தல் | 28.00 | 100% |
| 6 | பல்லேகெலே புதிய சிறைச்சாலை கட்டிடத்தொகுதியின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் ஆரம்ப பணிகளுக்கான நிர்மாண வேலைத்தளம் | 70.00 | 100% |
| 7 | அலுமினியம் பிரிவு | 48.00 | 100% |
| 8 | சுகததாச விளையாட்டு மைதானத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் | 16.80 | 100% |
| 9 | சுங்கத் திணைக்களத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் | 36.00 | 100% |
| 10 | திறைசேரி திணைக்களத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் | 21.60 | 100% |
| 11 | பாரம் தூக்கி இயந்திரத்தை பரிசோதித்தல் | 12.00 | 100% |
| 12 | நகர புத்தெழுச்சி கருத்திட்டம் (SCURP) கொலம்பகே மாவத்தை வீட்டு அலகுகள் 624 | 12.00 | 100% |
| 13 | நகர புத்தெழுச்சி கருத்திட்டம் (SCURP) எப்பல்வத்த வீட்டு அலகுகள் 700 | 28.80 | 100% |
| 14 | நகர புத்தெழுச்சி கருத்திட்டம் (SCURP) கொழும்பு 15, பர்சியுசன் வீதி வீட்டு அலகுகள் 750 | 28.80 | 100% |
| 15 | நகர புத்தெழுச்சி கருத்திட்டம் (SCURP) மாதம்பிட்டி வீடமைப்புத்திட்டம் 700 | 28.80 | 100% |
| 16 | மாலம்பே வீட்டு அலகுகள் 256 | 12.00 | 100% |
| 17 | மாக்கும்புற (கொட்டாவ) வீட்டு அலகுகள் 314 | 12.00 | 100% |

| | | | |
|---|---|---|---|
| 18 | பொலலெஸ்கவும வீட்டு அலகுகள் 120 ஐ திட்டமிடல் | 12.00 | 100% |
| 19 | ருகுனு பல்கலைக் கழகத்தில் தற்போது காணப்படுகின்ற பிரதான கட்டிடம் 1 கட்டத்தின் உத்தேச பிரதான புனரமைப்புப் பணிகள் | 0.9 | 100% |
| 20 | கொழும்பு 06, பேஸ்லையின் வீதியில் உத்தேச மிகிந்துபுர வீடமைப்புக் கருத்திட்டம் | 15.95 | 100% |
| 21 | இந்திய வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் இலங்கையில் தோட்டத்துறையில் அச்சுறுத்தலான நிலையிலுள்ள சமுதாயத்தினருக்கு 10000 வீடுகளை நிர்மாணிக்க இந்திய அரசுக்கு மதியுரை சேவைகளை வழங்கும் கருத்திட்டம் | 12.00 | 100% |
| 22 | சுகததாச தேசிய விளையாட்டு தொகுதியின் அதிகாரசபை | 2.00 | 100% |
| 23 | இலங்கை பொலிஸ் | 5.00 | 100% |
| 24 | ஏக்கல முன்வலுவூட்டல் வேலைத்தளம் | 572.00 | 100% |
| 25 | இரத்மலான முன்வலுவூட்டல் வேலைத்தளம் | 343.00 | 100% |
| 26 | தெமட்டகொட சில்பர் உற்பத்தி வேலைத்தளம் | 360.00 | 100% |
| 27 | தங்கொட்டுவ செங்கல் உற்பத்தி வேலைத்தளம் | 12.00 | 100% |
| 28 | மாத்தளை டொலமைட் உற்பத்தி வேலைத்தளம் | 22.00 | 100% |

# 14 இலங்கை பொறியியலாளர் பேரவை

## 14.1 அறிமுகம்

2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியலாளர் பேரவை சட்டத்தின் கீழ் இலங்கை பொறியியலாளர் பேரவை (ECSL) தாபிக்கப்பட்டுள்ளது.
இச்சட்டத்தின் மூலம்,

- பொறியியலாளர்களான தொழில்வல்லுனர்களின் தொழில்சார் அந்தஸ்து மற்றும் நடத்தையை பேணிவருதல் மற்றும் வழிப்படுத்தும் பொறுப்பும்,
- பொறியியாளர்களான தொழில்வல்லுனர்களை பதிவு செய்வதற்கும்,
- அது சம்பந்தமான விடயங்கள் அல்லது அதற்கு விளைவாய்ந்தன்மைவாய்ந்த விடயங்களுக்கான ஏற்பாடுகளை செய்வதற்கும்,
  இலங்கை பொறியியலாளர் பேரவைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

### நோக்கு

இலங்கையில் பொறியியலாளர்களான தொழில்வல்லுனர்கள் தொடர்பில் மக்களின் நம்பிக்கையை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு செயல்ரீதியாக பங்களிப்பு வழங்குதல்.

### செயற்பணி

சர்வதேச ரீதியில் அங்கீகாரம் உள்நாட்டில் குறித்த தரநியமங்கள், நிபுணத்துவம் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு தொழில்சார் அர்ப்பணிப்பை பேணிவருதல் மற்றும் சட்டரீதியாக பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய இலங்கையில் பொறியியலாளர்களான தொழில்வல்லுனர்களை பல்வேறு வகுதிகளின் கீழ் பதிவு செய்தல்.

## 14.2 பிரதான பணிகள்

- **பொறியியலாளர்களான தொழில்வல்லுனர்களை பதிவு செய்தல்**

2024 இன் 31 ஆம் திகதி வரை பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த பொறியியலாளர்களான தொழில் வல்லுனர்களின் எண்ணிக்கை 16,365 ஆகும்.

- **மின்னுட்பவியலாளர்களை பதிவு செய்தல்**

இலங்கையிலுள்ள சகல மின்னுட்பவியலாளர்களையும் பொறியியலாளர் பேரவையில் பதிவு செய்வதற்கான முறையியல் தயார் செய்யப்பட்டுள்ளது. தகைமைவாய்ந்த மின்னுட்பவியலாளர்களை இலங்கை பொறியியலாளர் பேரவையின் தொழில்நுட்ப வகுதியினரின் கீழ் பதிவு செய்வதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு, நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார கம்பனியுடன் இணைந்து 2374/28ஆம் இலக்க 2024 மார்ச் 07 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்டது.

i. 2026 சனவரி 01 ஆம் திகதி முதல் 2029 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மின்னுட்பவியலாளராக அது சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 3 (NVQ Level 3) குறைந்தபட்ச தகைமையாக இருப்பது கட்டாயத் தேவைப்பாடாகும்.
ii. 2030 சனவரி 01 ஆம் திகதியின் பின்னர் மின்னுட்பவியலாளராக அது சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 (NVQ Level 4) மற்றும் இலங்கை பொறியியலாளர் பேரவையின் பதிவு கட்டாயத் தேவைப்பாடாகும்.

இலங்கையில் மின் பொறியியல் துறையில் மின்னுட்பவியலாளர்களின் தரத்தை மேம்படுத்தல், பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் உயர் மட்ட தொழில்சார் மட்டத்தை பேணிவருவதற்காக இந்த மாற்றங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மின்னுட்பவியலாளர்களுக்கு தேசிய தொழில் தகைமை III மற்றும் IV ஆகிய மட்டங்களை அடைந்துகொள்ள வழிவகுப்பதற்காக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு, மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி

அதிகாரசபையுடன் இணைந்து இலவசமாக பாடநெறிகள் மற்றும் மதிப்பீடுகளை நடாத்த ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதற்கு மேலதிகமாக ஏனைய துறைகளில் பொறியியல் தொழில்வல்லுனர்களை பதிவு செய்வதற்கான வேலைத்திட்டத்தை தயார் செய்வதற்காக விசேட குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

- **இலங்கை பொறியியலாளர் பேரவை, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை**

பொறியியல் தொழில்நுட்பவியலாளர்களின் (மின், காய்ச்சி ஒட்டுதல் மற்றும் வளிச்சீராக்கி) தரத்தை மேம்படுத்துவதற்காக பொறியியலாளர்களின் பேரவை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை செய்துகொண்டுள்ளது. மேற்படி ஒத்துழைப்பு வேலைத்திட்டத்திற்கு பொறியியல் தொழில்நுட்வியலாளர்களின் தரம் அந்தஸ்து மற்றும் தொழில்சார் நிலைமையை மேம்படுத்தல், அவர்களின் பங்களிப்புக்கு சமூகத்தின் அங்கீகாரத்தைப் ஏற்படுத்தல், தொடர்ச்சியான தொழில்சார் மேம்படுத்தலுக்கு வாய்ப்பளித்தல் மற்றும் பொறியியல் தொழில்நுட்பவியலாளர்களுக்கு தொழில்முயற்சியாளர்களாகவதற்கான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் முக்கியமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

- **இலங்கையிலுள்ள வெளிநாட்டு பொறியியலாளர்களான தொழில்வல்லுனர்களை பதிவு செய்தல்**

வெளிநாட்டு பொறியியலாளர்களான தொழில்வல்லுனர்கள் எல்லாச் சந்தர்ப்பத்திலும் உரிய அரச சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் தரநியமங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பொறியியலாளர்களின் பேரவையின் பதிவு எவ்வகையிலும் விடுவிக்கப்படுவதில்லை என்றும் குறித்துரைக்கின்ற அறிவுரைகளை பதிவுச் சான்றிதழில் உட்புகுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- **பட்டயம் பெற்ற பொறியியலாளர்களுக்கான பரிசோதனைப் பட்டியலை தயார் செய்தல்**

உயர் தரத்தைக் கொண்ட சேவையை உறுதி செய்வதற்காக பட்டயம் பெற்ற பொறியியலாளர்களின் பயன்பாட்டுக்கென விரிவான பரிசோதனைப் பட்டியலை தயார் செய்வதற்கும் பொறியியாளர்களின் பேரவை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

- **பொறியியலாளர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைமுறை**

பொறியியலாளர்களின் முறைகேடான நடவடிக்கைகள் தொடர்பில் பொது மக்களிடம் கிடைக்கின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான செயன்முறை தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த செயன்முறையை வெற்றிரமாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

## 14.3 2025 ஆண்டில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

- பதிவு செய்யப்பட்ட பொறியியல் தொழில்வல்லுனர்களின் எண்ணிக்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பொறியியல் தொழில்நுட்பவியலாளர்களின் தரத்தை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுடன் இணைந்து அமுல்படுத்தல்.
- இலங்கையினுள் சேவையாற்றி வருகின்ற வெளிநாட்டு பொறியியல் தொழில்வல்லுனர்களை பதிவு செய்வதற்கு பரந்தளவிலான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல்.
- தற்போது பொறியியல் துறையில் சேவையாற்றி வருகின்ற பொறியியல் தொழில்வல்லுனர்களை பதிவு செய்யும் போது எழுந்துள்ள.
- IESL மற்றும் IIESL நிறுவனத்துடன் தொடர்ந்தும் கலந்துரையாடி முடிந்தளவுக்கு தீர்த்துக் கொள்ளல்.

இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான நிதிசார் ஏற்பாடுகள் பொறியியல் பேரவையின் நிதிகளிலிருந்து பெற்றுக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

# 15 தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## 15.1 அறிமுகம்

குடிநீர் வழங்கும் பொறுப்பு ஆரம்ப காலத்தில் பகிரங்க வேலைகள் திணைக்களத்திற்குப் (PWD) பொறுப்பளிக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் 1965 இல் நீர் வழங்கல் திணைக்களமாக மாற்றமடைந்தது.
இதனை அடுத்து 1975 இல் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தாபிக்கப்பட்டது.
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தற்போது நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

### நோக்கு

தொழில்நுட்ப மற்றும் சேவைசார் உன்னதநிலையின் ஊடாக இலங்கையில் மென்மேலும் பிரபல்யமான பயன்பாட்டு நிறுவனமாதல்.

### செயற்பணி

சகல நுகர்வோரினதும் திருப்தியை உறுதி செய்து நிலைபேறான நீர் மற்றும் துப்பரவேட்பாட்டு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தேசத்தை சேவையாற்றுதல்.

### தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் பணிகள்

- உள்நாட்டு நிதி மற்றும் அன்பளிப்பாளர்களின் உதவியுடன் நீர் வழங்கல், வடிகாலமைப்புக் கருத்திட்டங்களை திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல்.
- நுகர்வோருக்கு திருப்திகரமான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் பராமரிப்புச் செய்தல்.
- தாங்கிக் கொள்ளக்கூடிய கட்டணங்களை தயார் செய்வதன் ஊடாக பட்டியலிடல் மற்றும் சேகரித்தல்.
- சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் (CBOs), உள்ளூராட்சி மன்றங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் /அரச துறை நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவி.

## 15.2 நிதிசார் முன்னேற்றத்தின் பொழிப்பு (தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை) - 2024

| கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்ட எண்ணிக்கை | உப கருத்திட்ட எண்ணிக்கை | மொத்த செலவினம் (ரூ.மி.) | 2024.12.31 திகதிக்கு முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | செலவினம் (ரூ.மி.) % | கையிலுள்ள பட்டியல்கள் (ரூ.மி.) | கையிலுள்ள பட்டியல்களுடன் செலவினம் (ரூ.மி.) |
| பாரியளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் | 10 | - | 45,610.25 | 12,979.30 | 12001.73 | 24,981.03 |
| மலசல கழிவகற்றல் கருத்திட்டங்கள் | 03 | - | 3,360.00 | 677.66 | 144.00 | 821.66 |
| ஏனையன | - | - | 165.00 | 61.23 | 6.7 | 67.93 |
| கொள்ளளவை மேம்படுத்தல் மற்றும் விநியோகத்தை விஸ்தரிக்கும் கருத்திட்டங்கள் | 01 | 111 | 6,968.61 | 4,497.88 | 15.58 | 4,513.46 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பயன்பாட்டை மாற்றல் | 01 | 10 | 100.00 | 40.68 | 0.56 | 41.24 |
| காணி கொள்ளல் | 01 | 26 | 200.00 | 151.44 | | 151.44 |
| மொத்தம் | **16** | **147** | **56,403.86** | **18,408.19** | **12,168.57** | **30,576.76** |
| நிதியுதவி திட்டங்கள் | 05 | 05 | **16,130.87** | 13,301.74 | 6,434.41 | 19,736.15 |
| உள்ளூர் வங்கியின் நிதியுதவியில் நீர் வழங்கல் திட்டங்கள் துணைத்தொகை (LBF) | 08 | 08 | 10,348.00 | 652.00 | 198.50 | 850.50 |
| උප එකතුව | **13** | **13** | **26,494.00** | **13,953.74** | **6,632.91** | **20,586.65** |
| மொத்தம் | **29** | **160** | **82,897.86** | **32,361.93** | **18,801.48** | **51,163.41** |

## 15.3. அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - 2024

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) | பயனாளிகளின் எண்ணிக்கை | 2024 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகளை ஒதுக்கல் ரூ.மி. | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 வரை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | මූල්‍ය | | பௌதீக் (%) |
| | | | | | (ரூ.மி.) | % | |
| 1 | யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்பரவேட்பாட்டு கருத்திட்டம் | 35,881.49 | 60,000 | 9,208.25 | 5115.06 | 55.55 | 90.40 |
| 2 | அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் I | 11,515.00 | 25,000 | 1,272.95 | 255.52 | 20.07 | 99.10 |
| 3 | கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - III | 13,917.00 | N/A | 5,122.80 | 8.58 | 0.16 | 99.00 |
| 4 | அம்பதலே நீர் வழங்கல் கட்டமைப்பினை மேம்படுத்தல் மற்றும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | 7,232.00 | N/A | 5944.50 | 3649.02 | 61.38 | - |
| 5 | அம்பதலே நீர் வழங்கல் கட்டமைப்பினை மேம்படுத்தல் மற்றும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | 13,000.00 | N/A | 5,031.34 | 1387.59 | 27.58 | 91.45 |
| 6 | ஆனமடுவ இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | 8,625.17 | 16,350 | | 15.80 | - | 78.80 |
| 7 | ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் | 6,291.00 | 6,500 | 2,505.00 | 251.62 | 10.04 | 70.70 |
| 8 | கண்டி வடக்கு – பாததும்பர இணைந்த | 51,324.25 | 72,000 | 14766.70 | 2000.96 | 13.55 | 88.75 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நீர் வழங்கல் கருத்திட்டம் | | | | | | |
| 9 | அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் II | 31,598.18 | 62,222 | 808.72 | 0.83 | 0.10 | 13.14 |
| 10 | களுகங்கை நீர் வழங்கல் கருத்திட்டம் - நீடிப்பு I | 55,338.00 | 500,994 | 700.00 | 279.71 | 39.96 | 5.44 |
| 11 | யாழ்ப்பாணம் நீர் வழங்கல் கருத்திட்டம் (பாலை ஆறு) | 250.00 | | 250.00 | 30.41 | 12.38 | - |
| மொத்தம் | | | | **45,610.25** | **12,995.10** | | |

## 15.3.1. அமுலில் உள்ள பாரியளவிலான கழிவு நீர் அகற்றல் கருத்திட்டங்கள்

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) | பயனாளிகளின் எண்ணிக்கை | 2024 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகளை ஒதுக்கல் ரூ.மி. | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 வரை | | பௌதீக முன்னேற்றம் (%) 2024 நவம்பர் வரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் முன்னேற்றம் | % | |
| 1 | கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 22,588.00 | 55,000 + 150,000 (floating) | 2,250.00 | 189.74 | 8.43 | 93.93 |
| 2 | இலங்கையின் தென் கிழக்கு நகரங்களுக்கான துப்பரவேட்பாட்டு மற்றும் துப்பரவேட்பாட்டு முன்னெடுப்புக்கள் (SHIFT). | 17,664.95 | 153,000 | 100.00 | 0 | 0 | 12.31 |
| 3 | இரத்மலான/மொரட்டுவை கழிவு நீர் கருத்திட்டம் கட்டம் I கட்டம் II | 16,073.00 | 45,500 | 1010.00 | 487.92 | 48.31 | 25 |
| | மொத்தம் | **56,325.95** | | **3,360.00** | **677.66** | | |

## 15.3.2. கொள்ளளவை மேம்படுத்தல் மற்றும் விஸ்தரித்தல் கருத்திட்டம் (CEDE கருத்திட்டம்)

| கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) | பயனாளிகளின் எண்ணிக்கை | 2024 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகளை ஒதுக்கல் ரூ.மி. | நிதிசார் முன்னேற்றம் (2024.12.31) வரை | | பௌதீக முன்னேற்றம் (%) 2024 அக்டோபர் வரை |
|---|---|---|---|---|---|---|
| | | | | நிதிசார் முன்னேற்றம் | % | |
| கொள்ளளவை மேம்படுத்தல் மற்றும் விஸ்தரித்தல் கருத்திட்டம் / WFA நிகழ்ச்சித்திட்டம் | 388,777.78 | 1,500,000 | 6,968.61 | 4,497.88 | 64.54 | 27.5 |

## 15.3.3. வேறு கருத்திட்டங்கள

| நிகழ்ச்சித்திட்டம் | ஏற்பாடுகளை ஒதுக்குதல் - 2024 (ரூ.மி.) | 2024.12.31 திகதிக்கு நிதி செலவினம் (ரூ.மி.) |
|---|---|---|
| பயன்பாட்டு மாற்றல் நிதி | 100 | 40.69 |
| காணி கொள்ளல் | 200 | 151.44 |
| மொத்தம் | **300** | **192.13** |

## 15.3.4. திறைசேரி ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) | பயனாளிகளின் எண்ணிக்கை | 2024 ஆண்டுக்கான ஏற்பாடு ரூ.மி. | நிதிசார் முன்னேற்றம் (2024.12.31 வரை) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | % | | பௌதீக முன்னேற்றம் (%) |
| | | | | | ரூ.மி. | % | |
| 1 | கம்பஹா அத்தனகல்ல மற்றும் மினுவங்கொட இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | 33,060.00 | 88,000 | 3059.73 | 1772.24 | 57.92 | 97.11 |
| 2 | தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம் | 15,840.67 | 25,000 | 7471.14 | 7432.52 | 99.5 | 86.81 |
| 3 | பொல்கஹவெல, பொத்துஹெர மற்றும் அலவ்வ இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | 20,207.80 | 38,000 | 1000.00 | 1015.42 | 101.5 | 94.56 |
| 4 | அளுத்கம, மத்துகம, அகலவத்த இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | 32,278.00 | 60,000 | 2500.00 | 1040.04 | 41.6 | 96.05 |
| 5. | கம்பஹா அத்தனகல்ல மற்றும் மினுவங்கொட இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | 18,208.07 | 60,000 | 2,100.00 | 2041.52 | 97.2 | 93.10 |
| மொத்தம் | | **119,595.00** | **271,000** | **16,130.87** | **13,301.74** | | |

## 15.3.5 அமுலில் உள்ள உள்நாட்டு வங்கிகளினால் நிதி வழங்கப்படுகின்ற நீர்க் கருத்திட்டங்கள் (LBF)

| இ ல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.) | பயனாளி களின் எண்ணி க்கை | 2024 ஆண்டு க்கான ஏற்பாடு ரூ.மி. | நிதிசார் முன்னேற்றம் (2024.12.31 வரை) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | % | | භෞතික (%) |
| | | | | | (ரூ.மி.) | % | |
| 1 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் - 1 | 5,170 | 91,000 | 523 | - | - | 100 |
| 2 | கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் - 2 | 4,823 | | 1,928 | 121.00 | 6.3 | 98.6 |
| 3 | கொழும்பு கிழக்கு நகர (பொதி 3) நீர் வழங்கல் கருத்திட்டம் | 10,049 | | 2,606 | | - | 100 |
| 4 | காலி வலயநீர் வழங்கல் கருத்திட்டம் | 1,755 | 11,395 | 1,075 | 75.00 | 7.0 | 100 |
| 5 | பாரிய இரத்தினபுரி நீர் வழங்கல் கருத்திட்டம் | 1,530 | 7,000 | 930 | - | - | 61 |
| 6 | வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டம் | 3,580.00 | 7,500 | 1,862 | 60 | 3.2 | 71.9 |
| 7 | லக்கல புதிய நகர நீர் வழங்கல் கருத்திட்டம் | 4,496 | 6,800 | 1,110 | 396 | 35.7 | 88.7 |
| 8 | கிறிதர நீர் வழங்கல் கருத்திட்டம் | 513 | 5,000 | 314 | - | - | 54.4 |
| | மொத்தம் | **31,916** | **128,695** | **10,348** | **652** | | |

## 15.4 தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் செயற்றிட்டம் - 2025

| தொடர் இல. | பிரதான விடயத்துறை | கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதி மூலம் |
|---|---|---|---|---|
| 1 | நீர் மற்றும் துப்பரவேட்பாடு | தற்போது அமுலில் உள்ள நிர் வழங்கல் மற்றும் மலசல கழிவகற்றல் கருத்திட்டம் | 80,738.24 | உள்ளூர் நிதி |
| 2 | நீர் மற்றும் துப்பரவேட்பாடு | கொள்ளளவை மேம்படுத்தல் மற்றும் விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டம் (CEDE) | 11,000.00 | உள்ளூர் நிதி |
| 3 | நீர் மற்றும் துப்பரவேட்பாடு | துரித பிரதேச சபை வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் காரணமாக பயன்பாட்டுச் சேவைகளை மாற்றம் செய்தல் /மீளத் தாபித்தல் | 110.00 | உள்ளூர் நிதி |
| 4 | நீர் மற்றும் துப்பரவேட்பாடு | காணி கொள்ளல் | 2,295.80 | உள்ளூர் நிதி |
| **மொத்தம்** | | | **94,144.04** | |

# 16 தேசிய சமுதாய நீர் வழக்கல் திணைக்களம்

## 16.1 அறிமுகம்

நீர் மனிதனின் அடிப்படை உரிமையொற்றாகும். மேற்படி நோக்குடன் உரிய தரநியமங்களைக் கொண்ட குடிநீரைப் பெற்றுக் கொள்வது கடினமாக உள்ள கிராமிய மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்காக சமுதாய அடிப்படையிலான நீர்க் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் பல வருட காலமாக இலங்கை முழுவதிலும் அமுலில் உள்ளதுடன், அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பல கருத்திட்டங்கள் பல்வேறு சிக்கல்கள் காரணமாக 2010 ஆம் தசாப்தமளவில் செயலிழக்கும் அபாய நிலையை எதிரிகொண்டிருந்தன. அப்போதைய அரசு இந்த விடயத்தை நல்ல முறையில் புரிந்துகொண்டு சமுதாய நீர்க் கருத்திட்டங்களின் நிலைபேறான தன்மையை உறுதி செய்யும் நோக்கத்துடன் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

2014 செப்தெம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திணைக்களத்தின் முக்கிய நோக்கமாக இருப்பது சமுதாய நீர் கருத்திட்டங்களை ஒழுங்குறுத்தல் மற்றும் அவற்றின் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதாகும்.

தற்போது இலங்கையில் குடிநீர் வழங்கலில் 11% சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களினூடாக பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் ஒட்டுமொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 650,183 ஆகும்.

### நோக்கு

நிலைபேறான சமுதாய நீர்க் கருத்திட்டங்களின் மூலம் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக் கொடுத்தல்.

### செயற்பணி

சுபிட்சம்மிக்க இலங்கையை உருவாக்குதல், சமுதாய நிர் சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் துப்பரவேட்பாட்டை அபிவிருத்தி செய்தல், சமுதாய நீர் அமைப்புக்களை பலப்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல், நீர் மூலங்கள் மற்றும் சுற்றாடலை அபிவிருத்தி செய்தல் மற்றும் திணைக்களத்தின் கொள்ளளவை கட்டியெழுப்புதல் ஆகிய பொறுப்புவாய்ந்த செயற்பணியின் பிரதான தரப்பினர் என்ற வகையில் சகல தரப்பினர்களினதும் சுகாதார ரீதியில் ஆரொக்கியமான பங்கேட்பு மற்றும் வெளிப்படைத் தன்மையைக் கொண்ட இலங்கை சனத்தொகையின் நீர் மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் திணைக்களத்தின் ஆற்றல்களை கட்டியெழுப்புதல்.

## 16.2 பிரதான பணிகள்

- குடிநீர் வழங்கல் மற்றும் துப்பரவேட்பாடு தொடர்பான கொள்கைகளை தயார் செய்வதற்கு மற்றும் இற்றைப்படுத்த உதவி வழங்குதல்.
- தேவையைக் கொண்ட பிரதேசங்களுக்கு சமுதாய அடிப்படையிலான நீர் வழங்கல் கருத்திட்டங்களை நிர்மாணித்தல், முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கைகள் மற்றும் நீர் சுத்திகரிப்புக்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- சமுதாய அடிப்படையிலான நீர்க் கருத்திட்டங்களின் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதற்காக பங்கேட்பு அணுகுமுறையை அமுல்படுத்தல்.
- நீரேந்து பரப்புப் பிரதேசங்களை மேம்படுத்தல் மற்றும் பேணல் மற்றும் நீர்ப் பாதுகாப்புத் திட்டங்களை அமுல்படுத்தல்.
- சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் திறன் அபிவிருத்திக்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

- இனங்காணப்படாத சிறுநீரக நோய் பரவிவருகின்ற மற்றும் பரவியுள்ள பிரதேசங்களுக்கு நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புக்களை நிர்மாணித்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- மழை நீர் சேகரிக்கும் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்தல் மற்றும் நிலக் கீழ் நீரை மீளப் பயன்படுத்தல் போன்ற புதிய முறைகளை அறிமுகம் செய்வதன் மூலம் சமுதாய அடிப்படையிலான நீர்க் கருத்திட்டங்களின் நிலைபேறான தன்மையை உறுதி செய்தல்.
- நீர் மாதிரிகளை பரிசோதிக்கத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- வேறு அரசசார்பற்ற மற்றும் அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை பேணிவதன் மூலம் சமுதாய அடிப்படையிலான நீர் கருத்திட்டங்களின் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல்.

## 16.3 2024 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம

<table>
<tr><th rowspan="2">இல.</th><th rowspan="2">கருத்திட்டத்தின் பெயர்</th><th rowspan="2">மொத்த மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.)</th><th rowspan="2">பயனாளிகளின் எண்ணிக்கை</th><th rowspan="2">2024 ஆண்டுக்கான ஏற்பாடு ரூ.மி.</th><th colspan="3">நிதிசார் முன்னேற்றம் 2024.12.31</th></tr>
<tr><th>நிதிசார் முன்னேற்றம் ரூ.மி.</th><th></th><th>பௌதீக முன்னேற்றம் %</th></tr>
<tr><td>1</td><td>சமுதாய நீர் அபிமானி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிதாக 179 நீர் கருத்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்தல்</td><td>7,645.96</td><td>47,667</td><td>1231</td><td>663</td><td>54</td><td>61%</td></tr>
<tr><td>2</td><td>அமுலில் உள்ள சமுதாய நீர்க் கருத்திட்டங்களை புனரமைப்புச் செய்வதன் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 74 கருத்திட்டங்களை அமுல்படுத்தல்</td><td>427.33</td><td>20,178</td><td>213.29</td><td rowspan="7">255</td><td rowspan="7">51%</td><td>85.0%</td></tr>
<tr><td>3</td><td>துப்பரவேட்பாட்டு வசதிகளை வழங்கும் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 294 கருத்திட்டங்களை அமுல்படுத்தல்</td><td>14.7</td><td>294</td><td>4.5</td><td>85.0%</td></tr>
<tr><td>4</td><td>பொது வசதிகளை வழங்கும் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 8 கருத்திட்டங்களை அமுல்படுத்தல்</td><td>25.06</td><td>5,000</td><td>7</td><td>95.0%</td></tr>
<tr><td>5</td><td>நெனோ சுத்திகரிப்பு கட்டமைப்புக்களை தாபிக்கும் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 30 கருத்திட்டங்களை அமுல்படுத்தல்</td><td>85.49</td><td>7,277</td><td>35.35</td><td>82.0%</td></tr>
<tr><td>6</td><td>அமுலில் உள்ள சமுதாய அடிப்படையிலான நீர்க் கருத்திட்டங்களை புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 68 கருத்திட்டங்களை அமுல்படுத்தல்</td><td>218.49</td><td>13,662</td><td>218.49</td><td>34.0%</td></tr>
<tr><td>7</td><td>விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நீர்த் தினத்தைக் கொண்டாடும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 5 கருத்திட்டங்களை அமுல்படுத்தல்</td><td>1</td><td>500</td><td>1</td><td>100.0%</td></tr>
<tr><td>8</td><td>சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் கொள்ளளவை அபிவிருத்தி செய்வதன் கீழ் 50 கருத்திட்டங்களை அமுல்படுத்தல்</td><td>5</td><td>5,250</td><td>5</td><td>100.0%</td></tr>
</table>

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | அனர்த்த சந்தர்ப்பங்களில் மற்றும் ஏனைய அவசர சந்தர்ப்பங்களில் சமுதாய அடிப்படையிலான கருத்திட்டங்களுக்குத் தேவையான வசதிகளை பெற்றுக் கொடுத்தல் | 22 | 500 | 15.36 | | | 90.0% |
| 10 | நிலக் கீழ் நீரை மீள் பயன்படுத்தல் மற்றும் நீர்ப் பாதுகாப்பு திட்டத்தை தயார் செய்தல் மற்றும் கணக்காய்வு செய்வதன் கீழ் 3 கருத்திட்டங்களை அமுல்படுத்தல் | 3 | 6,600 | 3 | 3 | 100 | 100% |
| 11 | மழை நீர் தாங்கிகளை தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 5 கருத்திட்டங்களை அமுல்படுத்தல் | 11.187 | 161 | 11.20 | 8.82 | 79 | 100% |
| 12 | கிராமிய நீர் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கேகாலை மெனிக்கடவர நீர்க் கருத்திட்டங்களை புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளல் | 54.33 | 800 | 50.00 | 24.25 | 70 | 70% |
| 13 | கிராமிய நீர் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கேகாலை மானிக்கலவத்த நீர்க் கருத்திட்டங்களை புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளல் | 2.11 | 35 | 2.11 | | 100 | 100% |
| 14 | நீரேந்து பரப்புக்களை பேணல் நிகழ்ச்சித்திட்டம் | 3.6 | 1000 | 3.60 | 0.62 | 35 | 90% |
| 15 | சிறுநீரக நோய் நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் EDR இயந்திரத்தை தாபித்தல் | 29.53 | 1500 | 29.53 | 24.25 | 86.25 | 98% |
| 16 | யுனிசெவ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குருநாகல் கனேதென்ன நீர்க் கருத்திட்டத்திற்கு சூரிய சக்திக் கட்டமைப்பை தாபித்தல் | 5.66 | 1343 | 5.66 | 0.26 | 74.52 | 90% |
| | **மொத்தம்** | **8,553** | **111767** | **1835** | **990** | **54%** | **87%** |

## 16.4 தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டம்

| தொடர் இல. | | பிரதான விடயத்துறை | கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதி மூலம் | பௌதீக இலக்கு |
|---|---|---|---|---|---|---|
| 1 | | புதிய நீர்க் கருத்திட்டங்கள் | சமுதாய நீர் அபிமானி நிகழ்ச்சித்திட்டம் | 12,125.65 | இலங்கை அரசு | 100% |
| 2 | i | அமுலிலல் உள்ள கருத்திட்டங்களை புனரமைப்புச் செய்தல் | அமுலில் உள்ள 100 சமுதாய நீர்க் கருத்திட்டங்களை புனரமைப்புச் செய்தல் மற்றும் மேம்படுத்தல் | 600.00 | இலங்கை அரசு | 100% |
| | ii | | அமுலில் உள்ள சமுதாய நீர்க் கருத்திட்டங்களின் நீரின் தரத்தை மேம்படுத்தல் | 200.00 | இலங்கை அரசு | 100% |
| | iii | | நீர் மூலங்களைப் பேணுவதற்காக துப்பரவேட்பாட்டு மலசலகூடங்கள் 200 ஐ நிர்மாணித்தல் | 15.00 | இலங்கை அரசு | 100% |
| | iv | | சமுதாய அடிப்படையிலான திறன் அபிவிருத்தியின் கீழ் 50 கருத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் தேவைகளுக்கு உபகரணங்களைப் பெற்றுக் கெடுத்தல் | 10.00 | இலங்கை அரசு | 100% |
| | v | | அனர்த்த சந்தர்ப்பங்கள் மற்றும் ஏனைய அவசர சந்தர்ப்பங்களில் சமுதாய நீர்க் கருத்திட்டங்களுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல் | 20.00 | இலங்கை அரசு | 100% |
| | vi | | விழிப்புணர்வூட்டல் மற்றும் நீர்த் தினத்தைக் கொண்டாடுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கருத்திட்டங்களை அமுல்படுத்தல் | 10.00 | இலங்கை அரசு | 100% |
| 3 | | யுனிசெவ் நிகழ்ச்சித்திட்டம் | காலநிலை மாற்றங்களுக்கு தாக்குப் பிடிக்கும் சமுதாய நீர்க் கருத்திட்டங்களை நிர்மாணித்தல் | 1.00 | இலங்கை அரசு | 100% |
| **மொத்தம்** | | | | **12981.65** | | **100%** |

# 17 கலம்பு லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி பிறைவேட் லிமிட்டட

## 17.1 அறிமுகம்

இலங்கையில் தனித்துவமான ஓரிடமான கொழும்பு தாமரைக் கோபுரம், தெற்காசியாவில் மிக உயரமான சுய-துணைமைக் கட்டமைப்பாக (Tallest self-supporting structure) விளங்குவதுடன், 356 மீட்டர் உயரத்துடன் கொழும்பு வானில் பிரகாசிக்கும் ஓரங்கமாகும். அதேபோல், இலங்கையில் மிகவும் கோடிட்டுக்காட்டத்தக்க ஓரிடமாகவும் முன்னணி சுற்றுலா சேரிடமொன்றாகவும் தற்போது அது மாறியுள்ளது.

தாமரைக் கோபுரத்தின் செயற்பாட்டு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்பார்வைசெய்யும் பொறுப்பை வகிக்கும் கொழும்பு தாமரைக் கோபுரம் முகாமைத்துவ கம்பனி, தாமரைக் கோபுரத்தின் வசதிகளையும் சேவைகளையும் வினைத்திறனுடன் முகாமை செய்வதோடு வர்த்தமயமாக்கலை உறுதிப்படுத்தும் நோக்கில் நிறுவப்பட்டது.

## 17.2 கொழும்பு தாமரைக் கோபுரம் பற்றிய பருமட்டான பகுப்பாய்வு

- இடம்: கொழும்பு, இலங்கை.
- உயரம்: 356 மீட்டர் (1,168 அடி)
- கட்டமைப்பு: 13 மாடிகள் கொண்ட கலப்பு பாவனை வசதி (அடிப்பகுதி 4, டவர் ஹவுஸ் 9)
- மின் தூக்கிகள் : 8
- இணையத்தளம்: colombolotustower.lk
- கிரயம்: ஏறத்தாழ 113 மில்லியன் அமெரிக்க டொலர்
- முக்கியத்துவம்: தெற்காசியாவில் உயரமான சுய துணைமைக் கட்டமைப்பு

## 17.3 முக்கிய திகதிகள்

- கம்பனி பதிவு : 2022 பெப்ரவரி 3
- CEIEC இனால் TRCSL க்கு ஒப்படைத்தல்: 2022 பெப்ரவரி 28
- முகாமைத்துவ ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினம்: 2022 ஆகஸ்ட் 08
- மக்கள் பாவனைக்கு திறக்கப்படல் : 2022 செப்டம்பர் 15
- குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடல்: 2023 ஏப்ரல் 10

## 17.4 கொழும்பு தாமரைக் கோபுரத்தை வர்த்தகமயமாக்கலும் தொழில்முயற்சி மூலோபாயத் திட்டமும்

கொழும்பு தாமரைக் கோபுரத்தின் வர்த்தகமயமாக்கல் மூலோபாயமானது கல்வி, தொழில்நுட்பம், பொழுதுபோக்கு ஆகிய முக்கிய மூன்று தூண்டுகள் மீது அமைந்துள்ளது. இந்த மூலோபாய சட்டகம் அறிவுப் பரிமாற்றம், தொழில்நுட்ப முன்னேற்றம், பலதரப்பட்ட பொழுதுபோக்கு அம்சங்களுக்கான முக்கிய சேரிடமொன்றாக கோபுரத்தை அமைப்பது கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ கம்பனியின் நோக்கமாகும்.

## 17.5 கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ கம்பனியின் மூலோபாயங்கள்

- கல்வி:
  அறிவைப் பரிமாறும், கற்றல் மையமொன்றாக கோபுரத்தை நிலைப்படுத்தல்.
- தொழில்நுட்பம்:
  அதிநவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட வர்த்தக நிலையமொன்றாக, உயர் வசதிகளுடன்கூடியதாக அபிவிருத்தி செய்தல்.
- பொழுதுபோக்கு:
  கோபுரம் சார்ந்த, பல்வேறு பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கான சேரிடமொன்றாக மாற்றுதல்.

**நோக்கு**

நாம் பொழுதுபோக்கு மற்றும் தொழில்நுட்ப உலகின் மாயாஜால சந்தர்ப்பங்களை உருவாக்குவோம்.

**பணி**

நாம் விந்தையூட்டும் பொழுதுபோக்கு மற்றும் தொழில்நுட்பத்துடன் மனிதர்களை மகிழ்விக்கின்றோம். வலுவூட்டுதலும் குழுநிலைச் செயற்பாடுகளும் ஊடாக மகிழ்வை ஏற்படுத்துவதற்கு நாம் எமது மக்களை உற்சாகப்படுத்துகின்றோம். நாம் அதிசிறப்பு நிலைக்கும் ஒன்றாகவே வளர்வதற்கும் உரிய பங்காண்மைகளைக் கட்டியெழுப்புவோம்.

## 17.6 முக்கிய பெறுமானங்கள்

- தலைமைத்துவம்: புத்தாக்கங்களும் மாற்றங்களும் ஊடாக தேசத்திற்கு பெறுமானமொன்றை உருவாக்குதல்.
- உரித்துடைமை : கூட்டுப் பெறுபேறுகளுக்காக ஆக்கத்திறனுக்கும் பொறுப்புக்கூறும்பாங்கிற்கும் வலுவூட்டுதல்.
- நம்பகத்தன்மை: பங்கீடுபாட்டாளர்களுடன் நேர்மையான, ஒருமைப்பாடான உறவுகளைக் கட்டியெழுப்புதல்.
- ஒற்றுமை: கூட்டான நோக்கொன்றும் பொது நோக்கங்களுக்கான ஒத்துழைப்பும்.
- உற்சாகம்: வளர்ச்சியைப் போற்றும், வெற்றிநிலைகளைக் கொண்டாடும் உயிர்ப்பான சூழல் தொகுதியொன்றைப் போசித்தல்.

## 17.7 கொழும்பு தாமரைக் கோபுரத்திற்கு இதுவரை வருகைதந்து பார்வையிடுவோரின் புள்ளிவிவரங்கள்

- காட்சிகாண் மேற்தளத்தின் மொத்த பார்வையாளர்கள்: 2,524,174 (2022 செப்டம்பர் 15 முதல் 2024 திசெம்பர் 31 வரை)
  - உள்நாட்டு பார்வையாளர்கள்: 2,409,976
  - வெளிநாட்டுப் பார்வையாளர்கள்: 114,198
- Pixelbloom டிஜிட்டல் கலை நூதனசாலையைப் பார்வையிடுவோர்: 161,095 (2024 மே 08 முதல் 2024 திசெம்பர் 31 வ

## 17.8 எதிர்காலத் திட்ட கருத்திட்டங்கள் (2025)

### 17.8.1 Lotus Aqua Bay

பல்வேறு நீர் அடிப்படையிலான செயற்பாடுகள், பொழுதுபோக்குகள் மற்றும் உணவு அனுபவங்களை வழங்குகிறது. படகுச் சவாரி, நீர் விளையாட்டுக்கள், குடும்ப நட்புறவுச் செயற்பாடுகள் உள்ளிட்ட ஓய்வு மற்றும் சிலிப்பூட்டும் மையமொன்றாக இருப்பது அதன் நோக்கமாகும்.

### 17.8.2 Go Bungy

திகில் விரும்பிகளைக் கவர்வதற்கு உருவாக்கப்பட்டுள்ள கோபுரத்திலிருந்து எட்ரினலின் பாய்ச்சும் Bungy குதிக்கும் அனுபவம். இதன்மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விருந்தினர்களை ஈர்க்க எதிர்பார்க்கப்படுகின்றது. தீவிர விளையாட்டு சேரிடம் என்ற வகையில் கோபுரத்தின் கவர்ச்சியை அதிகரிக்கின்றது.

## 17.8.3 Warehouse – Multi-Purpose Venue

வர்த்தக காட்சிகள், உள்ளக மேடை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளுக்கான ஒரு பலவின வசதி. பல்வேறு பாரிய நிகழ்வுகளுக்கு வசதியளிப்பதற்கான அதிநவீன வசதிகளையும் நெகிழ்வான திட்டவமைப்புகளையும் இந்த இது கொண்டுள்ளது.

கொழும்பு தாமரைக் கோபுர கம்பனி கல்வி, தொழில்நுட்பம், பொழுதுபோக்கு என்பவற்றின் கூட்டாக அமைந்து, கோபுரம் அதன் மூலோபாய ரீதியான வர்த்தகமய திட்டத்தையும் கவர்ச்சிகரமான எதிர்கால கருத்திட்டங்களுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருந்தினர்களுக்கு முக்கிய சேரிடமொன்றாக மாறுவதற்கு தயார்நிலையில் உள்ளது. கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவக் கம்பனியின் நோக்கும் பணிகளும் இந்த சிறப்பான திருப்பு கட்டத்தின் தொடர்ச்சியான அபிவிருத்திக்கும் வெற்றிநிலைக்கும் காரணமாக உள்ளது.

## 17.9 கருத்திட்ட முன்னேற்றம்

| No | Project/SBU Name | Total Estimated Cost Rs. Mn. | Visitors | Budget 2024 Rs. Mn | Financial Progress as at 31.12.2024 | | | Physical Progress % |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | CAPEX 2023/2024 | | CAPEX | Actual Revenue Rs. Mn | Budget Rs. Mn. | % | |
| 1 | Core Business | 755 | 924,741 | 546 | 966 | 1,074 | 90 | 100 |
| 2 | CLC | 36 | 30,544 | 20 | 50 | 122 | 45 | 95 |
| 3 | Pixel Bloom | 85 | 138,791 | 16 | 43 | 157 | 27 | 85 |
| 4 | Citrus Project | 245 | 79,727 | 26 | 722 | 938 | 77 | 100 |

## 17.10 கருத்திட்டத்தை அமுல்படுத்தும்போது எதிர்நோக்கும் வெற்றிகளும் சவால்களும்

### 17.10.1 காட்சிகாண் மேற்தளம்

**வெற்றிகள்**

- 2024 சனவரி முதலாம் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆம் திகதி வரை வருகைதந்துள்ள உள்நாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை – 1,012,311
- 2024 சனவரி முதலாம் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆம் திகதி வரை வருகைதந்துள்ள வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை – 69,842






**சவால்கள்**

காட்சிகாண் மேற்தளம் வானிற்குத் திறந்துவிடப்பட்டதாக அமைந்திருப்பதால், வருகைதரும் பார்வையாளர்களுக்கு மழை பொழியும் நேரத்தில் தேவைப்படும் வசதிகளை வழங்க முடியாத நிலை காணப்படுதல்.

## 17.10.2 டிஜிட்டல் கலைக்கூடத்தை நிறுவுதல் - Pixel bloom – Digital Art Museums

**வெற்றிகள்**

2024 மே 08 ஆம் திகதியிலிருந்து பொதுமக்களுக்கு திறந்துவிடப்பட்ட பின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வருகைதந்துள்ளவர்களின் எண்ணிக்கை – 161,095

### 17.10.3 லோட்டஸ் அக்வா பே - Lotus Aqua Bay

**அடைவுகள**

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பயணிகள் போக்குவரத்துக்கான படகொன்றைப் பெற்றுக்கொண்டு சுமார் முப்பத்தைந்து பேருக்கு இன்ப ஒன்றுகூடல்களை நடாத்தக்கூடியவாறு நவீனமயப்படுத்தல்.
அதற்கு அவசியமான விதத்தில் ஏற்ற வசதிகளை முன்னேற்றுதல்.

**சவால்கள்**

பெய்ரா வாவியில் குறித்த கருத்திட்டத்தை மேற்கொள்வதற்கு அவசியமான அனுமதியை மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்தும் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளல்.

### 17.10.4 மெஜெஸ்ரிக் பிரைட் (“Majestic Pride”) கெசினோ கருத்திட்டம்

**வெற்றிகள்**

கீழ்த் தளத்தில் 6,350 சதுர அடி பரப்பளவிலும் இருபத்தெட்டாவது மாடியில் 10,610 சதுர அடி பரப்பளவிலும் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

முதலாம் மாடியில் 6,743 சதுர அடி பரப்பளவை அவர்களின் அலுவலக நடவடிக்கைகளுக்காக ஆறு மாதங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்குதல்.

இரண்டாவது மாடியில் 45,260 சதுர அடி பரப்பளவில் வியாபார நடவடிக்கைகளுக்கு அவசியமான நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

**சவால்கள்**

நிர்மாண/நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு அவசியமான அனுமதியுடன் அரச நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

## 17.11 SDG வழிகாட்டல்களுக்கு அமைய 2025 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

| தொ. இல. | முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் / நோக்கங்கள் |
|---|---|
| 1 | 2024 ஆம் ஆண்டில் 1.4 பில்லியன் LKR மற்றும் 2025 முதல் 1.6 பில்லியன் வருடாந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ளல். |
| 2 | செல்வத்தை உச்சளவாக்குவதற்கு 2025 ஆம் ஆண்டு முழுவதும் மிகவும் நிதிரீதியாக மூல வாய்ப்புவளமுள்ள புதிய SBU சேர்ப்பதுடன், அடிப்படை வரவுசெலவுத்திட்டம் ஒன்றின் ஊடாக 2025 ஆம் ஆண்டுக்கு 16 மில்லியன் LKR வருடாந்த தேறிய இலாபமொன்றைப் பேணுதல். |
| 3 | 2025 ஆம் ஆண்டாகும்போது கோபுரத்தைப் பார்வையிடுவதற்கு வரும் 60,000 வெளிநாட்டவர்களின் ஆண்டுக்குரிய வீழ்ச்சியொன்றை அடைந்துகொள்வதற்கு குறைந்தபட்சம் சர்வதேச/உள்நாட்டுச் சந்தையில் முக்கிய 80 முக்கிய பங்கீடுபாட்டாளர்களுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுதல். |
| 4 | 2025 ஆம் ஆண்டாகும்போது ஊழியர் புரள்வை 15% ஐ விட குறைந்த மட்டமொன்றில் பேணுதல். |
| 5 | 2025 ஆம் ஆண்டாகும்போது பாதுகாப்புக் கொள்கையை அமுல்படுத்துவதன் மூலம் தாமரைக் கோபுர வளவில் பங்கீடுபாட்டாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான ஒரு சூழலை ஏற்படுத்துதல். |
| 6 | 2025 ஆம் ஆண்டு முதல் ஊழியர் திருப்திநிலை விகிதத்தை 90% பேணுதல். |
| 7 | ஆளொருவருக்கு சராசரியாக 10 மணி நேர பயிற்சியளிப்பதற்கு தொழில் வகிபாகத்தை மையமாகக்கொண்ட பயிற்சி, அபிவிருத்தி மற்றும் உந்துகை நிகழ்ச்சிகளை நடாத்துதல். |
| 8 | 2025 ஆம் ஆண்டாகும்போது வெற்றிகளை அடையாளம் காண்பதற்கு காலப்பொருத்தமான வெகுமதி அமைப்புகளை அமுல்படுத்தலும் முறைமை முன்னேற்றி முன்னெடுத்துச் செல்லலும். |
| 9 | 2025 ஆம் ஆண்டு முதல் வருமானத்தில் 0.1% ஐ ஒதுக்குவதன் மூலம் உயர் பங்கீடுபாட்டாளர்களின் பங்கேற்புடன்கூடிய CSR செயல்முனைப்புகள் |
| 10 | எரிசக்திப் பாவனையை குறைப்பதற்கும் 2025 ஆம் ஆண்டாகும்போது எரிசக்தித் தேவையை 20% இனால் நிறைவுசெய்வதற்கும் பசுமை எரிசக்தித் தீர்வுகளை அமுல்படுத்தல். |
| 11 | 2026 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது முழுமையான ஒருங்கிணைந்த முறைமையொன்றை அமுல்படுத்துவதன் மூலம் 90% கடதாசியற்ற ஒரு சூழலை அடைந்துகொள்ளல் |
| 12 | 2024 ஆம் ஆண்டாகும்போது கழிவுப்பொருள் முகாமைத்துவக் கொள்கையொன்றை அனுசரித்து 2025 ஆம் ஆண்டளவில் 100% கழிவுப்பொருள் அற்றநிலைக்கு மாற்றுதல். |
| 13 | 2025 ஆம் ஆண்டாகும்போது வாடிக்கையாளர் மீளாய்வு தரப்படுத்தல் புள்ளியை 4.4 ஐ விட உயர்வாகப் பேணுதல். |
| 14 | 2025 ஆம் ஆண்டாகும்போதுகுறைந்தபட்சம் மூன்று தலைசிறந்த பொழுதுபோக்குச் செயற்பாடுகளையும் அனுபவங்களையும் அறிமுகப்படுத்துதல். |
| 15 | 2025 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது 50K பின்தொடர்பவர்களை அடைந்துகொள்வதன் மூலம் டிஜிட்டல் அரங்குகளில் இருப்பொன்றை அமைத்துக் கொள்ளல். **(FB/IG/TikTok)** |
| | 2025 ஆம் ஆண்டாகும்போது நுழைவை டிஜிட்டல்மயமாக்குதல். |
| 17 | வாடிக்கையாளர் சேவையை முன்னேற்றி 2026 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியாகும்போது தெற்காசியாவில் ஓய்வு வகுதியின் கீழ் 10 மிக்குயர் விருதுகளை தமதாக்கிக் கொள்ளல். |
| 18 | 2025 ஆம் ஆண்டாகும்போது ஊழியர்களுக்கான கைந்நூலையும் நெறிமுறைக் கோவையையும் தயாரித்து கையளித்தல். |
| 19 | 2026 ஆம் ஆண்டாகும்போது முழு தர முகாமைத்துவ முறைமையை (TQM system) அமுல்படுத்தல். |

# 18 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியீட்டக் கருத்திட்டங்கள்

## 18.1 அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

### 18.1.1 அறிமுகம்

மூலோபாய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கலாசார மற்றும் இயற்கை மரபுரிமைகளைக் காத்து அநுராதபுரம் நகரின் புனிதத்தலங்களை அபிவிருத்தி செய்வதற்கான சமநிலையான ஒரு முறைமையைப் பிரபல்யப்படுத்துவதும் வெளிநாட்டவர்களைக் கவரும் ஒரு நகரை உருவாக்குவதும் அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**முக்கிய விடயங்கள்:**

| | | |
|---|---|---|
| கருத்திட்டப் பெயர் | : | அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம் |
| நிதிமூலம் | : | அபிவிருத்திக்கான பிரெஞ்சு முகவராண்மை (AFD) |
| கருத்திட்டத்தின் ஆரம்பத் திகதி | : | 2016.12.01 |
| பூர்த்திசெய்ய வேண்டிய திகதி | : | 2023.09.30 |
| வழங்கப்பட்டுள்ள கால நீடிப்பு | : | 2025.03.31 |
| வெளிநாட்டு கடன் தொகை | : | 52 மில்லியன் யூரோ |
| உள்நாட்டு நிதி | : | 10.4 மில்லியன் யூரோ |
| கருத்திட்ட அதிகார இடப்பரப்பு | : | அநுராதபுரம் மாநகர சபை அதிகார இடப்பரப்பு |

**நோக்கெல்லை**

- நகர உட்கூறுகளை முன்னேற்றுதல் - அணுகுமுறை, சுற்றுப்பயணம் மற்றும் வாகன முகாமைத்துவத்தை முன்னேற்றுதல்.
- பொதுத் தேவைகளை முன்னேற்றுதல் - கவர்ச்சிகரமாக பொதுத் தேவைகளை பண்புத்தரத்துடன் முன்னேற்றுதல்.
- வெள்ளப்பெருக்கு அபாயத்தைத் தணிப்பதற்காக நகர வடிகாலமைப்புகளை முன்னேற்றுதல்.
- தேசிய மரபுரிமையை முன்னேற்றுதல்.
- நிதிசார் பேண்தகு முகாமைத்துவத்திற்காக உட்கட்டமைப்பு வசதிகளையும் சொத்துரிமையாளர்களுக்கான கொள்திறன்களையும் கட்டியெழுப்பச் செய்தல்.
- சாக்கடை மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத் திட்டத்திற்கான சாத்திவள ஆய்வுகளை மேற்கொள்ளல்.

### 18.1.2 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| கருத்திட்டப் பெயர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.) | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு - 2024 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 | | பௌதிக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | | | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | (%) | |
| **கருத்திட்டம்:** அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்<br>**உப கருத்திட்டம்:** அநுராதபுரம் தெற்கு பலவின போக்குவரத்து நிலையத்தை அமைத்தல் | 1,176.13 (ஆரம்ப)<br>1,795.31 (திருத்திய) | இலங்கையர் அனைவரும் வெளிநாட்டவர்களும் | 995.91 | 303.27 | 30.45 | 46 |

## 18.1.3 2024 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தை அமுல்படுத்தும்போது அடைந்த வெற்றிகளும் எதிர்நோக்கிய சவால்களும்

**அடைந்த வெற்றிகள் :**

- பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அரச அங்கீகாரம் கிடைத்தமை.
- பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கருத்திட்டத்தின் நிர்மாணத்திற்கான பொது நிதி கிடைத்தமை.
- ஆகக் குறைந்த ஊழியர் குழுவொன்றை ஈடுபடுத்தி எவ்வாறேனும் நிர்மாண இலக்குகளை அடைந்துகொண்டமை.

**எதிர்நோக்கிய சவால்கள் :**

- மதிப்பீட்டுக்கு உட்படாத வேலை உருப்படியை ஆரம்பமாக மேற்கொள்ள நேரிட்டமை.
- பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இரு தடவைகள் கருத்திட்டத்தை இடைநிறுத்த நேரிட்டமை.
- ஒப்பந்தக்காரரின் பலவீனமான காசுப்பாய்ச்சல், நிர்மாணங்களில் முக்கியமாக பாதிப்புச் செலுத்தியமை.
- 2025.03.31 அன்று கருத்திட்டத்தை நிறைவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளமை.



**இரட்டை மாடி பேருந்து நிலையத்தை அமைத்தல்**



**இரட்டை மாடி புகையிரத நிலையத்தை அமைத்தல்**



**மேம்பாலம் அமைத்தல்**



**புகையிரத பயணியர் மேடையை அமைத்தல்**



கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்தல்



தூர பயண சேவை நிலையத்தை அமைத்தல

## 18.1.4 2025 ஆம் ஆண்டின் செயல் திட்டம்

| முக்கிய விடயத்துறை | கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் | நிதி இலக்கு (ரூ.மி.) | நிதிமூலம் | பௌதிக இலக்கு |
|---|---|---|---|---|
| பொதுத் தேவைகளை முன்னேற்றுதல் | **கருத்திட்டம்:** அநுராதபுரம் ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்<br><br>**உப கருத்தட்டம்:** அநுராதபுரம் தெற்கு பலவின போக்குவரத்து நிலையத்தை அமைத்தல் | 1,795.31 (திருத்திய) | பொது நிதி | 100% |

## 18.1.5 பிற விடயங்கள்

வெளிநாட்டுக் கடன் தொகைகளாக 52.0 மில்லியன் யூரோவும் உள்ளூர் நிதியாக 10.4 மில்லியன் யூரோவும் இக்கருத்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள போதிலும், இதுவரை 2.7 மில்லியன் யூரோ மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை அரசு தலையிட்டு பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்குமாயின், கீழ்க்காணும் எஞ்சியுள்ள ஏனைய கருத்திட்டங்களையும் முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும். முக்கியமாக அடையாளம் காணப்பட்ட 24 உப கருத்திட்டங்களில் தற்போது 10 உப கருத்திட்ட வேலைகளை ப் பூர்த்திசெய்து உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வரும் அநுராதபுரம் தெற்கு பலவின போக்குவரத்து நிலையத்தை அமைக்கும் உப கருத்திட்டம் தவிர்ந்த ஏனைய 13 உப கருத்திட்டங்களின் அடிப்படை மதிப்பீடுகளுக்கும் பெறுகைகளுக்கும் அவசியமான ஆவணங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன.

- நகர உட்கூறுகளை முன்னேற்றுதல் - அணுகுமுறை, சுற்றுப்பயணம் மற்றும் வாகன முகாமைத்துவத்தை முன்னேற்றுதல்.
- பொதுத் தேவைகளை முன்னேற்றுதல் - கவர்ச்சிகரமாக பொதுத் தேவைகளை பண்புத்தரத்துடன் முன்னேற்றுதல்.
- வெள்ளப்பெருக்கு ஆபத்தைத் தணிப்பதற்காக நகர வடிகாலமைப்புகளை முன்னேற்றுதல்.
- தேசிய மரபுரிமையை முன்னேற்றுதல்.
- நிதிசார் பேண்தகு முகாமைத்துவத்திற்காக உட்கட்டமைப்பு வசதிகளையும் சொத்துரிமையாளர்களுக்காக கொள்திறன்களையும் கட்டியெழுப்பச் செய்தல்.
- சாக்கடை மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத் திட்டத்திற்கான சாத்திவள ஆய்வுகளை மேற்கொள்ளல்.

அதன்படி, அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் ஊடாக அநுராதபுரம் நகரின் புனிதத்தலங்களையும் புராதன நகரையும் அபிவிருத்திசெய்து வெளிநாட்டவர்களைக் கவரக்கூடிய ஒரு நகரத்தை உருவாக்க முடியும். அதன்மூலம் அந்நியச் செலாவணி ஈட்ட முடியும். இது குறித்து விசேட கவனம் ஈர்க்கப்பட வேண்டிய காலம் தோன்றியுள்ளது.

## 18.2 மேற்குப் பிரதேச மாநகர பெருந்திட்டம், கிழக்கு மாகாண மூலோபாய சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கான பெருந்திட்டம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான பெருந்திட்டத்தைத் தயாரிக்கும் கருத்திட்டம்

### 18.2.1 அறிமுகம்

இக்கருத்திட்டம் மூன்று சிறப்பான நோக்கங்களை முன்வைத்து அமுல்படுத்தப்படுகிறது. மேல் மாகாணத்தில் கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது ஏற்படும் தடங்கல்களை மதிப்பீடு செய்வதும் முன்னர் அடையாளம் கண்ட வினையூக்கிக் கருத்திட்டங்களில் நான்கு முன்னுரிமைக் கருத்திட்டங்களைத் தெரிவுசெய்வதும் மேற்குப் பிரதேச பெருந்திட்டத்தைத் தயாரிப்பதன் முக்கிய நோக்கமாகும். இக்கருத்திட்டங்களுக்கு நகர திட்டமிடல் ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதும் அமுல்படுத்தும் பணிச்சட்டமொன்றைத் தயாரிப்பதும் இதன் ஒரு நோக்கமாகும். கிழக்கு மாகாண மூலோபாய சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்யும் பெருந்திட்டம், கிழக்கு கரையோரம் சார்ந்த தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய நான்கு சுற்றுலா வலயங்களுக்கான முன்னுரிமைக் கருத்திட்டமொன்றாக விரிவான பெருந்திட்டமொன்றைத் தயாரிப்பதாகும். அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான வலயத் திட்டம், பேண்தகு நகர, கைத்தொழில் மற்றும் சமூக-பொருளாதார வளர்ச்சி, முதலீடுகளைக் கவர்தல், கொழும்பிற்கு மாற்று துறைமுக நிலையமொன்றாக அதனை நிறுவுதல், சுற்றாடல் பேணலுக்கு முன்னுரிமையளித்து முக்கிய வளர்ச்சித் துறைகளுக்கு விரிவான திட்டங்களை முன்வைப்பதை முக்கிய நோக்காகக்கொண்டு இயங்குகிறது. குறிப்பாக வர்த்தக நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதும், சுற்றுலா செயற்பாடுகளை முன்னேற்றுவதற்குள்ள உள்ளார்ந்த ஆற்றல்களை அடையாளம் காண்பதும் இதிலடங்கும்.

இக்கருத்திட்டத்திற்கு சிங்கப்பூர் சர்பானா ஜுரோங்க் தனியார் நிறுவனம் மதியுரைச் சேவைகளை வழங்குகிறது. அதேபோல், நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சு இதன் பயனராகும். நகர அபிவிருத்தி அதிகார சபை இக்கருத்திட்டத்திற்கான முக்கிய வசதியளிக்கும் நிறுவனமாகும். இதற்கான நிதிஒதுக்கீடுகள் இலங்கை திறைசேரியினால் வழங்கப்படுவதுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்பக் குழுவின் சிபார்சின் பேரில் தேசிய நடவடிக்கைக் குழு திட்டங்களை மீளாய்வு செய்து அனுமதியளிக்கிறது.

### 18.2.2 2024 ஆம் ஆண்டில் அடையப்பெற்றுள்ள பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

| | காலகட்டம் | ஒப்பந்தம் கைச்சாத் திட்ட திகதி | கருத் திட்டத்தை ஆரம்பித்த திகதி | பௌதிக இலக்கு | பௌதிக முன்னே-ற்றம் 2024.12.31 | நிதிசார் இலக்கு (ஐ.அ.டொ) | நிதிசார் முன்னே-ற்றம் (ஐ.அ.டொ) 2024.12.31 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேற்குத் திட்டம் | 2023 ஆகஸ்ட் 28 | 2024 சனவரி 08 | 100% | 97.5% | 336,000 | 294,000 |
| 2 | கிழக்குத் திட்டம் | | | 100% | 98% | 392,000 | 343,000 |
| 3 | அம்பாந்தோட்டை திட்டம் | | | 100% | 62% | 912,000 | 285,000 |

### 18.2.3 2024 ஆம் ஆண்டில் அடைந்த வெற்றிகளும் எதிர்நோக்கிய சவால்களும்

**வெற்றிகள்**

- கிழக்கு மாகாணத்திற்கான சுற்றுலா பெருந்திட்டமொன்றைத் தயாரிக்கும் பணியையும் மேற்குப் பிரதேசத்திற்கு மாநகர பெருந்திட்டமொன்றைத் தயாரிக்கும் பணியையும் வெற்றிகரமாக நிறைவுசெய்தல்.

- பாரிய அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக பூர்த்திசெய்யப்பட்ட கட்டமைப்புத் திட்டத்தையும் அடையாளம் காணப்பட்ட பிரதான ஆறு வளர்ச்சி நிலையங்களுக்கான விரிவான பெருந்திட்டங்களையும் வரைதல்.

**சவால்கள்**

- உயர்மட்ட புவியியல் தரவுகள் போன்ற தரவுகளைச் சேகரிக்கும், அடைந்து கொள்ளும் நீண்ட தாமதங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டமை.
- மதியுரை நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் காணப்படும் திட்டங்களின்/ பிரேரணைகளின் நடைமுறைச் சாத்தியமும் அமுல்படுத்தும் வாய்ப்பும் தொடர்பில் நிலவும் பொருந்தாமைகள் காரணமாக அவற்றை மீளாய்வு செய்வதும் திருத்துவதும் சம்பந்தமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்பக் குழு விசேட கவனம் செலுத்தியதன் காரணமாக காலம் கடந்தமை.
- 2024 ஆம் ஆண்டில் சனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் நடைபெற்றதன் காரணமாக தேசிய கருத்திட்ட நடவடிக்கைக் குழுக் கூட்டங்கள் கூட்டப்படுவது தாமதமடைந்தமை.

## 18.2.4 2025 ஆம் ஆண்டில் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் பற்றிய விபரம்

| | காலகட்டம் | பௌதிக இலக்கு சதவீதம் | நிதிசார் இலக்கு (ரூ) |
|---|---|---|---|
| **1** | **மேற்குப் பிரதேசத்திற்கான மாநகர பெருந்திட்டத்தைத் தயாரித்தல்** | **10%** | **12,348,000** |
| 1.1 | இறுதிக் கட்டம் | 10% | 12,348,000 |
| **2** | **கிழக்கு மாகாணத்திற்கான சுற்றுலா பெருந்திட்டத்தைத் தயாரித்தல்** | **8%** | **14,406,000** |
| 2.1 | இறுதிக் கட்டம் | 8% | 14,406,000 |
| **3** | **பாரிய அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான மாநகர பெருந்திட்டத்தைத் தயாரித்தல்** | **38%** | **184,338,000** |
| 3.1 | இரண்டாம் கட்டம் | 10% | 117,306,000 |
| 3.2 | மூன்றாம் கட்டம் | 80% | 33,516,000 |
| 3.3 | நான்காம் கட்டம் | 100% | 33,516,000 |

**குறிப்பு :** இங்கு காட்டப்பட்டுள்ள நிதிசார் இலக்கு 2025.01.02 ஆம் திகதியில் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிப்பட்ட பெயரளவிலான செலாவணி விகிதமான 01 ஐ.அ.டொ. = ரூ.294 எனக் கருதி தயாரிக்கப்பட்டுள்ளது.

## 18.3 கொழும்பு நகர மீளுருவாக்கக் கருத்திட்டத்திற்கு உததல்

### 18.3.1 அறிமுகம்

2010 ஆம் ஆண்டில் கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வாழும் வசதியிற் குறைந்த 50,000 குடும்பங்களைக் குடியேற்றுவதற்காக நகர மீளுருவாக்க நிகழ்ச்சித்திட்டம் (URP) முடுக்கிவிடப்பட்டது. மேற்படி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்காக 2025 அளவில் இன்னும் 5,500 வீட்டு அலகுகளை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் (AIIB) நிதி வசதியின் கீழ் 2019 ஏப்ரல் மாதம் முதல் கொழும்பு நகர மீளுருவாக்க கருத்திட்டத்திற்கு உதவும் கருத்திட்டம் முடுக்கி விடப்பட்டது. கொழும்பு நகர மீளுருவாக்க கருத்திட்டத்திற்கு உதவுதல், தொழில்நுட்பத் திட்டங்களை முன்னேற்றுதல், மீள்குடியேற்றுதல், பின்னைய மீள்குடியேற்றக் கொள்கைகள், வீடுகளைப் பராமரித்தல், மீள் அபிவிருத்திக்கான அணுகுமுறையில் புத்தாக்கம், வீடுகளின் நீண்டகால பேண்தகுநிலையை வடிவமைப்பதற்காக பொதுமக்களின் தலையீடுகளை மேற்கொள்ளல் ஆகியன இக்கருத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

**கருத்திட்டத்தின் நோக்கம்**

குறைந்த வருமானம்பெறும் சமூகத்தவரின் வீடுகளின் தரத்தை முன்னேற்றுதல், கட்டுப்படியான வீடுகளை நிர்மாணித்தல், காணிகளை மீள்அபிவிருத்தி செய்வதற்காக முதலீடுசெய்தல் ஆகியவற்றின் ஊடாக கொழும்பு காணிக் கையாளலின் வினைத்திறனை அதிகரித்தல்.

### 18.3.2 முக்கிய பணிகள்

இக்கருத்திட்டம், மூன்று உட்கூறுகளை உள்ளடக்கியதாகும்:

**உட்கூறு 1: வீடுகளை நிர்மாணித்தல்**

பல மாடி வீட்டுக் கட்டிடங்களில் வசதியிற் குறைந்த சமூகத்தினருக்கான ஐந்து உப கருத்திட்டங்களின் கீழ் 5,500 வீட்டு அலகுகளை (மீள்கட்டமைப்புப் பிரேரணைப்படி தற்போது 3,600 உத்தேச அலகுகள்) நிர்மாணிப்பதற்காக வசதியிற் குறைந்த குடியிருப்பாளர்களுக்கு உதவுதல்.

இந்த வீடமைப்புத் திட்டங்களில் வலிமையிழந்தோருக்கு வசதியான சனசமூக மண்டபங்கள், சிறுவர்கள் விளையாடுவதற்கான பகுதிகளுடன் முன்பள்ளிகள், பகற்கால பாதுகாப்பு நிலையங்கள், சில்லறைச் சாமான்கள், மருத்துவ நிலையங்கள் போன்ற பூரண உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படும்.

**உட்கூறு 2: காணி முன்னேற்றலும் வசதியளிப்பும்**

இந்த உட்கூறின் மூலம் வசதியிற் குறைந்த குடியிருப்புகளின் குடும்பங்கள் URP இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடி வீட்டு அலகுகளுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் பெற்றுக் கொள்ளக்கூடிய அல்லது பெற்றுக்கொள்ளக்கூடிய காணிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் உச்சளவாக்கப்படும். தற்போது சுமார் 92 ஏக்கர் காணி அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றை மீள் அபிவிருத்திசெய்வதற்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உட்கூறு 1 இன் கீழ் ஏலவே அடையாளம் காணப்பட்டுள்ள ஆறு உப கருத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றத்தின் விளைவாக 55 ஏக்கர்கள் வெறுமையாகி இருக்கும். ஏனைய 37 ஏக்கர்களையும் URP கட்டம் II இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பூர்த்திசெய்யப்பட்ட மற்றும் தற்போது அமுலிலுள்ள மீள்குடியேற்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வெற்றிடமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆறு ஏக்கர்கள் பூங்காக்கள் போன்ற பொதுப் பாவனைக்காக ஒதுக்கப்படுவதோடு, எஞ்சிய 86 ஏக்கர்களும் வர்த்தக மீள் அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்படும். இது தவிர, தெரிவுசெய்யப்படும் குடியிருப்புகளிலிருந்து சுமார் 40 ஏக்கர்களை விடுவிக்க எதிர்பார்க்கப்படுவதோடு, அதற்கு உட்கூறு 1 இன் கீழ் அடையாளம் காணப்பட்ட உப கருத்திட்டங்களின் கீழ் மீட்டளிப்பதற்கான வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

**உட்கூறு 3: தொழில்நுட்ப உதவியும் கருத்திட்ட முகாமையும்**

நகர மீளுருவாக்க நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன் செயலாற்றுகையை முன்னேற்றுவதற்கு கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் உதவுதல்.

## 18.3.3 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| இல. | கருத்திட்டப் பெயர் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.) | பயனாளி களின் எண்ணி க்கை | நிதி ஒதுக்கீடு – 2024 (ரூ.மி.) (A) | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 | | பௌதிக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) (B) | % (C=B/Ax 100) | |
| 1 | 624 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - கொலம்பகே மாவத்தை கருத்திட்டம் | 6,449.25 | 624 | 2,170.80 | 1,549.47 | 71.38 | 96.84 |
| 2 | 1000 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - ஸ்ரேடியம்கம கருத்திட்டம் | 13,134.96 | 1,000 | 1,861.97 | 691.42 | 37.13 | 98.83 |
| 3 | 300 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - ஒபேசேக்கரபுர கருத்திட்டம் | 3,239.20 | 300 | 7.00 | 198.73 | - | மீள கேள்வி விலை கோரல் இடம்பெற்று வருகிறது. |
| 4 | 700 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - எப்பல்வத்த கருத்திட்டம் | 7,213.70 | 700 | 565.03 | 1068.57 | 292.73 | 40.47 |
| 5 | 750 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - பர்கியூசன் வீதி கருத்திட்டம் | 7,673.66 | 750 | 500.00 | 597.26 | 119.45 | 13.21 |
| 6 | 700 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - மாதம்பிட்டிய கருத்திட்டம் | 7,268.76 | 700 | 600.00 | 1,807.59 (412.89 ரூ.மி. மேலதிக முற்பணத்துடன்) | 301.27 | 44.20 |

## 18.3.4 2024 ஆம் ஆண்டில் கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது எதிர்நோக்கிய சவால்களும் அடைந்த வெற்றிகளும்

### 18.3.4.1 கொலம்பகே மாவத்தை கருத்திட்டம் (624 வீட்டு அலகுகள்)

**அடைந்த வெற்றிகள்**

- அனைத்துக் கட்டிடங்களையும் முழுமையாக பூர்த்திசெய்து 96% முழுதுமளாவிய பௌதிக முன்னேற்றமொன்றை அடைந்திருப்பதுடன் இறுதி கைமாற்றல் சோதிப்புகள் இடம்பெற்று வருகின்றன.

 

### 18.3.4.2 ஸ்ரேடியம்கம கருத்திட்டம் (1000 வீட்டு அலகுகள்)

**அடைந்த வெற்றிகள்**

- கையேற்கும் செயன்முறையை ஆரம்பிக்க முன்னர் 700 வீட்டு அலகுகளின் மூன்றாம் தரப்பு சோதிப்பை நிறைவு செய்தல்.
- ஒப்பந்தப்படி பணியின் நோக்கெல்லையை 99% ஐப் பூர்த்தி செய்தல்.

 

### 18.3.4.3 ஒபேசேக்கரபுர கருத்திட்டம் (300 வீட்டு அலகுகள்)

**அடைந்த வெற்றிகள்**

- எஞ்சிய வேலைகளுக்கு நிதியளிப்பதற்கு AIIB வங்கியின் அனுமதி பெறப்பட்டது. எஞ்சிய வேலைகளுக்கான மீள் கேள்வி விலைகோரல் இடம்பெற்று வருகிறது.

 

### 18.3.4.4 எப்பல்வத்த கருத்திட்டம் (700 வீட்டு அலகுகள்)

**அடைந்த வெற்றிகள்**

- A கட்டிடத்தின் கட்டமைப்புசார் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.
- 90% திட்டமிடல் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.
- ஒப்பந்தப்படி பணியின் நோக்கெல்லை 39% பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.





### 18.3.4.5 பர்கியூசன் வீதி கருத்திட்டம் (750 வீடுகள்)

**அடைந்த வெற்றிகள்**

- மூன்று கட்டிடங்களின் நிலக்கால் (piling) அமைக்கும் பணி நிறைவுபெற்றுள்ளது.
- A கட்டிடத்தின் சிறப்புக் கட்டமைப்பின் கட்டமைப்புசார் வேலைகளை (super structure structural works) ஆரம்பித்தல்.





### 18.3.4.6 மாதம்பிட்டிய கருத்திட்டம் (700 வீட்டு அலகுகள்)

**அடைந்த வெற்றிகள்**

- நான்கு கட்டிடங்களினதும் உப கட்டமைப்பின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- A, B மற்றும் C கட்டிடங்களின் கட்டமைப்புசார் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- ஒப்பந்தப்படி பணியின் நோக்கெல்லை 42.38% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.





## 18.3.5 செயல் திட்டம் - 2025

| முக்கிய விடயத்துறை | கருத்திட்டம் | நிதி இலக்கு (ரூ.மி.) | நிதிமூலம் | பௌதிக இலக்கு (%) |
|---|---|---|---|---|
| உட்கூறு 1 | 624 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - கொலம்பகே மாவத்தை கருத்திட்டம் | 5538 | ஆசியன் உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 100 % |
| | 1000 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - ஸ்ரேடியம்கம கருத்திட்டம் | 10348 | | 100 % |
| | 300 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - ஒபேசேக்கரபுர கருத்திட்டம் | 1534 | | ஒபேசேக்கரபுர கருத்திட்டத்தின் எஞ்சிய வேலைகளுக்கான ஒப்பந்தமளிப்பும் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பித்தலும். |
| | 700 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - எப்பல்வத்த கருத்திட்டம் | 4668 | | 84.00 % |
| | 750 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - பர்கியூசன் கருத்திட்டம் | 4073 | | 84.00 % |
| | 700 வீட்டு அலகுகளைத் திட்டமிடுதலும் நிர்மாணிப்பும் - மாதம்பிட்டிய கருத்திட்டம் | 60021 | | 86.50 % |

## 18.3.6 சவால்கள்

- **கொலம்பகே மாவத்தை கருத்திட்டமும் ஸ்ரேடியம்கம கருத்திட்டமும்** ஒட்டுமொத்த கருத்திட்டக் கிரயம் தாண்டிச்செல்லல். அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவுள்ளது.
- **கொலம்பகே மாவத்தை கருத்திட்டமும் ஸ்ரேடியம்கம கருத்திட்டமும்** சேவை இணைப்புக் கட்டணங்கள் ஒதுக்கப்பட்ட தற்காலிக தொகை விட அதிகம். அதற்கு அமைச்சரவை அனுமதி பெறப்படவுள்ளது.
- **கொலம்பகே மாவத்தை கருத்திட்டமும் ஸ்ரேடியம்கம கருத்திட்டமும்** கொழும்பு மாநகர சபையிடம் மலசலகூட குழாய் வசதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
- **கொலம்பகே மாவத்தை கருத்திட்டம்** ஒப்பந்தத் தொகையை விட சுமார் 50% அதிக செலவொன்றை மேற்கொள்ள நேரிடும்.
- **ஒபேசேக்கரபுர கருத்திட்டம்** முந்திய ஒப்பந்தக்காரருக்கு உரிமைக் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- **ஒபேசேக்கரபுர கருத்திட்டம்** 28 மில்லியன் அமெரிக்க டொலர் கொண்ட AIIB வங்கிக் கடன் தொகைக்கான NPD அனுமதியையும் அமைச்சரவை அனுமதியையும் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.
- **எப்பல்வத்த கருத்திட்டத்தின்** ஒப்பந்தக்காரரின் நிதிப் பிரச்சினை காரணமாக அவர்களின் பலவீனமான செயலாற்றுகை.
- **பர்கியூசன் வீதி கருத்திட்டத்தின்** ஒப்பந்தக்காரரின் நிதிப் பிரச்சினை காரணமாக அவர்களின் பலவீனமான செயலாற்றுகை.
- **மாதம்பிட்டிய கருத்திட்டம்** வளவில் சட்டவிரோதமாக வசிப்போர் இருத்தல்.

## 18.3.7 பிற விடயங்கள்

### 18.3.7.1 காணி முன்னேற்றலும் வசதியளிப்பும்

இந்த உட்கூறு மூலம் வசதியிற் குறைந்த குடியிருப்புகளின் குடும்பங்கள் இக்கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் புதிய மாடி வீட்டு அலகுகளுக்கு மாறியதன் பின்னர் விடுவித்துக் கொள்ளப்படும் காணிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் உச்சளவாக்கப்படும். இதன் மூலம் சுமார் 40 ஏக்கர்களை விடுவிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

### 18.3.7.2 மீள்குடியேற்ற செயல் திட்டம்

மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்கள் மீள் அபிவிருத்தி செய்யப்படுவதோடு, அப்பகுதிகளுக்கு பொது வசதிகளை வழங்குவதும் உள்ளடங்கும். குறைந்த வருமானம் பெறும் சமூகங்களின் வீடுகளின் தரத்தை முன்னேற்றுதலும் கொழும்பு காணிக் கையாளலின் வினைத்திறனை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

GOSL இன் காணி கொள்ளல் சட்டம் (LAA), 7 ஆம் இலக்க அரச ஆதன உரித்தை மீளப்பெறல் சட்டம், தேசிய தன்னார்வ மீள்குடியேற்றக் கொள்கை (NIRP), AIIB இன் சுற்றாடல் மற்றும் சமூக பணிச்சட்டம் (ESF), குறிப்பாக சுற்றாடல் மற்றும் சமூக நியமங்கள் (ESS2) தன்னார்வ மீள்குடியேற்றுவதற்கு அமைய கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மீள்குடியேற்றத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. கருத்திட்டத்தின் மீள்குடியேற்ற உட்கூறுக்கான தகுதி அளவுகோல்கள், நன்மைகள், நடபடிமுறைகள், நியமங்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த செயன்முறை இக்கொள்கைகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட மீள்குடியேற்றக் கொள்கைப் பணிச்சட்டத்தினுள் (RPF) காட்டப்பட்டுள்ளது. RPF இனால் தேவைக்கேற்ப மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களின் உரிமைகள், மக்களின் வருமானங்கள் மற்றும் வாழ்வாதாரத்தை மறுசீரமைக்கும் மூலோபாயம், நிறுவன ஏற்பாடுகள், மேற்பார்வை மற்றும் அறிக்கையிடல் பணிச்சட்டம், வரவுசெலவுத்திட்டத்தையும் நேரம் தவறாமல் அமுல்படுத்தும் கால அட்டவணையையும் விபரிப்பதற்காக மீள்குடியேற்றத் திட்டம் (RP) தயாரிக்கப்படுகிறது.

### 18.3.7.3 சமூக சேவை நடவடிக்கைகள்

இக்கருத்திட்டத்தின் உட்கூறு 03 இன் கீழ், கொள்திறன் விருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள், வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் மூலம் வீட்டுப் பயனாளிகளுக்கு வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கும் கருத்திட்டத்திற்கு ஏற்புடைத்தாகும்.

### 18.3.7.4 மதியுரைச் சேவை ஆட்சேர்ப்பு

- சமூக-பொருளாதார அளவை, மீள்குடியேற்ற செயல்திட்டத்தைத் தயாரித்தல் (RAP), அபிவிருத்தி சமூக வலுவூட்டுதல், கொள்திறன் முன்னேற்றுதல், வாழ்வாதார அபிவிருத்தி பற்றிய மதியுரைச் சேவை ஆட்சேர்ப்பு. உரிய காலப்பகுதியில் பணியைப் பூர்த்தி செய்தல்.
- வீடுகளை ஒதுக்குதல், உரிமைமாற்றுதல், முகாமை பற்றிய நகர மீளுருவாக்க கருத்திட்டத்திற்கு உரிய கொள்கை மீளாய்வும் முன்னேற்றலும். உரிய வீடமைப்புக் கொள்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- மீள்குடியேற்ற செயல்பாட்டுத் திட்டம் (RAP) சுயாதீன கருத்திட்டங்களின் மேற்பார்வையும் மதிப்பீடு பற்றிய மதியுரைச் சேவை ஆட்சேர்ப்பும். மதியுரைஞர்களின் விருப்பை வெளிப்படுத்துவதற்கு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் ToR பிரசுரிக்கப்பட்டுள்ளது.
- மீள்குடியேற்றத்திற்கான தகவல் தொழில்நுட்ப முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கு கருத்திட்ட மேற்பார்வை மென்பொருள்களையும் செய்நிரல்களையும் நிறுவுதல், இற்றைப்படுத்துதல் ஆகியவற்றுக்கான மதியுரைச் சேவை ஆட்சேர்ப்பு (SCURP) மற்றும் மதியுரைஞர் ஆட்சேர்ப்புக்குத் தேவையான ToR ஐத் தயாரித்து பூர்த்தி செய்தல்.

## 18.3.8 மேற்கொள்ளப்பட்ட உப பணிகள்

| தொ. இல. | திட்டப்படி விளைபயன் | சவால்கள் |
|---|---|---|
| 1 | ஒவ்வொரு வீட்டு அலகுக்கும் உரிய பயனாளிகளின் கோப்பொன்றை அமுல்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்ட வீட்டு பயனாளிகளுக்கு 4200 குடித்தன உசாவுகைகள் நடாத்தப்பட்டன. | அளவைக்காக பயனாளிகளின் ஆண் தரப்புடன் தொடர்புகொள்வது சிரமமான ஒரு கருமமாகும். |
| 2 | கூட்டுறவு சேமிப்புச் செயன்முறையை ஆரம்பிப்பதற்காக 10 சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளை நிறுவி பலப்படுத்துதல், வீட்டுத்திட்டத்தின் பொது வசதிகளை முகாமைசெய்தல் பற்றிய அடிப்படை அறிவு CBO ஊடாக உருவாக்கப்படுகிறது. (இதுவரை சிறு குழுக்கள் மூலம் 2.5 மி.ரூ. தொகை நிலையான வைப்பாக்கப்பட்டுள்ளது.) இது தவிர, 1.2 மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.) | புதிய அனுபவமொன்று காரணமாக முறைசார் நிதி முகாமைத்துவ செயன்முறையை அறிமுகப்படுத்துவது சிரமமானது.<br><br>நாளாந்த வருமான உருவாக்குகை நடவடிக்கைகள் காரணமாக சிறு குழுக்களாக சமுதாய பங்கேற்பைப் பெற்றுக் கொள்வது சிரமமானது. |
| 3 | கொழும்பு மற்றும் நாராஹேன்பிட்ட விளையாட்டு மைதானத்திலும் கொலம்பகே மாவத்தை புதிய வீடமைப்புத் தொகுதிகளின் நிலைக்குத்தான வீடமைப்பு வசதிகள் தற்போது நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தில் பயனாளிகளின் புதிய வீடுகள் பற்றி அறிவுறுத்துவதற்கு 20 பயணங்களை ஒழுங்குசெய்து அழைத்துச்செல்லப்பட்டனர். | பாதுகாப்பைக் கவனத்திலெடுத்து, நிர்மாண காலத்தினுள் வீடமைப்புத் தொகுதிகளைப் பார்வையிடுவதற்கு நடவடிக்கை எடுப்பது சிரமமானதாக இருத்தல்.<br><br>நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்திருப்பதால், சமூக தேவைகளின்படி கட்டிட நிர்மாணப் பணிகளை மாற்றுவது சிரமமானதாக இருத்தல். |
| 4 | தலைமைத்துவம், நிதி முகாமைத்துவம், குழுக்களைக் கட்டியெழுப்புதல், சமூகத் தலைவர்கள், திசைமுகப்படுத்திய குழுக்களை அடையாளம் காணல். பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ 18 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. | பயனாளிகளின் நாளாந்த வருமான உருவாக்குகை காரணமாக குறைந்த பங்கேற்பைக் காட்டுதல் |
| 5 | மனக்குறைக்கான 05 குழுக்களை அமைத்து அங்கத்தவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | சமூகப் பாதுகாப்பு, சமூக வலுவூட்டல், சமுதாயத்தின் அசல் அபிலாசைகள் பற்றி குறைந்தளவான அறிவு காணப்படல் |
| 6 | பங்கீடுபாட்டாளர்களிடமிருந்து 184 மனக்குறைகளுக்கான தீர்வுகளை வழங்குதல். | மேன்முறையீடுகளை எழுதுதலும் சமர்ப்பித்தலும் பற்றி கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் வழங்கப்பட்டுள்ள அறிவைப் பொருட்படுத்தாமல் பெரும்பாலும் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல். |
| 7 | விசேட மேன்முறையீட்டுக் குழு (SAC) ஊடாக 73 மேன்முறையீடுகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டன. | விசேட மேன்முறையீட்டுக் குழுவின் வழிகாட்டலுக்கமைய, சமூக விடயங்கள் தவிர்ந்த பௌதிக தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. |
| 8 | LGBTQ, SGBV (பாலியல்சார் பால்நிலை துன்புறுத்தல்), பாலியல் நோய்கள் (சமூக நோய்கள்), பால்நிலைக்கு துலங்கல் காட்டும் சேவைகள், பால்நிலை சமத்துவம் முதலியவற்றுக்கான 02 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. | LGBTQ, SGBV (பாலியல் ரீதியான பால்நிலை துன்புறுத்தல்), பால்நிலை சமத்துவம் தொடர்பான எதிர்ப்பு மற்றும் எதிர்மறையான கருத்துக்களைக் கொண்ட சமூகத்துடன் செயலாற்ற நேரிடுதல்.<br><br>நாளாந்த வருமான உருவாக்கம் காரணமாக ஆண் பங்கேற்பு குறைவடைதல். |

## 18.4 நகர்ப்புற கருத்திட்டங்களைத் தயாரிப்பதற்கு வசதியளித்தல் (UPPF)

### 18.4.1 அறிமுகம்

பேண்தகு சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் பேரில் நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அது, பின்வரும் இரண்டு கட்டங்களின் கீழ் இடம்பெறுகிறது:

கட்டம் 1 – நகரக் கருத்திட்டங்களைத் தயாரிக்கும் வசதி (UPPF). Loan No. SRI COL 3706 - 5.7 மில்லியன் டொலர் - கருத்திட்டத்தின் தயார்நிலையை அடைந்துகொள்வதற்கு (கருத்திட்ட சாத்தியவள ஆய்வுகள், விரிவான திட்டங்கள் மற்றும் பெறுகை அறிக்கைகளைத் தயாரித்தல்.)

கட்டம் 2 – பேண்தகு சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (STSDP) அமுல்படுத்துவதற்கான கடன் (கடன் ஒப்பந்தம் இன்னும் கைச்சாத்திடப்படவில்லை.) 30 மில்லியன் டொலர்.

நகர கருத்திட்டங்களைத் தயாரிப்பதற்கு வசதியளிக்கும் கடன் காலம் 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்தது. பேண்தகு சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான கட்டிடக்கலைத் திட்டங்கள், விரிவான திட்டங்கள், சமூக மற்றும் சூழல் பாதுகாப்பு அறிக்கைகள், செலவின மதிப்பீடுகள் மற்றும் பெறுகை ஆவணங்களைத் தயாரிக்கும் பணி இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

பேண்தகு சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இலங்கையின் மூலோபாய ரீதியான நான்கு நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட இக்கருத்திட்டம், பின்பு திருகோணமலை, தம்புள்ளை ஆகிய இரு முக்கிய சுற்றுலா சேரிடங்களின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதை நோக்காகக்கொண்ட முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு மாத்திரம் திருத்தப்பட்டுள்ளது. நிதியளிப்பு முறை திருத்தப்பட்டது. அதன்படி, 100 மில்லியன் அமெரிக்க டொலர்[1] நிதிக்காக சுற்றுலாத்துறை அபிவிருத்திக் கருத்திட்டத்தை அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிதியத்தின் கடன் இரண்டு வகைப்படும்.

(i) 70 மில்லியன் அமெரிக்க டொலர் கொள்கை அடிப்படையிலான கடன் (சுற்றுலா அமைச்சு உடன்பட்ட கொள்கை மறுசீரமைப்புகளை அமுல்படுத்துவதன் பேரில் நிதியளிக்கப்படுகிறது. இந்த உட்கூறு சுற்றுலா அமைச்சினால் அமுல்படுத்தப்படும்.) அத்துடன்

(ii) 30 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை, திருகோணமலையிலும் தம்புள்ளையிலும் சுற்றுலா மூலவாய்ப்புவளத்தை அதிகரிப்பதற்காக உத்தேச உப கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முதலீட்டு உட்கூறொன்றாக நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஊடாக அமுல்படுத்தப்படுகிறது.

பேண்தகு சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக பின்வரும் நோக்கங்களை அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகிறது:

- சுற்றுலாக் கைத்தொழில் மேம்பாட்டுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதலும் அபிவிருத்தி செய்தலும்.
- தொல்லியல் நினைவிடங்களைப் பேணுதலும் சுற்றுலா தொழில்முயற்சிக்கு அவற்றின் ஈர்ப்பைப் பெறுதலும்.
- தனியார் பொது பங்காண்மைகளை ஊக்குவித்தல்.
- பொருளாதார அபிவிருத்தியும் வருமான உருவாக்குகையும்.
- வறுமையை ஒழித்துக்கட்டல்.
- சமூக அபிவிருத்தி.
- சுற்றாடல் முகாமைத்துவம்.
- கொள்திறனைக் கட்டியெழுப்புவதன் மூலம் நிறுவன ரீதியாக பலப்படுத்தல்.

## 18.4.2 முன்னேற்றமும் வரவுசெலவுத்திட்ட தேவைகளும்

| கருத்திட்டப் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி.) | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப் பட்ட தொகை (ரூ.மி.) | 2024.12.31 அன்று உள்ளவாறான நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | திரண்ட பௌதிக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| நகரப்புற கருத்திட்டங்களைத் தயாரிப்பதற்கான வசதி (UPPF) | 1146.0 | 320.0 | 9.017 | 80 |

- நகர்ப்புற கருத்திட்டங்களைத் தயாரிப்பதற்கு வசதியளிக்கும் கடன் (UPPF) மூலம் தயாரிக்கப்பட்ட பேண்தகு சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உப கருத்திட்டங்களை முடுக்கி விட 2025 ஆம் ஆண்டில் 1700.16 மி.ரூ. தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தபோதும், சுற்றுலாத்துறை அமைச்சின் ஊடாக தயாரிக்கப்படவுள்ள கொள்கைத் தீர்மானமெடுத்தல் இதுவரை முடிவடையாமல் இருப்பதால், பேண்தகு சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான கடன் ஒப்பந்தம் செய்வது தாமதமடைந்துள்ளது. கடன் ஒப்பந்த நடவடிக்கைகள் 2025 முதல் காலாண்டினுள் முடிவடையும் பட்சத்தில், 2025 ஆம் ஆண்டில் பேண்தகு சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பக்கேஜ் 1, 2 ஆகியவற்றுக்கு ஒப்பந்தமளிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

## 18.4.3 முக்கிய அடைவுகள்

6 பக்கேஜ்களைக் கொண்ட கருத்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறு:-

பக்கேஜ் 1 : நவகம்மானய வாகனத் தரிப்பிடங்களை அபிவிருத்தி செய்தல், சியவஸ் மாவத்தை அபிவிருத்தி, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடங்களை அபிவிருத்தி செய்தல், நூதனசாலையை அபிவிருத்தி செய்தல், சீகிரியா குளத்தை அபிவிருத்தி செய்தல்.

பக்கேஜ் 2 : Heritage Trail (3400 mt) அபிவிருத்தி செய்தல், மாப்பாகல தொல்லியல் காப்பிடத்தை முன்னேற்றுதல்.

பக்கேஜ் 1, பக்கேஜ் 2 ஆகியவற்றின் கட்டிடக்கலைத் திட்டங்கள், விரிவான திட்டங்கள், சமூக மற்றும் சூழல் பேணல் அறிக்கைகள், செலவின மதிப்பீடுகளுக்கும் பெறுகைக்கும் அவசியமான ஆவணங்களைத் தயாரித்து பெறுகையை ஆரம்பிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உடன்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

பக்கேஜ் 3 : ∴போர்ட் ∴பெட்ரிக் கோட்டையைப் புனரமைத்தல், கண்ணியா வெந்நீரூற்றுக் கிணறுகளைப் பாதுகாத்தலும் புராதன கட்டிடங்களை (Colonial Building) அபிவிருத்தி செய்தலும்.

பக்கேஜ் 4: Dutch bay, Back bay கடலோரங்களை அபிவிருத்தி செய்தல்.

பக்கேஜ் 5: கலேவெல குளம், சிறுவர் பூங்கா ஆகியவற்றை அபிவிருத்தி செய்தலும் உணவகத்தை அமைத்தலும்.

பக்கேஜ் 6: திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தை மேம்படுத்துதல் - தம்புள்ளை சாத்தியவள அறிக்கை, சமூக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அறிக்கைகளும் அடிப்படை மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த பக்கேஜ்களுக்கு எண்ணக்கரு ரீதியான திட்டவமைப்புகளும் (Concept Designs), சமூக மற்றும் சூழல் பாதுகாப்பு அறிக்கைகளும் அடிப்படை மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 18.5 நகர புத்துயிர்ப்புக் கருத்திட்டம்

### 18.5.1 அறிமுகம்

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படும் நகர புத்துயிர்ப்புக் கருத்திட்டம் கொழும்பு நகரத்தை முன்னிலைப்படுத்தி அமுல்படுத்தப்படுவதுடன், அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம்பெறுவோரின் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் நிரந்தர புதிய வீட்டு அலகுகளை வழங்குவதன் மூலம் அவர்கள் சமூக, திட்டம்சார் மற்றும் பொருளாதார ரீதியாக மேம்படுத்தப்படுகின்றனர். அதன்படி, 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அளவையின்படி அடையாளம் காணப்பட்ட கொழும்பு நகரின் சுமார் 68,812 குறைந்த வருமானம்பெறும் குடும்பங்களுக்கு 50,000 வீட்டு அலகுகளை அமைப்பதை நோக்காக்கொண்டு இந்த நகர புத்துயிர்ப்புக் கருத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்கீழ் தற்போது 15,768 வீட்டு அலகுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டு வீட்டுப் பயனாளிகளைக் குடியமர்த்தி முடிக்கப்பட்டுள்ளது.

### தொலைநோக்கு

நகர்ப்புற வசதியிற் குறைந்த குடியிருப்புகளின் பிரசைகளின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்காக நவீன வீட்டு அலகுகளில் மீள்குடியேற்றுவதன் மூலம் கொழும்பு நகரிலுள்ள குடிசைகள் முதலிய வசதியிற் குறைந்த வீடுகளை அகற்றுதல்.

### நோக்கங்கள்

நகர்ப்புற வசதியிற் குறைந்த குடியிருப்புகளில் வசிப்பவர்களை நிரந்தர நவீன வீட்டு அலகுகளில் குடியமர்த்துவதன் மூலம் நகரிலுள்ள வசதியிற் குறைந்த வீடுகளை அகற்றுதல்.

### 18.5.2 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் இன்றைய முன்னேற்றம

| தொ. இல. | கருத்திட்டம் | அடிப்படை மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.) | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதிஒதுக் கீடு 2024 (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 | | பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | % | |
| 01 | 601 தோட்ட வீடமைப்புக் கருத்திட்டம் (450 வீட்டு அலகுகள்) | 3,358.59 | 450 | 447.19 | 3,251.78 | 96% | 100% |
| 02 | கொலொன்னாவை வீடமைப்புக் கருத்திட்டம் (336 வீட்டு அலகுகள்) | 3,303.64 | 336 | 423.00 | 2,915.89 | 88% | 99.9% |



கொலொன்னாவை வீடமைப்புக் கருத்திட்டம்



கொலொன்னாவை 601 தோட்ட வீடமைப்புக் கருத்திட்டம்

### 18.5.3 எதிர்நோக்கிய சவால்கள்

ஒப்பந்தக்காரர்களின் பலவீனங்கள் காரணமாக இதற்கு முன்னர் கொலம்பகே மாவத்தை, டொரிங்டன் மாவத்தை மற்றும் கிம்புலா எல கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்த நேரிட்டது. அக்கருத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பது காணப்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தாததன் பேரில் தாமதமடைந்தது.

### 18.5.4 அடைந்த வெற்றிகள்

ரன்தொர உறுமய உறுதிகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் மூலம் நகர புத்துயிர்ப்புக் கருத்திட்டத்தின் வீட்டுப் பயனாளிகளுக்கு உறுதிகளை வழங்கும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 3 கருத்திட்டங்களுக்கு (மெட்ரோ ஹோம்ஸ், மிஹிந்துசெவன, சிறிசர உயன) உரிய 167 உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீட்டுப் பயனாளிகளின் உறுதிகளை வழங்குதல், அவர்களுக்கு உரிய தேவைகள் நிறைவேறுவதன் அடிப்படையில் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படவுள்ளது. ஏனைய கருத்திட்டங்களின் உறுதிகளை வழங்குவதற்குத் தேவையான அனுமதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 18.5.5 2025 செயல் திட்டம்

| முக்கிய விடயத்துறை | கருத்திட்டம் | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிமூலம் | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புக் கருத்திட்டங்கள் | கொலம்பகே மாவத்தை (615) | 1,063.70 | பொதுத் திறைசேரி நிதியம் | 45% |
| குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புக் கருத்திட்டங்கள் | டொரிங்டன் மாவத்தை (115) | 261.90 | பொதுத் திறைசேரி நிதியம் | 20% |
| குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புக் கருத்திட்டங்கள் | கிம்புலா எல (479) | - | பொதுத் திறைசேரி நிதியம் | - |

## 18.6 கொழும்பு தலைநகரை அண்டிய திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம்

### 18.6.1 அறிமுகம்

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நகர்ப்புற திண்ம கழிவுப்பொருள்களை வெளியேற்றும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு துப்புரவேற்பாட்டு கழிவுப்பொருள் சேகரிப்புக் கிடங்கொன்றின் (sanitary landfill) அவசர தேவையையும் இன்றியமையாமையையும் கவனத்திலெடுத்து புத்தளம் அறுவக்காலு பகுதியை அண்டிய கட்டமைப்பொன்றுடன்கூடிய துப்புரவேற்பாட்டு கழிவுப்பொருள் சேகரிப்புக் கிடங்கொன்றை நிறுவும் பணி அரசாங்கத்தினால் இந்த அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டது.

கருத்திட்டத்தில் பின்வரும் 4 பக்கேஜ்கள் அடங்கும்:

1. பக்கேஜ் A (களனி மற்றும் அறுவக்காலு கழிவுப்பொருள் இடமாற்ற நிலையத்தை அமைத்தல்)
2. பக்கேஜ் B (அறுவக்காலு துப்புரவேற்பாட்டு கழிவுப்பொருள் சேகரிப்புக் கிடங்கை அமைத்தல்)
3. பக்கேஜ் C (புகையிரதப் பாதைகளின் நீடிப்பும் இணைப்புப் பாதைகளை அமைத்தலும்)
4. பக்கேஜ் D (புகையிரத உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள், ஏனைய முன்னேற்றல்களைக் கொள்வனவு செய்தல்)

மேற்படி A,B, C பக்கேஜ்களின் திட்டமிடல் மற்றும் நிர்மாண ஒப்பந்தம் சைனா ஹாபர் இன்ஜினிரிங் கம்பனி லிமிட்டட், சவுத்வெஸ்ட் முனிசிப்பல் இன்ஜினீரிங் அன்ட் ரிசர்வ் இன்ஸ்ரிரியூட் ஒவ் சைனா ஆகிய நிறுவனங்களுக்கு 2017.12.29 ஆம் திகதி 90,482,259.16 அமெரிக்க டொலர், இலங்கை நாணயத்தில் ரூ.1,622,936,211.10 (பெறுமதிசேர் வரி/ வரிகள் நீங்கலாக) மொத்தத் தொகைக்கு வழங்கப்பட்டது. D பக்கேஜில் 94 கொள்கலன் பெட்டிகள், 4 புகையிரத என்ஜின்கள், 34 புகையிரதப் போக்குவரத்து பெட்டிகள் ஆகியவற்றின் கொள்வனவு உள்ளடங்கும்.

#### நோக்கு

சுத்தமான, சிறந்த ஒரு சூழலுக்காக பேண்தகு கழிவுப்பொருள் முகாமைத்துவ முறைமையொன்றை ஏற்படுத்தல்.

#### பணி

தரப் பாதுகாப்பு, மீள்நிறுவுதல் மற்றும் முன்னேற்றுதல், பொதுச் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புதல், சூழல் ஒருமைப்பாடு, பொருளாதார சாத்தியப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஏனைய வசதிகளுடன்கூடிய விஞ்ஞான ரீதியான கழிவுப்பொருள் சேகரிப்பு தேக்கத் தொகுதியொன்றை அமைத்தல்.

#### நோக்கங்கள்

பாரிய கொழும்பு வலயத்திற்கும் ஏனைய மூலவாய்ப்புவளமுள்ள உள்ளூர் அதிகார சபைகளுக்கும் பொருளாதார ரீதியாக மூலவாய்ப்புவளமுள்ள சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய, சுற்றாடல் நட்புறவான, நீண்டகால, பேண்தகு மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவத் தொகுதியொன்றை அமைத்தல்.

### 18.6.2 2024 முன்னேற்றம்

தற்போது கருத்திட்டம் 98% பௌதிக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. களனி முதல் அறுவக்காலு வரை கழிவுப்பொருள்களை எடுத்துச் செல்வதற்கு 4 புகையிரத என்ஜின்களும் 94 கொள்கலன் பெட்டிகளும் ஏலவே இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. சாத்தியவள ஆய்வுக்கமைய 34 புகையிரத சரக்குப் பெட்டிகளைக் கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

| # | கருத்திட்டம் | கருத்திட்ட காலப்பகுதி | TEC (ரூ.மி.) | நிதிஒதுக்கீடு – 2024 (ரூ.மி.) | மொத்த முன்னேற்றம் 31.12.2024 வரை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பௌதிக (%) | நிதி (ரூ.மி.) |
| 1 | கொழும்பு தலைநகரை அண்டிய திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம் | 2017 சனவரி – 2025 திசெம்பர் | 33,237.76 (USD 130) | 5,500 | 98.7% | 1895.61 |
| மொத்தம் | | | **33,237.76** | **5,500** | **98.7%** | 1895.61 |

**களனி கழிவுப்பொருள் இடமாற்ற நிலையம**



கழிவுப்பொருள் இடமாற்றக் கட்டிடம்



கழிவுநீர் சுத்திகரிப்பு

**அறுவக்காலு கழிவுப்பொருள் இடமாற்ற நிலையம்**



கிறேன்ட் கிறேன் பாரந்தூக்கி அமைவிடம்



ஊழியர் ஓய்வறை

**அறுவக்காலு துப்புரவேற்பாட்டு கழிவுப்பொருள் சேகரிப்புக் கிடங்கு**



துப்புரவேற்பாட்டு கழிவுப்பொருள் சேகரிப்புக் கிடங்கு



கழிவுநீர் சுத்திகரிப்புத் தொகுதி

## 18.6.3 2025 திட்டம்

| # | கருத்திட்டம் | கருத்திட்ட காலப்பகுதி | TEC (ரூ.மி.) | நிதித் தேவை – 2025 (ரூ.மி.) |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு தலைநகரை அண்டிய திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவ கருத்திட்டம் | 2017 சனவரி – 2025 திசெம்பர் | 33,237.76 | 5100.00 |
| மொத்தம் | | | 33,237.76 | **5100.00** |

## 18.7 சீன அரசின் உதவியின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடுகளை வழங்கும் கருத்திட்டம்

### 18.7.1 அறிமுகம்

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படும் நகர்ப்புற புத்துயிர்ப்புக் கருத்திட்டத்தின் நீட்சியாக சீன அரசின் கொடையாக (Grant) 1996 வீட்டு அலகுகளை (குறைந்த வருமானம் பெறுவோருக்கான 4 வீட்டுக் கருத்திட்டங்களும் கலைஞர்களுக்கான 1 கருத்திட்டமும்) நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 100,000$m^2$ மொத்த வசிப்பிட பரப்பளவைக் கொண்டிருப்பதுடன், மொத்த வசிப்பிட பரப்பளவு சுமார் 160,000$m^2$ ஆகும். சீன அரசின் கொடை 552 மில்லியன் சீன யுவான்கள் (RMB) ஆகும். அரசின் உள்நாட்டு முதலீடு 8,128.91 மில்லியன் ரூபா (22 பில்லியன் ரூபா) ஆகும்.

### 18.7.2 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் இன்றைய முன்னேற்றம்

| தொ. இல. | கருத்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | | பயனாளிகள் | நிதிஒதுக்கீடு 2024 | | நிதிசார் முன்னேற்றம் 2024.12.31 | | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வெளிநாட்டு மி.ரூ. | உள்நாட்டு (ரூ.மி.) | | வெளிநாட்டு மி.ரூ. | உள்நாட்டு (ரூ.மி.) | வெளிநாட்டு மி.ரூ. | உள்நாட்டு (ரூ.மி.) | |
| 01 | பேலியகொட வீடமைப்புக் கருத்திட்டம் (615 அலகுகள்) | 135.67 | 2,575.84 | 615 | 3000.00 | 200.00 | 20.35 | 0.47 | 7.5% |
| 02 | தெமட்டகொட வீடமைப்புக் கருத்திட்டம் (586அலகுகள்) | 126.74 | 2,204.41 | 586 | | | 19.01 | 12.52 | 7.5% |
| 03 | மொறட்டுவை வீடமைப்புக் கருத்திட்டம் (575 அலகுகள்) | 141.13 | 2,585.31 | 575 | | | 21.17 | 142.61 | 7.5% |
| 04 | மஹரகம வீடமைப்புக் கருத்திட்டம் (112 அலகுகள்) | 24.72 | 422.42 | 112 | | | 3.71 | 0.52 | 7.5% |
| 05 | கொட்டாவ வீடமைப்புக் கருத்திட்டம் (108 அலகுகள்) | 38.25 | 340.90 | 108 | | | 5.74 | 0.55 | 7.5% |


மொறட்டுவை வீடமைப்புக் கருத்திட்டம்


பேலியகொட வீடமைப்புக் கருத்திட்டம்


தெமட்டகொட வீடமைப்புக் கருத்திட்டம்

## 18.7.3 எதிர்நோக்கிய சவால்கள்

மேற்குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்கு குறித்த காணிகளில் காணப்பட்ட நிலைமைகளை நிர்மாணிப்புகளுக்கு ஏற்ற நிலைக்குக் கொண்டுவருவதற்காக காணி மீட்டல் (பேலியகொடை), பற்றரி கழிவுகளை அகற்றுதல் (மொறட்டுவை), சட்டவிரோத குடியிருப்பாளர்களை அகற்றுதல் (தெமட்டகொடை, கொட்டாவை) தற்போது காணப்படும் நிர்மாணிப்புகளை அகற்றுதல் (மஹரகம) ஆகியவற்றுக்கு காலம் எடுத்தல். அதேபோல் மொறட்டுவை, கொட்டாவை மற்றும் தெமட்டகொடை கருத்திட்டப் பகுதிகளுக்கு பல்வேறு திறத்தவர்கள் மூலம் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், அவற்றையும் முகாமை செய்துகொண்டு கருத்திட்டங்களை அமுல்படுத்தும் நிலைமைக்கு மாற்றியமைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 18.7.4 அடைந்துகொண்ட வெற்றிகள்

சீன அரசின் கொடையைப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு கலந்துரையாடல்கள், வெளிக்கள சோதிப்புகள் நடாத்தப்பட்டன. அதன்படி, சீன அரசின் முகவராண்மையுடன் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2023.11.27 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. அதற்காக 2024.05.14 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, வீடுகளை அமைப்பது தொடர்பில் விலைகோரல் குறுகிய பட்டியல்படுத்திய சீன கூறுவிலைதாரர்கள் மூலம் விலைகளைக் கோரி 3 பக்கேஜ்களின் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்டுள்ளது. அதாவது,

பக்கேஜ் 1 – மொறட்டுவை மற்றும் கொட்டாவை வீடமைப்புத் திட்டங்கள்

பக்கேஜ் 2 – மொறட்டுவை மற்றும் மஹரகம வீடமைப்புத் திட்டங்கள்

பக்கேஜ் 3 – பேலியகொடை வீடமைப்புத் திட்டம்

என்ற வகையில் அடிக்கல் நடப்பட்டு 2024.12.27 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

## 18.7.5 2025 ஆம் ஆண்டின் செயல் திட்டம்

| முக்கிய விடயத்துறை | கருத்திட்டம் | நிதி இலக்கு | | மூலம் | இலக்கிட்ட பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| | | வெளிநாட்டு (ரூ.மி.) | உள்நாட்டு (ரூ.மி.) | | |
| குறைந்த வருமானம் பெறுவோர் | பேலியகொட | 2,678.43 | 1,250.25 | சீன கொடை + பொது நிதி | 46.68% |
| குறைந்த வருமானம் பெறுவோர் | தெமட்டகொட | 2,502.25 | 982.85 | சீன கொடை + பொது நிதி | |
| குறைந்த வருமானம் பெறுவோர் | மொறட்டுவை | 2,786.29 | 1,427.59 | சீன கொடை + பொது நிதி | |
| குறைந்த வருமானம் பெறுவோர் | மஹரகம | 488.05 | 244.78 | சீன கொடை + பொது நிதி | |
| துறைபோந்த கலைஞர்களுக்காக | கொட்டாவ | 755.10 | 239.26 | சீன கொடை + பொது நிதி | |

# 19 அமைச்சின் கீழ் அமுலில் உள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

## 19.1 நீர் வழங்கல் பிரிவு தொடர்பில் அமுலில் உள்ள கருத்திட்டங்கள்

### அறிமுகம்

நீர் என்பது, மனிதனின் மூலம் மற்றும் நிலைத்திருத்தலை தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாகும். எனவே, ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2010 ஆம் ஆண்டு பாதுகாப்பான நீருக்கான பிரதேவசம் மனிதனின் அடிப்படை உரிமை ஒன்றாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மேலுள்ள உரிமையை மென்மேலும் உறுதி செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 17 இல் 06 ஆவது நோக்கமாக 'யாவருக்கும் பாதுகாப்பான குடிநீருக்கான பிரவேசம் மற்றும் போதியளவு துப்பரவேட்பாட்டு வசதிகளை உறுதி செய்வதன்' மூலம் இதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது (NWSDB) இலங்கையில் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் துப்பரவேட்பாட்டுச் சேவைகளுக்கான வசதிகளை செய்துகொடுக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள முக்கிய நிறுவனம் என்ற வகையில் நகர மற்றும் பகுதியளவிலான நகர்ப் பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குழாய் நீர் மற்றும் குழாய் மூலம் மலசல கழிவகற்றல் வசதிகளை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது. கிராமிய பின்தங்கிய பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகம் மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகளை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு (DNCWS) பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

### நோக்கு

யாவருக்கும் நிலைபேறான குடிநீர் விநியோகம் மற்றும் துப்பரவேட்பாடு

### செயற்பணி

நம்பகமான நீர் வழங்கல் மற்றும் துப்பரவேட்பாட்டுச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் பிரவேசம் மற்றும் திருப்தியை உறுதி செய்தல்.

### நீர் வழங்கல் பிரிவின் செயற்பணி (2024 .12.31 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அமைய)

- சகல பிரசைகளுக்கும் சுத்தமான குடிநீர் பெற்றுக் கொடுக்கத் தேவையான சூ நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நீர் வழங்கல் சேவைகள், மலசல கழிவகற்றல் கட்டமைப்பு மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகளை பரிசோதித்தல், அவற்றுக்கான புதிய திட்டங்களை தயார் செய்தல், அமுல்படுத்தல் மற்றும் அவற்றைப் பராமரிப்புச் செய்தல்.
- கிராமிய வாவிகள் மற்றும் நீர்நிலைகள் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்பை ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் நீரின் பாதுகாப்பு மற்றும நகர்ப்புற நீர் வழங்கல் திட்டங்களை மேம்படுத்தல்.
- குடிநீர் விநியோக கட்டமைப்பில் நீர் விரயமாவதை தடுத்தல்.
- சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களை வினைத்திறன்மிக்கதாக்க மற்றும் முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
- கிராமிய மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கலை உறுதி செய்வதற்கு நீர் வழங்கல் கருத்திட்டங்களை பராமரிப்புச் செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
- கிராமிய பிரதேசங்களில் குடீநீர் வழங்கலை உறுதிப்படுத்தல், நீர் நிலைகளை அபிவிருத்தி செய்தல்.

